Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

பக்கங்கள்:16 விலை:12.00

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி -07 23 - 08 - 2002 வெள்ளிக்கிழமை ஓசை 186

லாலா சோப் சன்சயின் சோப்

எமது வன்னி மண்ணில்
எல்லா இடத்திலும்
சகல கடைகளிலும்
விற்பனையாகின்றது.

ஒன்றின் விலை - 13.00

(சி.6999)

லாலா சோப் தொழிலகம்
அச்சுவேலி


பிரமுக அறிமுகம்
பக்கம் - 03


தொலை தொடர்பு நிலையமும்..
பக்கம் - 05


தொடரும் வெகுஜன போராட்டங்கள்
பக்கம் - 06


பரீட்சையில் வெல்வது எப்படி
பக்கம் - 12

## லண்டனில் நோர்வே தூதுக்குழு பாலாவுடன் நேற்று சந்திப்பு



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை எரிக் சொல்கெய்ம் தலைமையிலான நோர்வே தூதுக்குழு நேற்று லண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

அடுத்த மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதான பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிப்பதாகவே இந்தச் சந்திப்பு இடம் பெற்று வருகின்றது. சமாதான பேச்சுவார்த்தைக்கான காலை அட்டவணையையும் நிகழ்ச்சி நிரலையும் தயாரிப்பது தொடர்பான இறுதி முடிவும் இந்தச் சந்திப்பின் போது எடுக்கப்படும் என நம்புவதாக நோர்வே தரப்பு அறிவித்திருந்தது.



## வீரவணக்கம்

முல்லை. மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடி மின்னல் தாக்கியதில் தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

தமிழீழ தேசிய துணைப் படைவீரர் இராஜேஸ்வரி (இராமநாதன் இராஜேஸ்வரி குரவயல் உடையார்கட்டு தெற்கு உடையார்கட்டு )

என்பவரே சாவடைந்த வராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### - போரில் பாதிக்கப்பட்ட -

# வியட்நாம் கிராமம் போன்று யாழ்ப்பாணம் காணப்படுகின்றது

### அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர் மிரேஜ்

(யாழ்ப்பாணம்)

வியட்நாம் கிராமங்களில் ஏற்பட்ட அழிவுகளை இந்த இடங்கள் நினைவுபடுத்தியது போன்று வேறு எதுவுமே நினைவு படுத்தவில்லையென நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர் மிரேஜ் தெரிவித்துள்ளார். பிரச்சினைகளை குண்டுகள் பீரங்கிள் மூலம் தீர்ப்பதை விட்டு அமைதி, சமாதான வழிகளில் தீர்க்க வேண்டும் எனவும் அவர் தொவித்துள்ளார்.

சிறிலங்காவுக்கு தொழில் நுட்ப உதவிகளை அமெரிக்கா வழங்கும் என்றும் சிறிலங்காவின் பாதுகாப்புக்கும் அமெரிக்கா தொடர்ந்து உதவும் என்றும் அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் கூறினார்.

அத்துடன் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் பாட வேண்டும் எனவும் அத்தகைய சமாதான முயற்சிக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதாரவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து நேற்றுக்காலை 9.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்த அவர் அங்கிருந்து விமானம் மூலம் நேரடியாக பலாலிக்குச் சென்று விசேட உலங்கு வானூர்தி மூலம் சாவகச்சேரிக்கு சென்றார்.

அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட அவர் நகரம் வியட்நாம் போரில் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்தைப் போன்று காட்சியளிப்பதாக கூறியுள்ளார்.அங்கிருந்து வாகனம் மூலம் சரசாலைக்குச் சென்ற அமெரிக்க இராஜங்க அமைச்சர் அங்கு அமெரிக்க நிபுணர் குழுவினரால் நடாத்தப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

இதனையடுத்து சாவகச்சேரிக்கு திரும்பிய பின்னர் முகாமாலைப் பகுதியில் படையினரின் முன்னணி நிலைகளுக்குச் சென்று படை அதிகாரிகளுடன் அவர் உரையாடியிருக்கின்றார். இதன்போதே படையினருக்கு தொழில்நுட்ப உதவி களை அமெரிக்கா விரைவில் வழங்கும் என்று அவர் உறுதியளித்திருக்கின்றார்.

இதனையடுத்து யாழ். நகருக்குத் திரும்பிய அமெரிக்க இராஜங்க அமைச்சர் யாழ். ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

அமெரிக்க அமைச்சருடன் சிறிலங்காவின் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ ஆகியோரும் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பியுள்ள அமெரிக்க இராஜங்க அமைச்சர் இரவு 7.30 மணியளவில் அலரிமாளிகையில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிர மசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதன்பின்னர் நேற்றிரவு இந்தியாவுக்கு அவர் செல்லவுள்ளதாகவும் அங்கிருந்து பாகிஸ்தான், சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கும் திட்டமிட்டிருந்தது.

அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொழும்புக்கு விஜயம் செய்யாமல் யாழ்ப்பாணத்திற்கு முதலில் சென்றமைக்கு ஜே.வி.பி. கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

## அரசு விடுதலைப்புலிகளுக்கு நாட்டை தாரைவார்த்து கொடுக்கிறது

### ஜே.வி.பி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு சிறிலங்கா அரசு நாட்டை தாரை வார்த்துக் கொடுக்கப்போவதாகவும் இதற்கு எதிராக நாட்டு மக்களை அணிதிரளுமாறும் ஜே.வி.பி அழைப்பு விடுத்திரு க்கின்றது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் ஏற்படாது எனவும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு வதன் மூலம் தமிழீழம் அமையவுள்ள தாகவும் ஜே.வி.பி. யின் அரசியல் குழு தனது ஆதங்க த்தை குறிப்பிட்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகளினால் சட்ட விரோதமாக நீதிமன்றம், பொலிஸ் மற்றும் வங்கி என்பவற்றை இயக்கிவருவதாகவும் அவர்கள் ஒரு போதும் தமிழீழக் கோரிக்கையை கைவிடப் போவதில்லையெனவும் ஜே.வி.பி மேலும் கூறியுள்ளது.


## புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும்

### புத்திஜீவிகள் கோரிக்கை

விடுதலைப்புலிகளின் தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் தமிழ் மக்களின் தாயக கோட்பாட்டையும் சுயநிர்ணய உரிமையையும் அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். மாவட்ட புத்திஜீவிகளை 1.00 மணியளவில் அமெரிக்க ராஜாங்க பிரதி யமைச்சர் யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார்.

இந்தச்சந்திப்பின் போது இந்தக்கோரிக்கைகளை அவர்கள் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சரிடம் விடுத்திரு க்கின்றார்கள்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

# எதிர்பார்க்கும் இலக்குகளும் அரசியல் வியூகங்களும்

சிறிலங்காவில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஆட்சிக்கும் அதன் மீது மேலாதிக்கம் செலுத்தவும் விரும்பினால் அந்த ஆட்சியையே கலைக்க வல்ல நிறைவேற்று அதிகாரவலுவினைக் கொண்ட சனாதிபதியின் அகங்காரத்திற்கும் இடையிலான போட்டி நாளுக்கொருவடிவம் கொண்டதாக வளர்ந்துகொண்டே இருக்கிறது.

ரணிலின் ஆட்சி அமைந்து, எட்டு மாதங்களை எட்டியுள்ள நிலையில் சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு என்பது இன்னமும் கருக்கொள்ளாத ஒன்றாகவே உள்ளது.

பதவியேற்றது முதல் ரணிலின் அரசும், சனாதிபதியின் அதிகாரத்தொனியும் ஒத்திசையும் வாய்ப்பே இல்லாது போய்விட்டது.

அமைச்சுக்களைப் பங்கீடு செய்வதில் ஆரம்பித்த கருத்து முரண்பாடு அவ்வப்போது தணிவது போன்று தோன்றினாலும் நீறிழந்த நெருப்பாக அது கனன்றுகொண்டே இருக்கிறது.

அதுவும் போர்நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் கனன்று கொண்டிருக்கும் நெருப்பிலிருந்து இடைக்கிடை சுவாலை தோன்றவும் ஆரம்பித்துவிட்டது.

சமாதான முயற்சிகளின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மெதுவாக இருந்தாலும்கூட வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவது ஐக்கிய தேசி முன்னணிக்கு மக்களின் ஆதரவு பெருகக் காரணமாகிவருகிறது.

இந்த நிலையில் தாய்லாந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து இடைக்கால அரசு ஒன்று வடக்கு கிழக்கில் ஏற்படுமானால் அது சந்திரிகாவிற்கும் பொ.ஐ.முன்னணிக்கும் அரசியல் ரீதியில் பெரும்தோல்வியாகவும், மக்களின் செல்வாக்கில் பெரும் பின்னடைவாகவும் இருக்கும் என்ற விடையம் சந்திரிகாவையும் அவரது ஆட்களையும் குழப்பத்திலும்,விரக்தியிலும் ஆழ்த்திவருகிறது. என்பது தெளிவான விடையமாகும்.

இதன்காரணமாகவே பேச்சுவார்த்தைகள் ஏற்பாடு தடுக்க, அல்லது அதனை ஏதோவொரு குயுத்தியைக் கையாண்டு குழப்ப, காலதாமதப்படுத்தி இழுபறி நிலையில் வைத்திருக்க சந்திரிகா அவ்வப்போது மேற்கொண்டு வரும் மூலோபாயங்கள் இந்த ஆண்டு முடியும் வரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க விடக்கூடாது என்பதையே இலக்காகக் கொண்டவையாகும்.

ஓராண்டு கழிந்த பின்னர்அரசைக் கலைக்கும் நிறைவேற்று அதிகாரத்தின் விதிகளை ஏதோவொரு வகையில் பயன்படுத்தி, ஏதாவதொரு காரணத்தைக் காட்டி, ரணிலின் ஆட்சியை கலைத்துவிடும் திட்டத்தையே சந்திரிகா மனதில்கொண்டு செயல்படுகிறார் என்பதும் மிகத் தெளிவான விடயமாகும்.

ஆனால் இன்றைய சூழலின் யதார்த்தத்தை நன்கு புரிந்துகொண்டவரான ரணில் தனது அரசியல் சதுரங்க நகர்வுகளை மிகவும் நுணுக்கமாக மேற்கொண்டு சந்திரிகாவை பல்வேறு வகையிலும் திணறடித்து வருவதுடன், இதையும் மீறி சந்திரிகா ஆட்சியைக் கலைக்க முற்படுவாரேயானால், அதற்கு முன்னர்தானே ஆட்சியைக் கலைத்துவிட்டு மீண்டும் மக்களின் முழுமையான ஆணையை, சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைக்காக கோரி தேர்தலை எதிர்கொள்ளத்தயாராகவும் இருந்துவருகிறார்.

எது என்னவானாலும் அமைதிப் பேச்சு வார்த்தைக்கான நாட்குறிப் பிடப்பட்டுவிட்ட நிலையில் சந்திரிகா அதற்கு எதிராக எந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும் ரணிலே சந்திரிகாவின் ஒத்துழைப் பின்றி சமாதான நகர்வுகளை முன்னெடுக்க முடியாநிலையில் ஆட்சியை தானே கலைத்தாலும் அடுத்து வரக் கூடியதான தேர்தல் வெற்றியானது ரணிலை இன்னும் பலமுள்ளவராகத்தான் மாற்றும் என்பதில் சந்தேகமேயில்லை.

பொ.ஐ.முன்னணிக்குள்ளேயான உட்கட்சிப் பூசல்கள் அதி கரித்துள்ள நிலையில் , கடந்த அவர்களின் ஆட்சிக்கால ஊழல்கள் மோசடிகள் யாவும் அடுத்தடுத்து வெளிவந்துகொண்டிருக்கும் சூழலில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி ஒரு வரலாற்றுத் தோல்வியை மிகவும் அவமானத்துடன் சந்திக்க வேண்டிய நிலை மற்றொரு தேர்தல் நடைபெற்றால் ஏற்படும் என்றே கூறவேண்டும். இதேவேளை மற்றொரு தேர்தல் என்பது இப்போது துளிர்த்திவரும் சமாதான நடவடிக்கைகள் ஒரு தேக்க நிலையை எட்டவே வழிவகுக்கம் என்பதும், தேர்தல் காலத்தில் இந்த சமாதான நடவடிக்கைகள் எவ்வாறு ஆளும் எதிர்க்கட்சியினரால் பிரசாரம்செய்யப்படும் என்பதைக் குறித்தே அதன் எதிர்காலமும் அமையும். இதனால் ஆட்சியை வேறுவழிகளில் கைப்பற்ற சந்திரிகா முயல்வதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இதனொரு வடிவமே கடந்த வாரங்களில் பரவலாக அடிபட்ட'சதி' முயற்சி தொடர்பான செய்திகளின் நோக்கம் என்றும் கூறமுடியும். இது உண்மையோ பொய்யோ இந்தச் செய்தி அம்பலமாகி விட்டது அல்லது அம்பலப்படுத்தப்பட்டு விட்டது.

இந்தநிலையில் எதிர்வரும் டிசம்பரில் பொ.ஐ.முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என அறிக்கை விட்டுள்ளார். சரத்அமுனுகம அதற்குஆக 113பேரின் ஆதரவு மட்டுமே தேவை என்றும் கூறியுமுள்ளார்.

எதுவானாலும் சிறிலங்காவில் நடைபெறும் சந்திரிகா-ரணில் இரட்டை ஆட்சியின் புரிந்துணர்வு அற்ற நிலையில் ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு சுமுகமாக தீர்வு காண வேண்டும் எனப் பேரினவாதிகள் வலியுறுத்தி வருவது கேலிக்குரியதாகவும் சாத்திய மற்றதாகவுமே உள்ளது.

எனினும் ரணில் தனக்கான வெளிநாட்டு ஆதரவு என்ற வலுவைப் பயன்படுத்தி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார வலுவை அடக்கி வைக்கும் வியூகங்களை அமைத்து வருவதாகவும், இந்த வலுவைப் பயன்படுத்தியே சமாதான நகர்வுகளை மேற்கொள்வதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எதுவானாலும் சிறிலங்காவில்-சமாதானம் ஏற்பட வேண்டுமென சிங்கள மக்களும், ஏதாவது ஒரு தீர்வு ஏற்பட்டுவிட வேண்டும் என உலகமும் தேர்தல் வரவேண்டும் என அரசியல்வாதிகளும் விரும்புகிறார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் தங்கள் இறைமை, உரிமை, பாரம்பரிய வாழ்விடம் கௌரவமான வாழ்வு அனைத்தையும் உள்ளடக்கியதான சுயஆட்சி உரிமையுடன் கூடிய சமாதானத் தீர்வையே எதிர்பார்க்கிறார்கள்.

# புலிகள் கடலில் பயணிப்பது புதியதோரு விடயம் அல்ல

**- பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன**



வடக்குக்கிழக்குக்கிடையில் விடுதலைப் புலிகள் கடற்பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள் ளமை புதியதொரு விடயம் அல்ல வென சிறிலங்கா படைத்துறை அமைச்சர் திலக்மாரப்பன கூறி யுள்ளார்.

விடுதலைப் புலிகள் இப்பொழுது தான் இந்தக் கடல் மார்க்கத்தைப் பயன்படுத்த ஆரம் பித்திருக்கிறார்களென புத்தி யற்றவர்கள் போன்று கூறு வதற்கு தாம் முயற்சிக்கவில்லை யென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. யின் பிரச்சார செயலர் விமல் வீரவன்சகொண்டுவந்திருந்த ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறுகூறியிருக்கின்றார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை தரையில் மட்டுமே செல்லு படியாகும் என்றும், எனவே விடுதலைப் புலிகள் கடற்பயணம் மேற்கொள்ள அனு மதிக்கப்ப டுவது சட்டவிரோத நட வடிக்கை என்றும் அதனை ரத்து செய்ய கோரியும் விமல் வீரவன்ச இந்த பிரேரணையை கொண்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

**- மனிதநேய -**

# கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு பாதுகாப்புக் கவசங்கள் அன்பளிப்பு

வன்னிப்பிரதேசத்தில்தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையு டன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவந்த தொண்டர்களிற்கான மேலதிக பயிற்சியைவழங்க வந்த (மெக்) MAGநிறுவனத்தினரால் 75 பாது காப்பு அங்கிகளும், 150பாதுகாப்பு கண்ணாடி களுடனான தலைக்கவ சங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மிதிவெடிகள் உள்ளதாக இனங்காணப்பட்ட வன்னிப் பிரதேச கிராமங்களில் பாதுகாப்பு வேலியை அமைத்து பொதுமக்களின் அநாவசிய உயிரிழப்பை தவிர்க்கும் நோக்குடனும் பணியை முன்னெடுக்கும் இலக்குடனும் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவு 16 தொண்டர்களிற்கான அளவையில் பயிற்சி தற்போது மெக் நிறுவன அங்கத்தவர் மைக் டொனால்ட் டொன் அவர்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ் அளவையியல் பயிற்சி பூரணமடைந்ததும் அவர்களிற்கு மெக் நிறுவனத்தால் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட ஐந்து வாகனங்களின் உதவியுடன் இவர்களதுபணி ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் எதுவித பாதுகாப்பும் அற்ற சூழ்நிலையில் வன்னிப் பிரதேச மக்களிற்கான மனித நேய பணியை ஆற்றிவந்த தொண்டர்களிற்கு இவ் உதவிகள் பேருதவியாக அமையும் என அதன் பணிப்பாளர் யோகன் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் 120 தொண்டர்கள் கொண்ட இரு பிரதான அணிகள் இப்பாதுகாப்பு வசதிகளுடன் பெருமளவு மக்கள் மீளக்குடி யேறியுள்ள பளைப்பி ரதேசத்தில் தமது பணியை ஆரம்பித்து ள்ளார்கள் எனவும் தெரிவிக்க ப்படுகிறது.

# பண்டாரவன்னியன் வெற்றிவிழா கற்சிலைமடுவில் நடைபெறும்

அடங்காப்பற்று வன்னி மண்ணின் இறுதித் தமிழ் மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் வெற்றிவிழா எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை வன்னிப்பிர தேசமெ ங்கும் நினைவு கொள்ளப் படுகின்றது.

முல்லைத்தீவில் ஆங்கிலேயரின் கோட்டையை வெற்றி கொண்ட தினமான 25.08.2002 அன்று பண்டாரவன்னியன் அறங்கா வல் கழகம் கற்சிலைமடுவில் வெற்றி விழாவினை கொண்டாட ஒழுங்குகள் மேற்கொண்டு ள்ளது.

பிற்பகல் 3.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு இரவு முழுவதும் பல்வேறு கலைநிகழ்வுகளும் சொற்பொ ழிவுகளும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# அதிபர்களுக்கான சந்திப்பு

துணுக்காய் கல்விவலயத்தின் அதிபர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத ஒட்டுசுட்டான் பாடசாலைகளின் அதிபர்கள் 23/08/2002 வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு முல்லை. கல்விவலய அதிபர்களு க்கான கூட்டம் மு/சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நடைபெறவுள் ளதால் அதில் கலந்து கொள்ளும் வண்ணம் துணுக்காய் கல்வி வலயப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# யாழில் காணப்படும் கண்ணி வெடிபோன்று உலகில் வேறெந்தப் பகுதியிலும்

**- அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் குழு**

யாழ். குடாநாட்டில் தாங்கள் நிலக்கண்ணிகளை அகற்றிய பகுதிகளில் காணப்பட்ட நிலக் கண்ணிவெடிகளின் தொகையைப் போல் தாங்கள் பணிபுரிந்த உலகில் வேறு எந்தப் பகுதியிலும் மக்கள் பெருந்தொகையில் வாழும் எந்தப்பகுதியிலும் இந்தளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதை தாங்கள் காண வில்லையென யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர் மிரேஜ் அவர்கள் இக்குழுவினரை சந்தித்த போதே இதனை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**- நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை -**

# அகதி அந்தஸ்து கோரிய இலங்கையர்களை பிரிட்டன் தாயகத்திற்கு திருப்பி அனுப்பாது

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நிரந்தர சமா தானம் ஏற்படும் வரையில் பிரிட் டனில் அரசியல் தஞ்சம் கோரி யுள்ள இலங்கையர்களை தமது அரசு திருப்பி அனுப்பப் போவ தில்லையென யாழ்ப்பா ணத்திற்கு நேற்று விஜயம் செய்த பிரித் தானிய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் உயர் அதி காரிகளை சந்தித்து யாழ். நிலைமைகளை இக்குழுவினர் கேட்டறிந்தனர்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப் பினர் கெவின் பரோனின் தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவினரே யாழ்ப்பா ணம் சென்றனர்.

தற்போதைய சமாதான சூழலை பயன்படுத்தி இலங்கை யின் நிலைமைகளை நேரடியாக பார்ப்பதற்காக தாங்கள் யாழ்ப்பாணம் வந்ததாகவும் யாழ்ப்பாண மக்களிற்கு வாக்குறுதிகள் எதனை யும் தரப்போவதில்லையென்றாலும் இப்பிரதேசத்தின் முன்னேற்றத் திற்கு தாங்கள் பல அரிய யோசனைகளை முன்வைத்துள் ளதாகவும் பிரிட்டன் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# பிறமுக அறிமுகம்



## ரவி கருணாநாயக்க

(உள்நாட்டு வர்த்தகம் மற்றும் நுகர்வாளர் விவகாரங்களுக்கான அமைச்சர்)

உள்நாட்டு வர்த்தகம் மற்றும் நுகர்வாளர் விவகாரங்களுக்கான சிறிலங்காவின் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

இன்றைய நாட்களில் ஊடகங்களில் அதிகம் அடிபடும் பெயர் இவருடையதுதான். குறிப்பாக சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சினத்தையும் வெறுப்பையும், விரக்தியையும் ஏற்படுத்துவதன் மூலம் அவரை ஒரு நிரந்தர மனக்குழப்பத்திற் குள்ளாக்கி வருபவர் என்ற வகையில் இவர் மிகவும் பிரசித்தமானவர்.

ஜனாதிபதி மீதான ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகளான விறுவிறுப்பான ஒரு மர்மத் தொடர்கதையைப் போன்று பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பதன் மூலம் அங்கு பரபரப்பையும், கடுமையான விவாதங்களையும், குழப்பங்களையும் உருவாக்குவதில் இவருக்கு நிகர் இவரேதான்..

அண்மையில், அதாவது மிக அண்மையில் சந்திரிகாவின் மர்மக் கைப்பை குறித்த தகவலை வெளிப்படுத்தி பெரும்சர்ச்சையைக் கிளப்பியவரும் இவர்தான்.

எந்தந்த நேரத்தில் எங்கு இருக்க வேண்டும், எப்படிக் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும், என்னென்ன பிரச்சினைகளை எழுப்பவேண்டும் என்பதைத் துல்லியமாகக் கணித்துச் செயற்படும் திறன்கொண்டவரான இவர் ஒரு **FCMA** பட்டம் பெற்ற பட்டயக் கணக்காளருமாவார். ஆக, கைவசம் தொழில்சார் கல்வித்திறனை வைத்துக் கொண்டேதான் அரசியலை கலக்கிவருகிறார். அதுமட்டு மல்ல-

சிறிலங்கா தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினராகவும், 'ரொட் ரெமின் வன்ரர்' என்ற பெயரிலான தனியார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், பொதுமுகாமை யாளராகவும், **Maritime Intevmod el** போக்குவரத்து நிறுவனத்தின் முகாமையாளராகவும், எண்ணெய் மற்றும் கொழும்பு உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் இவர் பல 'அவதாரங்'கள் எடுத்து செயற்பட்டும் வருகிறார்.

ஜே.ஆர். அரசில் பாதுகாப்பு அமைச்சராக விளங்கிய லலித்அத்துலத் முதலியின் விசுவாசியும் நெருங்கிய சகாவுமான ரவி, பிரேமதாசாவுடன் லலித் முரண்பட்டுக்கொண்டு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி **(DUNF)** என்ற கட்சியை உருவாக்கிய போதுஅவருடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர் அக்கட்சியில் கொள்கை வகுப்பு உட்கட்டமைப்பு ஆகியவற்றில் தீவிர பங்காற்றியவர்.

லலித்தின் இறப்பின் பின்னர் சிறிமானி அத்துலத்முதலிக்கு துணையாக நின்று கட்சியில் தீவிரமாக இயங்கியவர் - உபதலைவராகவும் இருந்தவர். 'லலித்' பவுண்டேசன் என்ற அமைப்பின் பொருளாளர்-மற்றும் அறங்காவலராகவும் இயங்கியவர்.

லலித்தின் கட்சி சந்திரிகாவுடன் இணைந்து செயற்பட்டபோது சந்திரிகாவுக்கும் நெருக்கமான ஒருவராக விளங்கியவர். சந்திரிகா சமாதானத்துக்கான யுத்தம் என்ற தமிழ் மக்களுக்கெதிரான போர் நடவடிக்கையை தீவிரமாக்கியபோது அதனை வெகுவாக ஆதரித்தவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிறிலங்காவுக்குப் பிரிட்டன் ஆயுதங்களை விற்கக்கூடாது என்று கூறியபோது அதனை 'பச்சைத் துரோகத்தனம்' என வர்ணித்தவர் சத்தியப் பிரமாணத்திற்கு எதிராகச் செயற்படும் தேசவிரோதிகள் என்றவர்

புலிகளைப் பலவீனப்படுத்தி ஜனநாயக வழிக்கு கொண்டு வரத்தான் யுத்தம் நடத்துகிறோம் என்றவர்.

பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் தான் ஒழிக்க வேண்டும் என்றவர்..

அரசியல் யோசனைகள் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் தீவிரமாக முன்னெடுக் கப்படவேண்டும் என்றவர்.

சிறுபான்மையோருக்கு 'மொழிப்பிரச்சினை' போன்ற சில்லறைப் பிரச்சினைகள் தான் உள்ளன.... அமெரிக்காவிலுள்ள 14% கறுப்பர்கள் அங்கு தனிநாடா கேட்கின்றனர் என்றவர்.

கட்சி வேறுபாட்டை மறந்து யுத்தத்தை நடத்த அனைவரையும் வருமாறு அறைகூவல் விடுத்தவர்.

இவையனைத்தும் 'ஐயா'வின் பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால நிலைப்பாடாக இருந்தது.

சிறிமானியுடன் முரண்பட்டு, சந்திரிகாவுடன் சமரசம் காணமுடியாது லலித் கட்சியில் இருந்து அதனை உடைத்துக்கொண்டு வெளியேறி ஐ.தே. கட்சியில் இணைந்து 'பச்சை'க் கொள்கைகளை வளர்த்துக்கொண்ட ரவி, இப்போது அக்கட்சியின் கொழும்பு கோட்டை தொகுதி அமைப்பாளர் - பாராளுமன்ற உறுப்பினர் , அமைச்சர்....... இருக்குமிடத்தில் சௌக்கியமாகவும், எதிரிடத்திற்கு சிம்மசொர்ப்பனமாகவும் இருக்கிறார்.

சந்திரிகா எமது தேசியத் தலைவர் பிரபாகரனுடன் பேசத் தயாராக இருந்தாலும் 'ரவி'யுடன் பேசத் தயாராக இல்லை... அவரின் முதல் எதிரிகள் எனக்கூறப்படும் எஸ்.பி.திஸாநாயக்க, ஜீ. எல்.பீரிஸ், கே.என்.சொக்ஸி ஆகியோர் வரிசைக்குள் ரவியும் உறுதியான இடத்தைப் பிடித்துக்கொண்டார். சந்திரிகா அவரின் 'தோலை உரிக்காத'- 'கழுத்தைப் பாய்ந்து கடி'த்துக் குதறாத குறைதான் மிச்சம்.

இப்போது நிறம்மாறி - கொள்கை மாறி, நிற்கும் ரவி சமாதானத்தை வலியுறுத்துகிறார் பிரபாகரன்அழைப்பையேற்று சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தான் புத்திசாலித்தனம் என்கிறார்.

ஒரு காலத்தில் சந்திரிகாவின் தீர்வுப்பொதி யோசனையைப் புறக்கணித்த ரவி, நாட்டை மீட்க இராணுவம் போராடுகையில் நாட்டைப் பிரிக்கும் தீர்வுப்பொதியை முன்வைக்கக்கூடாது என முழங்கியவர் இப்போது அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு இசைவாக படைத்தரப்பு செயற்பட வேண்டுமென்கிறார்

நாற்பது வயதாகும் 'ரவியின் மனைவி' 'குமலாவிராந்தி' ஒரு இஸ்லாமியப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ரணிலின் விசிறி.

எப்போதுமே 'லலித்'தின் விசிறி

லட்சியம்- சந்திரிகாவை பதவியைவிட்டு அகற்றுவது.

பொழுதுபோக்கு: சந்திரிகாவை குழப்பத்திலாழ்த்தி வேடிக்கை பார்ப்பது.



# சமாதானம் எனப்படுவது பரஸ்பரம் பலங்களை ஒப்புக் கொள்வது

— நிலாந்தன் —

கடந்தவாரம் கிழக்கிற்கான புலிகளின் கடல்வழி தொடர்பாக ஒருஉடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் வெளிப்படையாக பேசப் பட்டிராத விவகாரங்களில் ஒன்று என்று கூறப்பட்ட இவ் விவகாரம் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய நாளிலிருந்து உறுத்தலான ஒரு விசயமாக இருந்துவந்தது.

இப்பொழுது ஒரு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி நாயாறிலிருந்து வாகரை வரையிலுமான கடலில் புலிகளிற்கு ஒரு ஸ்திரமான கடல்வழி திறக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது ஈழப்போரின் மிகவும்பதட்டமான ஒரு கடற்போர் அரங்காக இப்பாதை இருந்து வந்தது.

அவ்வப்போது சண்டை செய்து திறக்கப்படும் இவ் வழியினூடாக புலிகள் தமது பயணங்களைச் செய்வதான ஒருவித நிலை மாறும் வலுச்சமநிலை இக் கடல்வழி நெடுகக் காணப் பட்டது.

இப்பொழுது அந்தத் தளம்பலான வலுச்சமநிலைக் கமைய சில இணக்கப்பாடு களோடான ஒரு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் இது ஒரு "புதிய அநுபவம்" என்று கூறியுள்ளன.

கடற்பரப்பில் போராளிகள் ஆதிக்கம் செலுத்தும் சக்தி மிக்கவர்களாய்க் காணப்படுவது என்பது அநேகமாக ஈழப்போர் அரங்கில் மட்டுமே காணப்படும் ஒன்று என்றும் ஏனைய நாடுகளில் செய்யப்பட்ட யுத்தநிறுத்த கண்காணிப்பு அநுபவங்களோடு ஒப்பிடுகையில் இது புதியது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது கடற்புலிகளின் பலத்தை நிரூபிக்கும் ஒரு முக்கிய கட்டம்.

ஏற்கனவே நாயாறிலிருந்து நாகர்கோயில் வரைக்கும் கரையிலிருந்து கணிசமான தூரம்வரை ஏன் சிலசமயம் சர்வதேச எல்லைக்கப்பாலும் கூட கடற்புலிகளுக்குச் சாதகமான ஒரு வலுச்சமநிலையே அதிகம் காணப்படுகிறது.

இப்பொழுது கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் ஆட்சிப் புலம் நிபந்தனைகளோடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பத்தியில் ஏற்கனவே கூறப்பட்டது போல புரிந்துணர்வு உடன்படிக்கை நிலத்தில் புலி களின் ஆட்சிப்புலத்தை அங்கீக ரிக்கின்றது. கடல்பற்றிய விவகா ரங்களில் புரிந்துணர்வு உடன்படிக் கையில் ஒருவித மௌனம் காணப்படுவதாக அப்பொழுதே சுட்டிக் காட்டப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒத்திவைக்கப்பட்ட விவகா ரங்களில் இதுவும் ஒன்று என்று கூறப்பட்டது.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக் கையை ஆதரித்துப் பேசிய விமர்சகர்கள் மேற்படி மௌனத்தை அல்லது ஒத்தி வைப்பை தவிர்க்கவியலாத ஓர் உத்தி என்று கூறி நியாயப்படுத்தினார்கள்.

அதாவது சர்ச்சைக்குரியதும் எரிபற்று நிலையிலிருப்பவை யுமான எல்லா விசயங்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கதைப்பத னால் சில சமயங்களில் எதுவுமே தீர்க்கப்படாது விடப்படும் ஆபத்து உண்டு என்றும் பதிலாக சில விசயங்களை காலத்தின் போக்கில் ஒத்திவைத்துவிட்டு பரஸ்பரம் புரிந்துணர்வும் நம்பிக் கையும் படிப்படியாக கட்டியெழுப் பப்பட்ட பின் அவற்றைப் பற்றி விவாதிக்கும் போது .

விட்டுக்கொடுத்து ஒரு உடன் பாட்டைக் காண்பது சாத்தியப் படும் என்றுமவர்கள் கூறினார்கள்.

உண்மையில் கடலில் புலிகளின் ஆட்சிப்புலம் பற்றிய விசயத்திலும் இதுதான் நடந்தி ருப்பதுபோலத் தோன்றுகிறது.

இப்படிப் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் ஒரு நிலையே மெய்யான சமாதானத்திற்கு வேண்டிய ஆக அடிப்படையான ஒரு மனோநிலையாகும்.

விட்டுக்கொடுப்பற்ற கயிறிழு நிலையெனப்படுவது யுத்தத்தின் வித்துக்களைத் தன்னுள் கொண் டிருக்கும் ஒருவித பலப் பரீட்சையே.

ஆனால் சமாதானம் எனப்படுவது பலப்பரீட்சையல்ல அது பரஸ்பரம் பலங்களை ஒப்புக்கொள்வது.

யாரும் யாருக்கும் சரணடை யாத யாருக்கும் பொறியாயிராத ஒரு கௌரவமான நீதியான வலுச்சம நிலையே சமாதானம்.

இலங்கைத்தீவின் சமாதானத் தைப் பொறுத்தவரை சிலவாரங் களுக்கு முன்பு லண்டனில் பாலசிங்கம் - மொறகொட சந்திப்பு நிகழும் வரையிலும் ஒரு வித மந்த நிலையே காணப்பட்டது.

யுத்தம் சமாதானம் என்ற ஒரு முறனான ஊடகங்களுக்கிடை யில் ஊசலாடிக் கொண்டிருந்த ஒருவித ஈரூடக அரசியலின் விளைவாக உண்டாகிய மந்த நிலை அது.

யுத்தநோக்கு நிலையிலிருந்து சமாதானத்தைக் கையாளும் போது அரசியல் இப்படி ஈரூடகத் தன்மை மிக்கதாக மாறுவது தவிர்க்க முடியாதது.

போதாக்குறைக்கு ஜனாதிபதி க்கும் சில அமைச்சர்களுக்கு மிடையில் உண்டாகிய மோதலும் நிலைமையை மேலும் சிக்கலாக்கி யிருந்தது.

உண்மையில் சமாதானத்திற்கு விசுவாசமாக இருந்தால் ரணிலுடைய அமைச்சர்கள் சந்திரிகாவை சீண்டியிருக்கக் கூடாது. அது நிலைமை மேலும் கொந்தளிக்கச் செய்து சமாதானத்துக்கு பாதகமான ஒரு சூழலை உருவாக்கியது.

இத்தகைய ஒரு ஸ்திரமற்ற பின்னணியில்தான் பாலசிங்கம்-மொறகொட சந்திப்பு நிகழ்ந்தது. அதில் தொடங்கி சமாதான முயற்சிகள் வேகமெடுக்கத் தொடங்கின.

சந்திரிகா-அமைச்சர்கள் இழுபறியிலும் அரசாங்கம் முன் யோசனையுடனும் நிதானமாகவும் நடந்து கொள்வதுபோலத் தோன்றுகிறது.

இவற்றோடு கடலில் புலிகளின் ஆட்சிப்புலம் பற்றிய உடன்படிக் கையும்சேர்ந்து சமாதானத்துக் கான வாய்ப்புக்கள் மறுபடியும் துலங்கத் தொடங்கியுள்ளன.

இப்பொழுது இலங்கைத் தீவின்அரசியல் அதன் ஈரூடக நிலையிலிருந்து மெல்லச் சமாதானத்தை நோக்கி நகர்வது போலத் தோன்றுகிறது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் வைத்து ரணில் கூறியவை மிகவும் முக்கிய மானவை. அதன்படி இடைக்கால நிர்வாக அமைப் பொன்றை நிறுவ அவர் தயார் என்று தெரிகிறது.

அப்படியென்றால் இப்பத்தியில் ஏற்கனவே கூறப்பட்டதுபோல இயல்புநிலை முழு அளவில் உருவாக்கப்பட வேண்டும்.

அதற்குத் தேவையேற்பட்டால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அப்பாலும் போகத் தயாராக இருக்க வேண்டும்.

படைமுகாம்களின் நிழலில் அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகம் நிச்சயமற்றதாகவே இருக்கும்.

என்பதால்தான்- ஒஸ்லோச் சந்திப்பின் பின் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நிருபர்கள் மத்தியில் பேசியபோது "இயல்புநிலையை உருவாக்க நிரந்தரமான ஸ்திரமான ஒரு யுத்தநிறுத்தத் திற்கு வர முயன்று கொண்டிருக் கிறோம்" என்று கூறினார்.

இது மிகவும் முக்கியம்.

நிரந்தரமான எளிதில் முறிக்கப்பட வியலாத ஒரு யுத்திறுத்தம் வரும் வரைக்கும் இலங்கைத்தீவின் அரசியல் அதன் ஈரூடகத் தன்மை யிலிருந்து முற்றாக விடுபடாது.

இதை இன்னுமொரு விதமாகச் சொல்லலாம். யுத்த நோக்கு நிலையிலிருந்து செய்யப்படும் சமாதானத்தில் யுத்தநிறுத்தம் நிரந்தரமானதாக ஸ்திரமானதாக இருக்க முடியாது.

மாறாக சமாதானம் சமாதானத் துக்காகவே செய்யப்பட வேண்டும்.


இல்லையென்றால்- கடந்த எட்டு மாதங்களாகக் கட்டியெழுப்பப்பட்டு வரும் நம்பிக்கைகள் தற்சமயம் கண்டிவீதியில் தோன்றும் கானல் நீரைப்போல ஆகிவிடக்கூடும்.

தற்சமயம் நடுப்பகலில் கண்டிவீதிவழியாகப் போகும் எவரும் அதில் கானல் நீர் தோன்றக் காணலாம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை யைத் தொடர்ந்து கண்டிவீதி திறக்கப்பட்டபோது அது சமா தானச்சாலை என்று கூறப்பட்டது.

இப்பொழுது வன்னிப் பெருநிலத்தில் உள்ள ஆகப் பெரிய நீண்ட தார் வீதி அதுதான் என்பதால் அதிகம் கானல்நீர் தோன்றுவதும் அதில்தான்.

இப்படி சமாதானச்சாலையில் தோன்றும் கானல்நீரைப்போல ரணில் அரசாங்கத்தின் சமாதான மும் ஆகிவிடாதிருப்ப தென்றால் முதலில் யுத்தநிறுத்தம் நிரந்தர மானதும் ஸ்திரமானதும் ஆக் கப்பட வேண்டும். ♦




## காலியாகும் சந்தைகள்

பாதைதிறப்பு... பயணிகள்வருகை.... பொருட்கள் மீதான தடை நீக்கம்... இயல்பு வாழ்க்கை மீளத்திரும்பல்... உறவுகளின் சங்கமிப்பு... என்று வன்னி மக்களின் வாழ்விலும் பல மாற்றங்கள்.

பத்தோடு பதினொன்றாக மக்களின் அடிப்படைத் தேவைகளிலும் பல முன்னேற்றங்கள் தெரிந்த போதும் இவற்றோடு கூடவே சேர்ந்து பலத்த தட்டுப்பாடுகளும் வந்துவிட்டது.

பொதுவாகவே வன்னி மக்களின் உணவு முறையில் கடலுணவு வகைகள் கணிசமான அளவு இடம்பிடிப்பது வழமை.

இப்போது ஏ.ஒன்பது பாதை திறப்பின் பின் சந்தைகளில் இறால், நண்டு, கணவாய் வகைகளை கண்ணில் காணவே கிடைப்பதில்லை. அத்தோடு நல்ல மீன்களும்தான். அப்படி கிடைத்தாலும் யானை விலையாக இருக்கிறது.

எல்லாம் தென்பகுதி விஜயம் இங்கு புரதச் சத்து அதிகரித்து தென்பகுதிக்கு ஏற்றுமதி. மீன் வியாபாரிகளிடம் நெருங்க முடியாது. அவர்கள் தீர்மானிக்கும் விலை ஏற்றதாகிவிட்டது.

ஒரு குடும்பஸ்தர் அங்கலாய்க்கின்றார்

தென்பகுதிக்கு வியாபாரிகள் உணவு வகைகளை அனுப்புவதும், கூடிய விலையைப் பெறுவதும் நல்ல விடையங்கள்தான். ஆனால் இங்குள்ள மக்களின் தேவைக்களவானவற்றை சந்தைக்கு விடுதல் முக்கியமல்லவா




அன்று பணமும் இல்லை பொருளும் இல்லை இன்று பணமிருந்தாலும் பொருள் இல்லை என்றார்.

அத்தோடு இன்னும் கொங்சநாளில் பணத்தைத்தான் சாப்பிட வேணும். என்றார். ●

## வீணாகும் நேரங்கள்



உணவுச்சாலைகள் எல்லாம் படு சுறுசுறுப்பு. வியாபாரங்களும் உணவுவகைகளை போல படு சூடு .

முன்பு காலியாகவிருந்த கதிரைகள் எல்லாம் தென்பகுதி பயணிகளால் நிரம்பி வழிகின்றது.

அன்று சிறு குடல் பெருங்குடலிற்கு பசிக்கிறது? சேமிப்பு எல்லாம் காலியாகிவிட்டது என்ற போது அந்த உணவுச்சாலைக்கு சென்றிருந்தேன்.

வெறுமையாக இருந்த உணவுச் சாலையில் என்னோடு சேர்த்து ஒரு சிலர் மட்டுமேயிருந்தார்கள் அங்கு உணவு பாரிமாறுபவர்கள் எமக்கு தேவையானது என்னவென்று விசாரித்துக் கொண்டு இருக்கும் போது ஒரு டொல்பின் நிறைய பயணிகள்.

எங்களை மறந்து போய் உணவு பரிமாறுபவர்கள் எல்லோரும் அந்த பயணிகளைசுற்றி பரிமாறினார்கள். நாங்கள் பல மணிநேரம் உணவுக்காக காத்திருந்தோம். எங்களைக் கடந்து உபசரிப்பாளர்கள் போகும் ஒவ்வொரு மணித்துளியும் தம்பி... தம்பி சோறு, தம்பி சாப்பாடு என்று காசு கொடுத்து சாப்பிட பிச்சை கேட்டபடி பல மணி நேரம் கெஞ்ச வேண்டியிருந்தது.

பலமணி நேரம் சென்ற பின் எங்களை கவனித்தார்கள் அன்று எனது உழைப்பு இரண்டு மணிநேரம் வீணே கழிந்தது உணவிற்காக மட்டும்.

கடைக்காரார்கள் எல்லோரும் மயக்கத்திலி ருக்கிறார்கள் எமது உழைப்பு நேரத்தை அவர்கள் சாப்பிடுகின்றார்கள் என்றார் எனது நண்பர்.

கடைக்கார்கள் எல்லோரும் சாப்பிட வந்தவர்கள் என்பதை மறந்து போனார்கள். ●

## அனாகரிகமான பண்பாடு



இப்போதெல்லாம் எமது இளம் சமுதாயத்தாரிடம் புதுப்புது பேச்சு மொழிகளும் பண்பாடுகளும் எழத் தொடங்கிட்டது.

எங்களது மொழியும் பண்பாடும் வீரியம்மிக்கது தனித்துவமானது. தொட்டிலிலிருந்து அது தாய்ப்பாலோடு சேர்ந்தே ஊட்டிவளர்க்கப்பட்டது. என்னவோ இப்பொழுது இவை வலுவிழந்தும் தரம் கெட்டும்போய்விட்டதோ என்கின்ற ஐயம் எழுகிறது.

இதற்கு காரணமில்லாமல் இல்லை. முன்பு நல்ல தமிழில் வணக்கம் என்று அழைத்தவர்கள் இப்போதெல்லாம் ஹாய்.... என்று இங்கிலீசு தமிழில் பேசுகின்றார்கள்.

இதைத்தான் பொறுத்துக்கொள்ளலாம் ஆனால் ஒரு முதியவரை அவரின் வயதிலிருந்து பல மடங்கு வயது குறைந்த ஒரு இளைஞர்அவரின் தந்தையின் தந்தை போல என்னடாப்பா? என்ன மச்சான்? ஹாய் மொட்டை... என்று விழித்து அழைத்தார்.

இது நடந்தது வேறு எங்கு மல்ல இங்குதான். இன்றைய இளைஞர்களின் புதிய நாகரீகம் அவர்களின் மொழியில் இது பழையன கழிதலும் புதியன புகுதலும் போலும்.

இவற்றையும் தாண்டி ஒரு இளைஞர் அந்த முதியவரிடம் ஒரு கொச்சத்தனமான பகிடியைவிட்டு எப்படி இருக்கு என்றார்? அதற்கு அந்த முதியவர்.

பகிடி நல்லாத்தான் இருக்கு ஆனால் உன்னை வளர்த்த முறைதான் பிழையாக இருக்கு என்றார்.

காலம் மட்டுமல்ல இன்றைய இளைஞர்களும் கெட்டுத்தான் போனார்களோ...? ●

## அலங்காரமா? அலங்கோலமா?



இளம் பெண்களெல்லாம் இப்போது தம்மை அலங்கரித்துக் கொள்வதற்காக அதிக நேரம் மட்டும் எடுத்துக்கொள்வதில்லை. துாரப் பயணங்களையும் மேற்கொள்கின்றார்கள்.

அவர்களின் நடையில் உடையில் என்று பல மாற்றங்கள். எந்த சினிமாப் படத்தில் என்ன உடை அறிமுகம் செய்யப்படுகின்றதோ அதனை இவர்கள் இங்கு அறிமுகம் செய்கின்றார்கள்.

தலையலங்காரம் முதல் கால் அலங்காரம் வரை எல்லாம் புதிய தேடல்கள். ஆனால் அளவுக்கு அதிகமாக எதைச் செய்தாலும் சில வேளைகளில் அது எதிர்மறையான விளைவுகளை தந்துவிடுவதும் உண்டு.

அன்று அந்த பஸ் தரிப்பு நிலையம் ஒரே கலகலப்பாகவிருந்தது. பயணிகள் வருவதும் போவதுமாக தனக்கேயுரிய பாணியில்.


ஒரு இளம் பெண் பஸ்ஸிலிருந்து இறங்கி வந்தாள். நவநாகரீக அலங்கரிப்பின் உச்சம் எல்லோரும் அவளையே திரும்பிப் பார்த்தார்கள் அவளின் முகமெங்கும் ஒப்பனைப் பொருட்களின் கீறல்கள் நெளிவுகள் என்று அவளில் குவிந்திருந்தது.

ஒரு அம்மா கூறினார் முந்தியெல்லாம் பஸ்சுக்குத்தான் போட் போட்டாங்கள். இப்ப என்னெண்டால் பொம்பிளைப் பிள்ளைகளின் தலைகளிலும் போட்போட வேணும் எண்டு.

கண் எது? தலை எது? கண்புருவம் எது? என்று எல்லாம் ஒரே கறுப்பு மையாக இருக்கிறது எண்டு.

பஸ் தரிப்பு நிலையம் ஒரு முறை சிரிப்பில் குலுங்கியது. ●

## ஊதவடி மயிலர்



அப்புகாமியை இருத்தினாலென்ன?
அப்துல்லாவை இருத்தினாலென்ன?
அப்புத்துரையை இருத்தினாலென்ன?
எல்லாம் ஒன்றுதான் பாருங்கோ...

**செய்தி: யாழ் குடாநாட்டு இராணுவத் தலைமையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.**
மயிலா: இராணுவத் தலைமையில் தானே மாற்றங்கள் ஏற்பட்டிருக்கு. இராணுவ நிலைமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லைத் தானே.... பிறகென்ன சந்தோஷம் இந்தச் செய்தியிலை இருக்கு...? ஓ... யாழ் மாவட்ட பிரதி இராணுவத் தளபதியாக பிரிகேடியர் இரத்தின சபாபதி என்பவரை நியமித்திருக்கிறார்களாம்... ஏன் திடீரென்று தமிழரிலை இவ்வளவு நம்பிக்கை... நம்பிக்கையைக் கொண்டே நம் கண்ணைக் குத்துவிக்கும் திட்டமோ தெரியேல்லை .... இராணுவ நிலைகளை அகற்றி நிலைமையையும் மாற்றி தலைமையையும் மாற்றியிருந்தால் நல்லது.. அதில்லாமல் தலைமையிலை

**செய்தி: தமிழ்த் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் கைதுக்கு ஜெயலலிதா மீது தமிழக தலைவர்கள் கண்டனம்...**
மயிலர்: கண்டிச்சு என்ன பிரியோசனம் பாருங்கோ.... இது எருமை மாட்டிலை சேறு எறிஞ்ச மாதிரித்தான் முடியும்.. கண்டிக்கிறவைக்குத்தான் வாயுழையும்.... தமிழகத்தின் முதலமைச்சருக்கு கண்டன மெல்லாம் சர்வ சாதாரணம் பாருங்கோ... ஆனால் உண்மையான தமிழ் உணர்வாளரை தடா அசைக்காது, போடோவும் அசைக்காது. எண்டதை அந்த ஆயிரம் செருப்பு வாங்கிய அபூர்வ சிந்தாமணி கொஞ்சக் காலத்திலை புரிஞ்சுகொள்ளுவா பாருங்கோ...

**செய்தி: பிரதமர் ரணிலுக்கு குண்டு துளைக்காத ஆடை இறக்குமதி.**
மயிலா: சமாதான எதிர்ப்புக் குண்டுகளின் ஆபத்தை சரியாகத்தான் சிறிலங்காப் பிரதமர் புரிஞ்சு கொண்டிருக்கிறார் பாருங்கோ... பொ.ஐ.முன்னணி , ஜே.வி.யுடன் இணையும் போதே பேரினவாதம் பேரினவாதமாக அவதார மெடுக்கப்போகுதெண்டு ரணிலுக்குத் தெரிஞ்சிருக்க வேணும். அதுதான் இந்தப் பல லட்சம் ரூபாய் பாதுகாப்பு ஏற்பாடு. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி... எண்டைக்காவது ஆட்சிமாறி மீண்டும் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் இப்படி ஒரு செய்தியும் பரபரப்பாக வெளி வரும்.. 'ரணிலின் பாதுகாப்பு கவச ஆடைக் கொள்வனவில் பலகோடி ரூபாய் ஊழல்...' இதுதான் பாருங்கோ அந்தச் செய்தி

**செய்த':வங்கிக் கடன்களை மீளச் செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயரை வெளியிடுக... சுதந்திரக்கட்சி செயலாளர் கோரிக்கை .**
மயிலர்: பாவம் சுதந்திரக் கட்சி செயலாளர் மைத்திரி பாலசிறிசேன... விஷயம் எவ்வளவு சிக்கலானது எண்டு தெரியாமஉளறிற்றார் பாருங்கோ... உந்தப் பெயர்ப்பட்டியல்லை அவற்றை கட்சி தலைவியை சுற்றியுள்ள அத்தனை பேருமெல்லேஇருக்கப் போகினம்... நல்லவேளை தாடிக்காரர் டக்களஸ் தேவானந்தா மட்டும் தப்பீடுவார்... அவர்சுதந்திரக் கட்சியில்லைத் தானே...!

சிறிசேன ஒரு பிழைவிட்டிட்டார்; சுதந்திரக் கட்சிக்காரரின்ரை பெய ரோடை சந்திரிகாவின் சிபாரிசிலை வங்கிகள் கடன் வழங்கிய ஆட்களின்ரை பேரையெல்லாம் எல்லே கேட்டிருக்கவேணும்... அவையெல்லாம் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவான ஆட்கள்தானே...!

**செய்தி: 'சனாதிபதி சந்திரிகாவை விமர்சிப்பதை நிறுத்த ரணில் அறிவுரை...'**
மயிலர்: அப்ப இனி பரபரப்பான சுவையான செய்திகள் வராதெண்டு சொல்லுங்கோ...ரவிகருணா நாயக்காவுக்கு இனி சந்திரிகாவைத்திட்ட வாய்ப்பில்லை. எஸ்.பி திஸ்சநாயக்கவின் 'கடி'யிலிருந்து சந்திரிகா ஒருவாறு தப்பிவிட்டார் பாருங்கோ.. ஆனாலும் இது தற்காலிகமான நிறுத்தல் நடவடிக்கை தானாம்.. அம்மணியார் கொஞ்ச நாள் நிம்மதி மூச்சு விடலாம்... ஆனாலும் ரவி, சொக்ஸி,எஸ்.பி திசநாயக்க,ஜீ.எல்.பீரிஸ் என சில அமைச்சர்கள் பேசக்கூடத் தேவையில்லை.... அவர்கள் சந்திரிகாவைப் பார்த்தாலே போதும்... அம்மணிக்கு உடனேயே சந்நதம் வந்துவிடுமெல்லே. ●



# ஒரு தொலைத்தொடர்பு நிலையமும் எழுதவைத்த சில விடயங்களும்.....

- எரிசரன் -

**ஏ-09** நெடுஞ்சாலை திறந்துவிடப்பட்டதன் பின்பு வன்னியிலிருந்து மக்கள் வவுனியா, மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் என தமது உறவுகளைத் தேடி பயணம் செய்த வண்ண மிருக்கின்றார்கள்.

கடந்த பல வருடங்களாக வன்னிக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்த மக்கள் பொருளாதாரத்தடைகளால் வாடி, வதங்கி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தது மட்டுமல்லாமல், உறவுகளையும் பிரிந்த துயரில், துவண்டிருந்த வேளை - இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தம், ஏ-09 நெடுஞ்சாலை திறப்பானது சமாதான விரும்பிகள் அனைவரையும் மகிழ்வுக்குள்ளாக்கியது.

வன்னியில் பெரிதும் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாததால், வெளிநாடுகளிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் உறவுகளுடன் கதைத்து மகிழ்வதற்காக, வன்னி வாழ்மக்கள் வவுனியாவையே மையமாக வைத்து இந்த நெடுஞ்சாலை வழியாகப் பயணித்துக்கொள்கின்றார்கள்.

வன்னி,யாழ்ப்பாணம் வேறு இடங்களாலும் வரும் மக்களின் அதிகரிப்பினால், வவுனியா நகரில் விடுதிகளும், தொலைத் தொடர்பு நிலையங்களும் நாளுக்குநாள் சனங்களால் நிரம்பியபடியே இருக்கின்றன.

வன்னியில் இருந்து வருபவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் எனவும் தொலைபேசிகளுடன் பரிச்சயம் இல்லாதவர்கள் எனவும் நினைத்து அவர்களிடமிருந்து அந்தப் பணங்களைப் பெறும் அறிவாளிகளாகவே தொலைத் தொடர்பு விடுதி முகாமையாளர்கள் இருக்கின்றார்கள்.

ஏ-09 நெடுஞ்சாலை திறந்ததும் வவுனியாவுக்கு ஓடுபவர்கள் யார்..? பிள்ளைகள், வெளிநாடுகளில் நிற்பவர்கள் தான் அதிகமானோர். அவர்களுக்குத் தேவையான பணங்கள் கிடைக்கின்றன. இவர்கள் பணங்கள் வீணாக விரையமாவதை கவலைப்படாதவர்கள். பிள்ளைகள், எப்படி பணம் சம்பாதிக்கி ன்றனர் என்பதனை இவர்கள் அறியாதவர்கள். விடுதி, தொலைத்தொடர்பு நிலைய முகாமையாளர்கள் எவ்வளவு பணத்துக்கு "பில்"போட்டாலும் ஏன் என்று இவர்கள் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் இவர்களிடம் பணம் ஊற்றெத்தபடியே இருக்கின்றது.

அண்மையில் வவுனியாவில் இருக்கும் உறவினர் ஒருவர் சொன்னார் 'வன்னி மக்கள் உழைப்பெல்லாம் வவுனியாவில் கரைகிறது' என்று. எதை வைத்து அப்படிச் சொன்னார்.?

நீண்ட நாட்களில் விடுதியில் தங்குவதையா...? அடிக்கடி ஆட்டோக்களில் பயணம் செய்வதையா...? அல்லது தியேட்டர்களில் காலடிகளைப் பதிபதையா...? தொலைத் தொடர்பு நிலையங்களில் அதிக நேரங்களை செலவு செய்வதையா...?

நான் நினைக்கின்றேன் தொலைத்தொடர்பு நிலையத்தை வைத்துத்தான் அவர் சொல்லியிருக்க வேணும்.




அண்மையில் எனது நண்பர் ஒருவர் லண்டனில் இருக்கும் உறவினருடன் கதைப்பதற்கு தொலைத்தொடர்பு நிலையத்துக்குச் சென்றார். அவர் T.P நம்பரையும் கதைப்பவரின் பெயர் 'இராசையா' என்பதையும் எழுதிக்கொடுத்தார். கவுண்டரில் இருப்பவர்களில் ஒருவர் தொடர்பை எடுத்து 'இராசதுரை' என்பவர் இருக்கிறாரா எனக் கேட்டார். பதில்வந்தது அப்படி ஒருவர் இந்த நம்பரில் இல்லையென.

"பெயர் இராசையா" நீங்கள் "இராசதுரை" என்று கோல் எடுத்தீர்கள்" என நண்பர் கூறினார். அவர் ஒரு 'சொறி' சொல்லிவிட்டு மீண்டும் தொடர்பை எடுத்தார். தொடர்பு கிடைத்தது. நண்பர் இராசையாவுடன் இரண்டு நிமிடங்கள் மாத்திரமே கதைத்தார்.

தொடர்பு எடுப்பதற்கு நூற்றி முப்பது ரூபா கதைப்பதற்கு நிமிடத்திற்கு நான்கு ரூபா. ஆனால், பில் வந்தது "இருநூற்றி அறுபத்தியெட்டு ரூபா" என நண்பர் ஏனெனக் கேட்டார். இரண்டு தடைவைகள் தொடர்பு எடுத்ததுக்கும் கதைத்ததுக்கும் என்று கூறினார் அவர்.

"நீர்தானே பெயர் மாறிக் கதைததனீர். நீர்விட்ட தவறுக்கு நான் ஏன் அதுக்குக் கட்ட வேணும்." என்றேன்.

நாங்கள் மாறிக் கதைக்கேக்க உமக்குத் தெரியாதே?' என அவர் கோபமாகக் கேட்டார். நண்பர் வீண்சோலி எதற்கு என நினைத்து கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார்.

நானும் அண்மையில் வவுனியா சென்றவேளை யாழ்ப்பாணத்துக்குத் தொடர்பு எடுத்தேன். நான் கதைக்கும் போது மணிக்கூட்டைப் பார்த்துக் கதைத்தேன். சரியாக ஐந்து நிமிடங்கள் மாத்திரமே கதைத்தேன். முப்பத்தி இரண்டு ரூபாவுக்கு பில் வந்தது.

"ஏன் தம்பி நான் ஐந்து நிமிடங்கள் மாத்திரம் தானே கதைத்தேன். அதுக்கு இருபது ரூபாதானே" என்றேன். அவர் மணிக்கூட்டைப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"நீங்கள் பத்து மணிக்கு கதைத்து பத்து எட்டுக்கு முடித்தனீங்கள் என்று அதட்டலாகச் சொன்னார். நான் அதற்குப் பின்பு அவர்களுடன் கதைக்கவில்லை. அவர்கள் நேரங்களைத்தின்று பிழைக்கும் பேர் வழிகள் என உணர்ந்து நான் அவர் கூறிய பணத்தைக் கொடுத்தேன். சுற்றிவர நிறையச்சனங்கள் இருந் தார்கள். அவர்களுக்கு முன்னிலையில் தன்னை நியாயப்படுத்துவதற்காக

"இங்கை பாராண்ணை மணிக்கூட்டை இது இஞ்சத்தையான் நேரம். நீங்கள் வன்னி நேரத்தை வைச்சுக் கதைக்கிறீர்கள்" என்றார். அங்கே நின்ற அனைவரும் சிரித்தார்கள். சிரித்தவர்களில் பெரும்பாலானவர்கள் வன்னியிலிருந்து வந்தவர்கள். நான் அவர்களைப் பார்த்து பரிதாபத்துடன் வந்தேன். இதில் அவன் கூறியதிலிருந்து என்ன புரிகிறது என்றால் இராணுவ வெறித்தனங்கள் உள்ள காலப்பகுதிகளில் வன்னியிலிருந்து வருபவர்கள் எல்லோரும் அச்சங்களுடன் வாழ்ந்தார்கள். எதிர்த்துக் கதைத்தால் புலிகள் என முத்திரை குத்திவிடுவர்கள் தானே என்ற அச்சங்களுடன் வாழ்ந்தார்கள் என்பதுவே!

◆

# வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் கடல் வழிப்பாதை


சிறி.இந்திரகுமார்

**க**டந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத்திற்கான கடல் வழிப் பயணம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

நான்கு பீரங்கிப்படகுகளில் போராளிகள் கிழக்கு மாகாணத் திற்கான தமது பயணத்தை மேற்கொண்டதன் மூலம் ஒரு வித்தியாசமானவொரு பாதை திறப்பு நிகழ்வு நடந்துள்ளது.

விடுதலைப்புலிகளிற்கும் அரசிற்கும் இடையில் பல கட்டங்கள் தீர்வு காணப்படாது இழுபறி நிலையிலிருந்த இப்பிரச்சினை அரசு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்ததையடுத்து ஒரு தீர்விற்கு வந்துள்ளது.

அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏனைய விவகாரங்களிற்கு ஒரு இணக்கப் பாட்டிற்கு வந்தது போன்று விடுதலைப்புலிகளின் கடற் போக்குவரத்திற்கு ஒரு இணக்கப் பாட்டிற்கு வராமையினால் இவ்விழுபறி நிலை நீடித்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் விடுதலைப்புலிகளின் நிலைகளிற்கும் அரசபடைகளின் இராணுவ நிலைகளிற்குமிடையில் எவ்வாறு ஒரு கட்டுப்பாட்டுக் கோடு வரையப்பட்டு விடுதலைப் புலிகளின் தேசிய இராணுவத்தை அங்கி கரித்ததோ அதேபோன்று கடலில் ஒரு இணக்கத்திற்கு வந்து விடுதலைப் புலிகளின் கடற்படையை அங்கிகரிக்க மறுத்தமையே நீண்டகாலம் இப்பிரச்சினை இழுபடுவதற்கு காரணமாகவிருந்தது.

இறுதியில் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவினர் தொடர்ச்சியாக மேற்கொண்ட பேச்சின் பயனாக புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பின்னர் தீர்வு காணப்படாத ஒரு முக்கிய பிரச்சினை தீர்விற்கு வந்துள்ளது.

இக்கடல் வழிப்பாதை திறப்பு ஏனைய யாழ் கண்டி ஏ-9 பாதைதிறப்பு போன்றோ அல்லது ஏ-5 பாதைதிறப்பு போன்றதோர் நிகழ்வல்ல. இது முற்றிலும் மாறுபட்ட அரசியல் இராணுவ யதார்த்தத்தைக் கொண்டது.

இக்கடல் வழிப்பிரயாணம் மூலம் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளிற்கு ஒரு அங்கிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் கடற்புலிகள் கடந்துள்ள பத்தாண்டுகளில் மிகப்பெரிய ஒரு அரசியல் வெற்றியினை தமிழ் மக்களிற்கு பெற்றுக் கொடுத்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் அரசபடைகளோடோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை சரத்துக்களை மீறும் வகையிலோ விடுதலைப்புலிகள் நடந்து கொள்ளவில்லை.

ஆயினும் சிறிலங்கா கடற்படையினர் பல சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை வலுச்சண்டைக்கு இழுக்கும் வகையில் கடலில் பல்வேறு சம்பவங்களைத் தோற்றுவித்தனர். ஆயினும் கடற்புலிகள் பொறுமை காத்து சமாதான நடவடிக்கையை உறுதிப்படுத்த உதவினர்.

இதன் ஒரு முயற்சியாகவே புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் தமது இராணுவபலம் மூலம் கிழக்கிற்கு சாதாரணமாக மேற்கொண்ட கடல் பயணத்தை விடுதலைப்புலிகள் நான்கு மாதகாலம் நிறுத்தி வைத்திருந்தனர்.

கடற்புலிகளின் இப்பொறுமை காப்பு மூலம் தரையில் விடுதலைப்புலிகளிற்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ அவ்வளவு உரிமை கடலிலும் இருக்கிறது என்பதை பறைசாற்றியுள்ளனர்.

அத்தோடு சிறிலங்காவில் இரண்டு தரைப்படைகள் மட்டுமல்ல இரண்டு கடற்படைகளும் இருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனை விடுதலைப் புலிகளின் நான்கு பீரங்கிப் படகுகளின் கிழக்கிற்கான பிரயாணம் தெளிவுபடுத்துகின்றது.

இது சமாதானத்தை விரும்பாத சக்திகளிற்கும் தென்னிலங்கையிலிருந்து கொண்டு களயதார்த்தை புரிந்து கொள்ளாது கூக்குரலிடும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கும் நன்கு உணர்த்தும்.

இந்நிலையில் இன்று தீர்வு எட்டப்பட்டிருக்கும் இக்கடல் வழிப்பயணத்தையும் தீர்வையும் சிக்கலானதொரு பிரச்சினையாக மாறாது பார்த்துக் கொள்வது அரசினுடைய கைகளிலேயே தங்கியுள்ளது

ஏனெனில் சிறிலங்கா கடற்படையினரின் எதேச்சகரமான போக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையினை குழப்பும் வகையில் அவர்கள் நடந்து கொள்ளுகின்ற முறையுமேயாகும்.

இதனையே முல்லையிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கான கடற்பயணம் ஆரம்பித்த அன்று உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் "இப்பயணம் தொடர்ந்து நடைபெறுவதும் நடைபெறாது விடுவதும் அரசைப் பொறுத்தது..." எனத் தெரிவித்தார்.

அதேநேரம் விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து எந்த தடங்களும் ஏற்படாது என்பதையும் உறுதிப்படுத்தி சமாதான முயற்சிகளிற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை தெளிவுற வெளிப்படுத்தியுள்ளார்.

கடற்புலிகள் சிறிலங்கா அரசோடு மிகப்பெரும் சண்டைகள் நடந்த போது தமது சக்தியை நிலைநாட்டியவர்கள். சமாதான காலத்திலும் தமது சக்தியை நிலைநாட்டியுள்ளனர்.

# போராட நிர்ப்பந்திக்கப்பட்ட தமிழினம்:

- ஞாபகன் -



## குடாநாட்டில் தொடரும் வெகுஜன போராட்டங்கள்

**போ**ரின் குழந்தைகளாக தமிழ் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டமை இப்போதும் கூட விதிவிலக்காகிப் போய் விடவில்லை. போர் நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்பாடு வன்முறை தழுவிய போராட்டத்தை நிறுத்தியது. அதுவும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான ஏது நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையில். ஆனால் அந்த நிபந்தனையை நிறைவு பெறச் செய்யவும் போராட்டங்களை நிகழ்த்த வேண்டியஅதன் வழியிலேயே வெற்றிகளை அடையவேண்டிய துரதிஷடம் தமிழர்களுக்கு ஆகி விட்டிருக்கிறது.

பெப்ரவரி 23ம் திகதிக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் அகிம்சை வழியான போராட்டங்கள் பல இடம் பெற்றுவிட்டன. யாழ். குடாநாட்டில் அண்மைக் காலத்தினுள் இடம் பெற்ற இவ்வழியிலான போராட்டங்கள் மக்கள் எதிர்பார்த்த அளவில் இல்லாவிடினும் வெற்றியைத் தந்திருக்கின்றன. இருந்த போதிலும் அடிக்கடி மக்கள் நடத்தும் போராட்டங்களை திரிபுபடுத்தி கொச்சைப்படுத்தி மக்களுக்கும் புலிகளுக்கும் இடையில் இடைவெளிகளை ஏற்படுத்த சில சக்திகள் முயன்று வருகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி புலிகள் யாழ்ப்பாணத்திற்குள்ளும் வந்தார்கள். வந்தார்கள் என்பதைவிட மக்களால் கொண்டு வரப்பட்டார்கள் எனபது பொருத்தமானது. கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்து மக்களின் ஆபத்பாத்தவராகக் காட்ட முற்பட்ட சக்தியை மக்கள் தூக்கி எறிந்த பின்னர் புலிகள் வரவேற்கப்பட்டார்கள். இதன் பின்னணியில் மக்கள் மேற்கொள்ளும் அகிம்சை வழியான போராட்டங்களை புலிகள் தூண்டிவிட்டுச் செல்வதாக குற்றம் சாட்டும் அச்சக்தி இது மக்களின் அன்றாட இயல்பு வாழ்வையும் பொருளாதாரத்தையும் பாதிக்கும் ஒரு ஏற்றுக் கொள்ளமுடியாத நடவடிக்கை என்று பிரச்சாரப்படுத்த முயன்று வந்தது: வருகிறது. இது புரிந்துணர்வு உடன்படிக்கையை சமாதான முன்முயற்சிகளை போட்டுடைக்க தென்னிலங்கையில் பாடுபடும் பேரினவாத அமைப்புக்களுக்குத் துணையாக மேற்கொள்ளப்படும் நகர்வு என்பதில் வேறு கருத்துஇருக்க முடியாது.

அதேநேரம் புரிந்துணர்வு உடன்படிக்கை விதிகளை அமுல் செய்வதில் சிறிலங்கா அரசதரப்பு காட்டும் மெத்தனப் போக்கு ஏற்றுக்கொள்ளப் படக்கூடியது என்ற கருத்தையும் அது உட்கிடையாகக் கொண்டிருக்கிறது.

இந்த கருத்துருவாக்கங்களுக்கு ஊடாக மக்கள் தமது வெகுஜனப்போராட்டங்களை நடத்தினர். தென்மராட்சி மக்கள் தமது சொந்த இடங்களிலும் வலிகாம மக்கள் தமது இருப்பிடங்களிலும் குடியமர அனுமதிக்க வேண்டும் என போராடினர்: ஆர்ப்பாட்டப் பேரணிகளை நிகழ்தினர். தீவகத்திலும் யாழ்பாணத்திலும் பிரதான போக்குவரத்துப் பாதைகளை மக்கள் பாவனைக்கு திறந்துவிடுமாறு மறியலில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டங்கள் வெற்றிபெறவில்லை என்று ஒரேயடியாகவே கூறி விடமுடியாது. தீவகத்தில் போக்குவரத்துப் பாதைக்காக மாணவர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் உடனடி வெற்றியை ஏற்படுத்தியது. பின்னர் அப்பாதை மீண்டும் படையினரால் மூடப்பட்டது.

தென்மராட்சி வலிகாம மக்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக அப்பகுதிகளில் மக்கள் அமரவும் பலாலிப் படைத்தளத்தின் முன்னணிக் காவலரண்களைப் பின்னகர்த்தி மக்கள் குடியமரவும் ஏற்பாடு செய்யப்படலாம் என்ற நிலை இப்போது தோன்றியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்தமொறகொடவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பலாலி இராணுவத்தளத்தின் முன்னணிக் காவலரண்களை பின்தள்ளி இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமரச் செய்யமுடியும் என்று கூறியுள்ளனர். அத்துடன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி,வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், தந்தை செல்வா ஆரம்பப்பாடசாலை என்பன சொந்தஇடங்களிலே இயங்கவும் அனுமதிக்கப் பட்டிருக்கிறன.

இதேபோன்று தென்மராட்சிப் பகுதியில் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விரு பகுதிகளிலும் மக்கள் அனுமதிக்கப்படுவர் என்றளவுக்கு பனுத்தரப்பின் கடும்பிடியைத்தளர்த்தி வாக்குறுதி வழங்குமளவிற்கு வழிவகுத்தது மக்கள் போராட்டமே என்பது மறுக்கப்பட முடியாதது. ஆயினும்இந்த வாக்குறுதி மக்களின் எதிர்பார்ப்பை பூரணமாக நிறைவேற்றிவிடவில்லை. மரபுவழித் தாயகத்தை அங்கீகரிக்கக்கோரும் தமிழர்களுக்குஇது போதியதல்ல.

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் மீளக் குடியமர்த்துவது உடனடிச் சாத்தியமாகாது. இது குறித்து சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்பே ஆராயப்படும் என்று மிலிந்த மொறகொட தெரிவித்திருப்பது ஏமாற்றத்துக்குரியது. தென்மராட்சியில் கரம்பகம், எழுதுமட்டுவாள், அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் மக்களைக் குடியமர்த்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். இது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப் பாட்டிற்கு முரணானது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை யாருக்கும்

இது ஒருபுறமிருக்க ஒப்பந்தத்தின சரத்துக்கள் சிலதை ஆதாரமாகக் கொண்டு தமது படைப்பலத்தைப் பேணும் நடவடிக்கை தொடர்கின்றது என்பது முக்கியமானது. அதிலும் மக்களின் சொத்துக்கள் வளங்கள் என்பனவற்றையே நாசமாக்கி இந்தப் பலப்படுத்தல் இடம்பெறுகின்றது. கடந்த வாரங்களில் பனைமரங்கள் உட்பட பயன்தரு மரங்கள் அழிக்கப்படமாட்டாது என்று படைத்தரப்பு வழங்கிய உறுதிமொழிகள் மறக்கப்பட்டு விட்டன. மிருசுவிலில் எஞ்சியுள்ள வீடுகள் உடைக்கப்பட்டு காவல் நிலைகள் அமைக்கப்படுகின்றன. அத்திவாரங்களைச் சிதிலமாக்கி இராணுவ வண்டிகள் ஓடுவதற்குப் பாதை அமைக்கப் படுகின்றது.

இது கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அவர்கள் சென்று பார்வையிட்டிருக்கின்றனர். ஆயினும் அது குறித்த பதில்கள் அளிக்கப்படவில்லை, எவர் எந்தப் பதிலைஅளித்தாலும் அழிக்கப்பட்டவை இனி ஈடுசெய்யப்படக்கூடியவையல்ல. இனிமேலும் ஏனையவை அழிக்கப்படாமல் இருக்கப் போவதுமில்லை என்பதையே இவை காட்டுவதாக மக்கள் விசனமடைகிறார்கள்.

இந்த விடயங்கள் தொடர்பாக அரச படைத்தரப்புகள் வழங்கிய உறுதிமொழிகள் உதாசீனம் செய்யப்பட்டது போன்றே வலிகாமம் தென்மராட்சிப் பகுதியில் திருப்திகரமானதாக இல்லாத மீள்குடியேற்றம் பற்றிய உறுதிமொழிகளும் மாறிவிடும் என்று எண்ணத்தலைப்படுவது தவிர்க்க முடியாததே.

இந்த உறுதிமொழிகள் தரப்படுவதற்கு முன்பாகவே ஆரிய குளம் சந்தி- ஆஸ்பத்திரி சந்தி வீதியை மக்கள் பாவனைக்குத் திறக்குமாறு மறியல் போராட்டமும் இடம்பெற்றது. இதற்காகவே பல்கலைக்கழக மாணவர்களும் இரு மாதத்திற்கு முன்பு இராணுவ வாகன போக்குவரத்தை பரமேஸ்வரா சந்தியில் தடுத்தனர். நீண்ட காலமாகியும் சாதகமான விளைவு கிடைக்காத நிலையால் மீண்டும்மாணவர்கள் மக்கள் இணைந்து மேற்படி இரு தடையரண்கள் முன்பாகவும் மறியலில் ஈடுபட்டனர்.

இராணுவத்தரப்பு வெகுஜன அமைப்பு பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களோடு பேசிய போதும் இதற்கும் ஒரு முடிவு எட்டப்படவில்லை. யாழ்குடாநாட்டில் வீதிகளை போக்குவரத்துக்குத் தடுத்திருப்பதன் பாதகமான விளைவுகள் உயிரிழப்புகளாக இப்போது மாறத்தொடங்கி விட்டன. அதிகரித்துவிட்ட வாகனப்போக்குவரத்து சனநடமாட்டம் என்பவற்றுக்கு ஈடுகொடுக்க நகரவீதிகள் போதுமானதல்ல. இந்த நிலையில் வீதி நடுவே காவலரண்களும் முளைத்திருப்பது விபத்துக்களை அதிகப்படுத்தியிருக்கிறது. பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற உயிழப்புக்கு இதுவே காரணமென சாரதிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இவை இழந்துபோன போராட்டங்களுக்குரியதாக மாறிவிட்டன. இப்போது சிறிலங்காப் படையினரால் காணாமல்போனவர்களின் பெற்றோர் உறவினர்கள் யாழ் அரசசெயலகத்தை ஸ்தம்பிக்கச் செய்யத்தொடங்கிவிட்டனர். தொடங்கியுள்ள இந்தப் போராட்டம் இது விடயத்தில் முதலாவது அல்ல. முன்னரும் மேற்கொள்ளப்பட்ட அரச செயலகத்தை இயங்கவிடாது தடுக்கும் போராட்டம் அரசியல்வாதிகளினது வாக்குறுதிகளால் நின்றுபோயின.

காரணமற்றுக் கைது செய்யப்பட்டுகாணாமல் போன அறுநூறுவரையானோரின் நிலைபற்றி எந்தத் தகவலும் அரசினால் தரப்படாத நிலையில் துயரம் பீறிடும்முகங்கள் முற்றுகையை திரும்பவும் தொடங்கியுள்ளன. இப்போருக்கு எப்படி முடிவுகட்ட அரசியல்வாதிகள் தயாராய் உள்ளனர் என்பது தெரியவில்லை.

போராட்டம் மூலமாகவே தமிழர்கள் தமது வாழ்வுரிமையை பெற நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்ட நிலையில் வன்முறை தழுவிய போராட்டம் தொடங்கியது: இப்போது ஓய்ந்துள்ளது. உயர் உடமைகளுக்கு சேதாரமற்ற இப்போதைய போராட்டத்தைக்கொண்டு அரசியல் அறிக்கைப்போர் நடத்தவும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு தீனி போடவும் முயலும் சக்திகள் கடந்த ஆட்சியின் போது எதனைச்சாதித்தன? எந்த சாதனைகளின் பலத்திலும் இப்போது இவற்றைக் கொச்சைப்படுத்த முயல்கின்றன? என்ற கேள்விகளைக்கேட்கத் தொடங்குகிறார்கள் மக்கள் கடையடைப்பு. பகிஷ்கரிப்பு போன்றவற்றால் பொருளாதாரம் இயல்பு வாழ்க்கை என்பவற்றில் ஒரு சிறு பாதிப்பு ஏற்படவே செய்கின்றது: இது எல்லோராலும் உணரப்படுகின்ற ஒன்றுதான்.

ஆனால் அதைவிடவும்வேறு என்ன வழி உடன்படிக்கை மூலமாகப் பெறவேண்டியவற்றைப் பெறஇருக்கின்றது? மீண்டும் வன்முறை தழுவிய போரைத் தொடக்கவேண்டும் என்றா அவர்கள் கூறுகின்றார்கள் என்று உண்மையை தெரிந்த எல்லோரும் கேட்கின்றனர். ■

## உள்ளத்தை உருக்குபவை



**க**ணகாலமா இந்த விசயத்தைப்பற்றி சொல்ல வேணுமென்று நினைக்கிற நான் விசயத்தை சுற்றி வளைக்காமல் நேர விடயத்திற்கு வருவம். விசயம் உதுதான்.

நாங்கள். நாங்கள் என்டா நீங்களும் தான் ஒரு கலியாண வீடு, அல்லது பூப்புனித நீராட்டுவிழா என்று ஊரில ஏதாவது விசேசம் நடந்தா என்ன செய்யிறம்.

அந்தரித்து பறந்து எங்களிட்ட இல்லாட்டியும் யாரிட்டை கடன் பட்டாவது காசோ, பொருளோ கொண்டு அங்க போய் நாலு படத்திற்கு போசும் கொடுத்து இதையும் கொடுத்து விட்டு வாரம்.

ஆனால் ஒரு செத்த வீடு நடந்தா அதுக்கு போறம் ஆறுதல் சொல்றம். பிறகு என்னண்டா எட்டு வீடு, திவசம் எண்டும் அங்க போய் வயிறுமுட்ட சாப்பிடு சாப்பிடு என்று சாப்பிட்டு விட்டு என்ன செய்யினம் எண்டா.

உந்த கறிக்கு உப்புக்காணாது, இஞ்ச உருளைக்கிழங்கு கறி வைக்கல்ல என்று வியாக்கியானம்... எப்பிடியிருக்கு கதை.

உப்பிடித்தான் புருசனை இழந்த ஒரு பெண்மணி கணவனின் திவசத்தை தன்னட்ட இருந்த நகையெல்லாம் வித்துச் சுட்டு தன்னால இயன்ற அளவுக்கு செய்ய எங்கடையாக்கள்

அங்கை போய் தங்கட வியாக்கியானம் பேசியிருக்கினம். அதோட குடும்பத்தோடு போய் ஒரு வெட்டு. ஆனால் போனது வெறுங்கையோட.


உண்மையில உந்த கணவனை இழந்த பெண்ணுக்கு தங்களால இயன்ற பணத்தையோ பொருளையோ கொடுத்து துக்கம் விசாரித்து ஒரு ஆறுதல் கொடுத்திருக்க வேணும்.

இதை எங்கடயாக்கள் எத்தனை பேர் புரிந்து கொள்ளினம்?

-வேழினி-

அது ஒரு மே மாதம். ஆசியா அமெரிக்க காங்கிரஸ் தலைமைக் கமிஷன் முன் ஒரு குரூரமான கதையைச் சொல்பவனாக நான் நின்றேன். இதனை நேரில் கண்டவர்களான பலர் ஐக்கிய ராச்சியத்துள்வந்து குடியேறி விட்டனர்.

இந்த கொடிய அடக்கு முறை கொண்ட படையில் நிருபண



செய்திகளைத் திட்டமிட்டுத் தருவது சவாலாகும். இவற்றில் அரசாங்கத்துக்கு விசுவாசமான . செய்திகளே உயர்ந்தவையாக தேர்வு செய்யப்படும். தேசத்து ரோக வகையான செய்திகள் வராது. அதிக மக்களால் விரும் பப்படும் உள்ளூர் செய்திகள் ஒலிபரப்பாகும்.

# “சுதந்திரத்தைத் தேடுவோருக்கு தகவல்களே ஆயுதம்

தமிழில்: தமிழ்க்கவி



சாட்சியாக ஆம்-சைனா, வியட்நாம், தென்கொரியா கம்போடியா,பர்மா,திபெத், லாவோஸ் ஆகிய இடங்களிலிருந்து ஐக்கிய நாடுகளில் குடியேறிவிடத் தூண்டிய எண்ணங்களின் சாட்சியாக கொமிசன் முன் விசாரணை செய்யப்பட்டேன். அது Radio Free Asia என்றழைக்கப்பட்ட வானொலிக்காக .

அரசின் எல்லையற்ற சர்வாதிகாரத்தால் நசுக்கப்பட்டு ஓட்டம் பிடித்த மக்கள்,மனித குலத்தில் இருபத்தைந்து வீதம் ஒன்று தசம் மூன்று மில்லியன் மக்களைப் பற்றிநேரடியாக அந்தப் பிரதேசத்திலிருந்து உலகுக்கு கொண்டு சென்றது அது.

அவர்கள் புதிதாக அதிகம் சொல்லவில்லை. “இது பயங்கரமானவர்கள் வாழும் பூமி-இந்த நிலையை மாற்றும் பரிகாரத்தை அவர்கள் முன்வைக்கப் போவதான அத்தாட்சிகளை அழுத் தம்கொடுத்து முக்கியத் துவம் கொடுத்துப் பேசினர்.

தகவல்கள், இப்போது நாங்கள் கொம்யூனிஷ்டுகள் ஏன், எதற்கு அதிகம் பயந்தார்கள் என்று அறிந்தோம். இது சோவியத் சாம்ராச்சியத்தை அடியோடு சாய்த்த விடயம். இன்னும் மக்களைத் தோற்கடித்த எண்ணங்களை அது கொண்டிருந்தது. சிறிதளவு செலவையும், கொஞ்சம் முயற்சியையும் வைத்து ஒப்பற்ற கூட்டுகளை உடைத்தது ஐக்கியநாடுகளுக்கு லாபமே.

ஷஹீ - முன்னைநாள் புதிய சீன நியூஸ் ஏஜென்சியின் நிருபர்-பின்னர் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியவர். தனது தாய்நடான சீனாவைப்பற்றி கூறியதாவது.

“ஒரு கட்சி ஒரு நாட்டின் அரசாங்கமாக இருந்து சகல விடயங்களையும் கட்டுப் பாட்டில் வைத்திருந்தது. பிறப்புகளுக்கான நேரம், உணவுப் பங்கீடு,அந்தரங்க நகர்வுகள், தனிப்பட்டவர்களின் தொழில்கள் கற்பனைகள் கொள்கைகள், போக்குகள், அனைத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது சீன அரசாங்கம்.”

மிக விரிவான கிழக்கு நாடுகளுக்கான பத்திரிகை சீனாவை உள்ளடக்கியதாகும். தினன்மென் சதுக்கத்தில்1989ல்-பேராசிரியர்களும் பத்திரிகையாளர்களும் நீக்கப்பட்டோ சிறையிலிடப்பட்டோ, அல்லது கொள்கைகளுக்கேற்ப தூய்மை செய்யப்பட்டோ இருந்தனர்.

எங்கும் கொம்யூனிஸ்டுகள் சூழ்நிலைகளை நியாயமற்ற தாக்கினர்.

தென்கொரியா வானொலிகள் ‘டயல்’கள் இல்லாமலே தயாரிக்கப்பட்டன. நிரந்தரமாகவே அரச ஒலிரப்பையே கேட்கவேண்டும். லாவோஸ் வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி என்பவற்றுக்கான கருவிகள் அரசுடமையாக இருந்தன. வெளியாலிருந்து வரும் கடிதங்கள் இரகசியப் பொலிசாரால் வாசிக்கப்பட்ட பின்பே வழங்கப்பட்டன.

இந்த அடக்குமுறைகளுக்கு தக்க பதிலாக‘ரேடியோ ஃபிரீ ஏசியா’ இருக்கும் என ஐக்கிய நாடுகளின் கூட்டிணைப்பு நம்பியது. லிபரல்கட்சியும் கொன்சவேட்டிவ் கட்சியும் இம்முயற்சியில் பின்வாங்கின. ஆசிய அமெரிக்கக் குழு இதற்கு ஆதரவு தேட முயன்றன. ஆனால் ஐக்கிய நாடுகள் ஒத்துக்கொள்ளவில்லை. இன்னும்கூட.

ஐக்கிய நாடுகள் பனிப் போருக்கான வழியாக இரண்டு வகையான ஒலிபரப்புகளை வைத்திருந்தது. ஒன்று தேசிய ஒலிபரப்பு என அழைக்கப்பட்டது. உதாரணமாக (B.B.C) பி.பி.சி உலக சேவை பிரிட்டனிலிருந்து ஒலிபரப்பானது. ஐக்கிய நாடுகள் வொய்ஸ் ஒவ் அம்மேரிக்கா என்ற நிலையங்களை வியக்கத் தக்க முறையில் இயக்கத் தொடங்கியது. இது உலகின் நாற்பத்தேழு மொழிகளில் வாராந்தம் நூற்றியிருபது மில்லியன் மக்களால் கேட்கப் படுகிறது. இதில் குறைந்த பட்சமாக பதினாறு மில்லியன் சீன மக்களும் அடங்குவர்.

இந்த ‘VOA’ எனப்படும் வொய்ஸ் ஒவ் அம்மேரிக்க ஒலிபரப்பு, செய்திகள், அமெரிக்கா பற்றிய விவரணங்கள்,அரசாங்க தலையங்கக் கட்டுரைகள், ஆங்கில மொழிபற்றிய கற்பித்தல், உலகப்பிரசித்தியான செய்திகள் இவற்றுடன் உள்ளூர் செய்திகளும் மிகக் குறைந்தளவு கேட்கும் நாடுகள் பற்றியது என ஒலிபரப்புச் செய்தது.

செய்திகளைத் திட்டமிட்டுத் தருவது சவாலாகும். இவற்றில் அரசாங்கத்துக்கு விசுவாசமான செய்திகளே உயர்ந்தவையாக தேர்வு செய்யப்படும். தேசத்து ரோக வகையான செய்திகள் வராது. அதிக மக்களால் விரும் பப்படும் உள்ளூர் செய்திகள் ஒலிபரப்பாகும்.

1950களின் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் ஊதியம் கொடுத்தும் கொடுத்த உள்ளக செய்திகளாக கிழக்கு ஐரோப்பிய சோவியத் யூனியன் நாடுகளின் செய்திகள் இருந்தன. இவற்றை ஒலிபரப்புவதன் உட்கருத்து பயணிகளையும் பத்திரிகையாளர்களையும் கருதியதாகும். அகதிகள், இரகசியப்பத்திரிகைள் போன்றவை இவ் ஒலிப்ரப்பைக் கண்காணிப்பதன் மூலம் பத்திரிகைத்துறை ஒலிபரப்புத் துறை என்பன பற்றி கற்றுக் கொண்டு வருகின்றன. இந்தச் செய்திச் சேவைகள் ரேடியோ ஃபிரீ யூரோப்-(RFE) ரேடியோ லிபர்டி(RL) போன்ற நிறுவனங்கள் உள்நாட்டுத் தொடர்புகளை ஓரிடத்திலேயே VOAக்கு வழங்குகின்றன. பதில் ஒலிபரப்பொன்று வீடுகளுக்கான சேவையாக (Home Sevuice) நடைபெறுகிறது. முழுமையான தகவல்கள் அனைத்தையும் நாடுகள் முழுவதும் இலவசமாகவே பெறுகின்றன. RFL `வானொலியும் RL வானொலியும் இருபத்து மூன்று மொழிகளில் பதினாறு வலயங்களில் ஒலிபரப்புச் செய்கின்றன. இவற்றுள் ருஷ்யன், போலிஷ்லித்துவேனியன், தஜாகி, உஸ்பெக் என்பவையும் அடக்கம். இவ்விரு வானொலிகளும் தனியே செய்திகளை ஒலிபரப்புவதில்லை. இவர்களது பத்திரிகையாளர்கள் குடியேறியவர்களாகவிருப்பதும் ஒரு காரணம். அரசியல் தலையங்கம், வரலாறு,சினிமா,நாடகம், சமயம், கோவில்,தேசிய கலாசாரங்கள் என பலதரப்பட்டவை ஒலிபரப் பாகும்.

இவ்விரு ரேடியோ அலைகளையும் அழித்துவிட கொம்யூனிஸ்ட்டுகள் நிரம்ப முயன்று வருகின்றனர். எனினும் மில்லியன் கணக்கான மக்கள் இருளிலிருந்து வழிகாட்டியாக திகழும் எமது ரேடியோ என தம்மை இதைக் கேட்பதற்கே அர்ப்பணித்து வருகின்றனர்.

போலிஷ் வர்த்தக கூட்டணி இந்த வானொலியின் செய்திகளை இரட்டடிப்புச் செய்ய சில முக்கிய முயற்சிகளை மேற்கொண்ட போதும், அது அவர்களுக் கெதிராக ஆபத்தான நிலையின் உச்சத்துக்கே சென்றது. இதையிட்டு அன்றைய சனாதிபதி லீச் வோல்சா கூறியதாவது; .“சூரியனைத் தவிர அவர்கள் உலகம் முழுவதையும் பிடிப் பார்கள்” என்பதாகும்.

அப்போது செக்கஸ் லோவேக்கிய சனாதிபதி வக்லோவ்ஹவெல், ‘வீட்டிலும் வெளியேயான பரந்த உலகெங்கிலும் இந்த ரேடியோ ஃ. பிரீ ஏசியா மூலம் தரும் தகவல்களால் அனைத்து சூழ்நிலை

உண்மைபோல் கருதக்கூடிய அநேக தகவல்கள் வீடுகளில் கேட்கும் வானொலிகளூடாக எடுத்துச் செல்லப்படுகிறது. துர்ப்பாக்கியமாக புலனாய்வு விசாரணைகள், இதழியல் விவரணங்கள் என்பவை தமக்கிடையே ராஜதந்திரிகளால் இணக்கம் காணப்படவேண்டி யிருப்பதால் சேவையில் சிறு இடைவெளிவருகின்றது.

களுமே உள்வாங்கப்படுகிறது’ என்றார். வெளியுறவு அமைச்சர் ‘எஸ்தோனியா’வின் பெயர் இந்த RFL,RL சேவைகளுக்காக அமைதிக்கான நோபல் பரிசுக்கு விதந்துரைக்கப்பட்டது.

கிழக்கைரோப்பிய புதிய தேசிய குடியரசு, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகள் இவ்வொ லிபரப்பை தொடர்ச்சியாகக் கேட்டதன் பின் - புதிய ஊடகவியற் கொள்கை மாதிரிகளை அளித்தது. ஆனால் இவையாவும்இந்த நூற்றாண்டை குடியரசுக்கான ஆண்டாக துரிதமாகத் திருப்பியது.

இப்படியொரு சுதந்திரத்துக்காக ஏற்கனவே ஆசிய நாடுகள் ஏன் முயலவில்லை? அண்மைக் காலம்வரை இதற்கான இரு நல்ல காரணங்கள் இருந்தன. ஒன்று ஐக்கிய ராச்சியத்தில் கொள்கை வகுப்பாளர்கள் அமெரிக்காவுக்கு மிக அதிகமான அக்கறையுள்ள விசயத்தை கவனித்தனர். சோவியத்தின் நிலையை நோக்கி சீனாவைப் பின்தள்ளுவது. இரண்டாவது 1970களின் பிற்பகுதியில் தனிப்பட்டவர்களின் சுதந்திரத்துக்குச் சான்றாக உறுதியாக அளவோடு சீனாவுக்குப் பூப்போட ஆரம்பித்தது.

இப்போது சோவியத் யூனியன் இல்லை. 1989 யூன்-4ல் தினமென் சதுக்கத்தில் நடந்த சுதந்திரத்துக்கான இயக்கம் குரூரமாக நசுக்கப்பட்டபோது மனித உரிமைகள்அமைப்புகள் அதிர்ந்து நின்றன.

சீனாவின் அமெரிக்க எழுத்தாளர் பெற்றா பாவோலோட் (Bette Bavlord)யின் கருத்து (RFL)ரேடியோ.ஃபிரீ ஏசியா-ஐக்கிய நாடுகளால் பரீட்சிக்கப்பட்டபோது மானிட உண்மைகளை விஞ்சி நிற்பதாகக் காணப்பட்டது. காரணம் சீன மக்கள் உலகில் வேறெங்கும் உள்ள மக்களைப் போன்று-சுதந்திரத்தைத்தேடினர். அவர்கள் தமது வரலாற்றையும் சொந்தக் கலாச்சாரத்தையும் அறிய விரும்பினர். தமது நாடு எப்படி எங்கே போய்க் கொண்டிருக்கிறது என அறிய விரும்பினார்கள்.

இன்று தகவல்களைப் பொறுத்த மட்டில் சீனா அவற்றை இரும்புத் திரையைப் போட்டு மூடியுள்ளது. அமெரிக்க பொழுது போக்குகள்-படங்கள்,இசை தொலைக்காட்சி என்பன சில வேளை கிடைக்கலாம். வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஊடாக ஏனைய வெளிநாடுகளின் சேவைகள் செய்மதிக்காட்சிகள் போன்றவற்றை C.N.N ஊடாகவும் சீனமக்கள் காணமுடிகிறது. இதனால் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை அறியலாம். ஆனால் சீனாவில் என்ன நடக்கிறது என்பதை அதிகம் அறிய முடியாது. கொம்யூனிஸ்ட் கட்சியானது அரசின் கட்டுப்பாட்டிலேயே வானொலி-தொலைக்காட்சி, பிரசுரங்கள், படங்கள் என்பவற்றை வைத்துள்ளது. பாரம்பரிய வெளிநாட்டு ஒலிபரப்புகள் வித்தியாசமான எதையும் செய்யமுடியாது. வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் சீன சேவையை உதாரணமாகச் சொல்லலாம் - இதன் ஒரு மணித்தியாலய சேவையில் முதன்மையாக சீனாவின் அறிக்கைகளே இடம்பெறும்.

எனவே 1991 இன் நடுப்பகுதியில் ஐக்கிய ராச்சியத்தின் காங்கிரஸ் உறுப்பினர்கள் R.F.L-ல் சக்திவாய்ந்த விறுவிறுப்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தினர். இது சீனத் தலைவர்களின் ஆத்திரத்தைக் கிளறுவதாக அமைந்தது.

இந்த உண்மைக்குப் புறம்பல்லாத விடயங்கள் அமெரிக்காவின் திட்டங்களுக்கு மட்டும் எதிரானவை அல்ல. சீனாவின் ஆட்சி வயது முதிர்ந்தோர் ஆட்சி-ஒவ்வொருவரும் எண்பது வயதுக்கு மேற்பட்டோர். இவர்களிடமிருந்து சீனமக்கள் விடுவிக்கப்படுவர். மக்கள் தங்கள்மேன்மையான சுதந்திரத்தை பெறுவார்கள். ‘தெய்வீக சுதந்திரம்’அவர்களால் தினமென் சதுக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட அந்த சுதந்திரம்.

இன்னொரு ஆட்சேபனை (RFL) ரேடியோ.ஃபிரீ ஏசியா தன் நிதியை வொய்ஸ் ஒவ் அமெரிக்காவிடமிருந்து பெறுகிறது. சீன மக்களுக்குத் தேவையான தகவல்களைக் கொடுக்கிறது. ஆனால் இந்த வானொலிக்கான முழுச் செலவுடன்,செய்திகளையும் -வொய்ஸ் ஒவ் அமெரிக்கா விடமே உரிமையுடன் எடுத்துக் கொள்கிறது. சென்ற ஆண்டுகளில் வெளிநாட்டு ஒலிபரப்புகளுக்கான விடயங்களை புலனாய்வு செய்வதற்கான தனிப்பிரிவொன்று ஐக்கிய நாடுகள் தலைவரால் நியமிக்கப் பட்டுள்ளது. இதன் நீண்ட ஆய்வுக்குப் பின்- ஒன்றுக்கு இரண்டு என்றளவில் வொய்ஸ் ஏவ் அமெரிக்காவின் பரப்புரை சீனாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் விரிவு படுத்தப் பட்டுள்ளது.

உண்மைபோல் கருதக்கூடிய அநேக தகவல்கள் வீடுகளில் கேட்கும் வானொலிகளூடாக எடுத்துச் செல்லப்படுகிறது. துர்ப்பாக்கியமாக புலனாய்வு விசாரணைகள், இதழியல் விவரணங்கள் என்பவை தமக்கிடையே ராஜதந்திரிகளால் இணக்கம் காணப்பட வேண்டியிருப்பதால் சேவையில் சிறு இடைவெளி வருகின்றது. ரேடியோ ஃபிரீ ஏசியா என்ற ஒலிபரப்பு நிறுவனம் அமெரிக்கன் நீலப்பட்டிச்சபையால் நடத்தப்படுகிறது.இதன் நிர்வாகம்,தயாரிப்பு ஊழியர்கள் அனைவரும், வானொலி கேட்கும்நாடுகளில் இருந்து வந்தவர்களே.

இறுதியாக அழகான நாடு எனச் சீனர்களால் அர்த்தங் கொள்ளப்படும் அமெரிக்கா என்ற சொல் சீனாவுக்கோ ஏனைய ஆசிய நாடுகளுக்கோ வழங்குவது. அவர்களுக்கானவை அல்ல. அது அமெரிக்காவின் நலன் பற்றியது. எவ்வகையிலும் ஒரு தேசத்தின் பார்வை அது தன் திட்டங்களை விடாப்பிடியாக விருத்திசெய்வதிலேயே இருக்கும். ■

மூலம்: Time for Radio Free Asia
By. Ben Wattenberg

சிறுகதை

# விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர்

கரிய புகையைக் கக்கியவாறு பேருந்து புறப்படுகிறது. வீதியோரங்களில் நின்ற தென்னை மரங்களும், உயர்ந்த பனைகளும் அதனிடையே தெரிகின்ற சிறு குடிசைகளும் அந்தக் கிராமத்தின் சின்னங்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. பச்சைப் பசேலெனப் பரந்த வயல்வெளி, கழுத்து முட்டும் நீருக்குள் நின்று தலையை அசைக்கும் பயிர்கள், அந்த வயல்வெளியைத் தடவிச் செல்லும் மெல்லிய காற்று, வரம்புகளில் இருந்து கூட்டம் கூட்டமாப் பறக்கும் வெள்ளைக் கொக்குகள் அத்தனை காட்சிகளையும் இரசித்தவாறு பேருந்து ஊர்ந்து கொண்டிருக்கிறது.

நிரோவை அத்தனை காட்சிகளும் கொள்ளை கொண்டிருக்க வேண்டும். அவளின் மௌனம் அதனை வெளிக்காட்டியது. அவளின் மழலைப் பேச்சு,புதுமையைக் கண்டு துள்ளும் மனம், 'குழப்படி' என செல்லமாகச் சூடப்பட்ட பட்டப் பெயர் அனைத்தையும் மறந்து அமைதியாக இருந்தாள்.

நிரோவின் ஆறு வயது வாழ்க்கையில் இதுதான் நீண்டதூரப் பயணம். மாடிவீடுகள் கூட அவளுக்கு விசித்திரமான காட்சியாகவே இருந்தது. அவள் வீதியின் இருமருங்கையும் பார்க்க முடியாமல் சிரமப்பட்டிருக்க வேண்டும். தாயிடம் கேட்ட கேள்வி அதனை வெளிக் காட்டியது.

''அம்மா,வரரேக்கயும் இதாலதானே வருவம்''

'நிரோக்குட்டி, ஏனடா அதைப்பற்றி யோசிக்கிறாய்'

''இல்லம்மா, நாங்க வரேக்க அங்காலப் பக்கத்தில இருந்து வருவம். அப்பதாம்மா, அங்காலயும் பாத்துக்கொண்டு வரலாம். அங்காலயும் இப்படி பெரிய வீடெல்லாம் இருக்கும்''

எனச் சொல்லிக்கொண்டே தாயின் பதிலை எதிர்பார்க்காதவளாய் பார்வையைச் சாலையோரங்களை நோக்கிப் படரவிட்டாள்.

''ஏன்டா நிரோக்குட்டி வரரேக்க இந்த இடத்திலேயே இருந்தா அங்காலப் பக்கத்தையும் பார்த்துக்கொண்டு வரலாம்தானே''

இந்தப் பதில் அவளைச் சிந்திக்கச் செய்திருக்க வேண்டும். நிரோ சில நொடிகள் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்ணிமைக்காமல் பார்த்தால் எதையோ யோசிக்கிறாள் என்று அர்த்தம்.


பேருந்து தனது சுமையை மேலும் அதிகரித்துக் கொண்டு, திருமலை என்ற பெயர்ப்பலகையைக் கடந்துகொண்டிருந்தது. கிழக்கில் இருந்து சூரியன் வீசிய ஒளிக்கற்றைகள் பேருந்துக் கண்ணாடியில் பட்டுத்தெறித்தன.

''வவுனியாவுக்குப்போக இன்னும் ஒரு மணித்தியால மாவது எடுக்கும்'' என உதடுகள் உச்சரிக்க, கமலம் சீற்றில் சாய்ந்து கொண்டிக்கிறாள்.அவளின் ஒப்புதலின்றி இமைகள் மூடுகின்றன. தர்மனின் 18 வயதுத் தோற்றம் அவளின் மனக்கண்ணில் படமாய் விரிகிறது. அவனின் நிமிர்ந்த நடை, ஒளிவீசும் வட்ட விழிகள், பிறர் துன்பப்படுவதை தாங்கிக்கொள்ள முடியாத மென்மையான மனம்,'வெள்ளையா' என நண்பர்கள் அழைக்கும்போது பல்லுத்தெரியாமல் மலரும் அவனது புன்சிரிப்பு, அமைதியான 'பேச்சு, .'நல்ல நண்பர்களே சிறந்த புத்தகம்' என அவன் அடிக்கடி கூறும் மந்திரம், தற்காலிகத்திற்கு இடம் அளிக்காத சுபாவம். அவனிடமிருந்து கற்றுக் கொள்ளத்தோன்றும் நற்பண்புகள். எண்ணைவைச்சு, நான் தலைசீவிவிடுவதிலேயே திருப்திப்படும் குழந்தைப் பிள்ளைமனம்.

இந்த வயசிலேயும் அம்மாவோ எண்ணை வைச்சுத் தலைஇழுக்கவேணும்''

அப்பாவின் குரல்...

''அம்மா நீங்கள் அப்படி



நினைக்கலத்தானே''

அவனுடைய எதிர்வாதம் மீண்டும் அப்பாவைக் கதைக்க விடாமல் தடுத்துவிடும்.

''தர்மனின் குணநடையெல்லாம் கமலத்தைப் போல தான்'' எனப்பலர் சொல்லக்கேட்டு நானே எனக்குள் பெருமைப்படுவேனே...

இப்ப என்ர பிள்ளை என்ன செய்வானோ...?

கடித்தில் கூட...

''அம்மா என்னைப் பார்க்க வராதீர்கள். நான் நலமாகத்தான் இருக்கின்றேன். உங்களைப் பார்க்கப் பிடிக்கவில்லையென்று நினைத்து விடாதீர்கள். நீங்கள் என்னைப் பார்க்கஎவ்வளவு ஆவலாக இருக்கிறீர்களோ, அதேபோல்தான் நானும் இருந்தாலும் வரும்போது எவ்வளவு துன்பப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் எப்போதும் கவலைப்படாமல் இருப்பதையே விரும்புகின்றேன். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் உங்கள் முகங்களையே பார்க்கின்றேன்''

இப்படி ஒரு வருடத்திற்கு முன் ஒரு கடிதம். கமலத்தின் விழிகள் கண்ணீரில் தத்தளித்தன. சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டவள் பேருந்து நிற்பதை உணர்ந்து தலையை நிமிர்த்துகிறாள்.

''இம்..வவுனியா வந்துவிட்டது'' எனப் பெருமூச்சுடன் கலந்த வார்த்தை.

-கருமணி-

கமலம் நிரோவின் கையைப் பற்றிக்கொண்டு நிதானமாக இறங்கி வீதியோரத்தில் நடந்து கொண்டிருக்கிறாள். நிரோ தாயின் அன்புப் பிடியில் சிக்கியிருந்தாலும்,அவளது விழிகளுக்குள்ளும் வவுனியா 'ரவுண்' சுழன்று கொண்டிருந்தது. இடைவிடாத வாகன ஓட்டங்களும், சனக்கூட்டங்களும், கடைகளின் அலங்கரிப்புக்களும் பிஞ்சு விழிகளுக்கும் பெரும் விருந்தாகவே இருந்தன.

''நிரோக்குட்டிக்குப் பசிக்குதோ''

'' ஓம்... அம்மா...''

'' நிரோக்குட்டிக்கு என்ன சாப்பாடு வேண்டித்தாறது''

''கேக்''

''கேக்க விட்டா வேற சாப்பாடே கிடையாது நிரோக்குட்டிக்கு''

சொல்லிக்கொண்டே கடைக்குள் நுழைந்தாள் கமலம்.

''அம்மா அண்ணாவுக்கும் வாங்கி வைக்க மறந்திடாதீங்கோ''

''அம்மா போட்டோவும் கவனம்''

நிரோவின் பேச்சுக் காதில் எட்டவில்லை., கமலம் தர்மனுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் வாங்கித் தோள்பையுள் திணித்துக்கொண்டிருந்தாள்.

''நிரோ போவோமே''

இருவரும் புதுக்குடியிருப்புப் புறப்பட இருந்த பேருந்தில் ஏறி அமர்ந்தர்கள்.

இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது போல் பேருந்து புறப்படுகிறது.

பெரிய வீடெல்லாம் வருமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த நிரோவிற்கு ஏமாற்றமாக இருந்தது. கமலத்திற்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். கமலத்தின் பரபரப்பான விழியசைவு அதனைத் தெரிவித்தது. கூரையிழந்த பாடசாலைகளும், தரைமட்டமான வீடுகளும்,வடுக்களைச் சுமந்து கொண்டிருந்த மரங்களும், வாகனத்தின் வேகத்திற்கேற்ப பின் வாங்கிக்கொண்டிருந்தன. அத்தனை காட்சிகளும் வன்னியில் நடந்த பெரும் சமருக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.

''ஏனம்மா வீடெல்லாம் இடிஞ்சுபோய்க் கிடக்குது,? ஆக்களெல்லாம் எங்கம்மா போயிருப்பாங்க...''

''வன்னியில பெரிய சண்டை நடந்தது என்று சொல்லுவினமே: இதுதாண்டா நிரோக்குட்டி அந்தச் சண்டை நடந்த இடம். எங்கட பேரம்பலம் மாமாவின்ர மகன் பெரிய சண்டையில வீரச்சாவடைந்ததென்று சொல்லுச்சினமே. இந்த இடத்திலதான்''

''எங்கட சீனுவின்ர அண்ணா எனம்மா''

''ஓமடா..'' ''எங்கட அண்ணாவும் இந்தச் சண்டைக்கு வந்திருப்பார் எனம்மா...''

''இம்...''

கமலம் ஒவ்வொரு இடமாக வரவர நிரோவுக்குச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

நிரோவின் குட்டிக் கேள்விகளும் கூடிக்கொண்டே இருந்தன. எதிரியின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றால் கமலம் தங்களைப் போராளி குடும்பமெனக் காட்டிக் கொள்ளாமல் நிரோவின் கேள்விகளைத் திசை திருப்பியிருப்பாள்.

பேருந்து கண்டி வீதியிடம் விடைபெற்றுக்கொண்டு சிறு வீதியில் இறங்கி ஊர்களைத் தாண்டிச் செல்கின்றது.சில்லுகளின் வேகத்திற்கு அந்த வீதி தடையாகவே இருக்கிறது.

வட்டக்கச்சியை அழகுபடுத்தும் கமுகு மரங்களும், மாமரங்களும் வீராப்புடன் வரவேற்றன. பள்ளங்களைத் தரிசித்தவாறு, பேருந்து ஊர்ந்து கொண்டிருக்கின்றது. பேருந்தின் வேகமும், மகனைப் பார்க்கும் கமலத்தின் ஆவலின் வேகமும் மாறி மாறி போட்டி போட்டன.

''அம்மா...அது....''

''அதுதாண்டா நிரோக்குட்டி துயிலுமில்லம்...''

''என்னவடிவாய் இருக்குதம்மா: பார்த்திட்டுப் போவோமே...''

''நாளைக்கு நாங்கள் அண்ணாவோடு வந்து பார்ப்பம்...''

மூங்கிலாற்றின் சலசலப்பும், அதனிடையே மூங்கில்களின் அசைவும்,ஓசையும் பறவைகளின் ஜாலங்களும் மாலைப்பொழுதை மகிழ்வித்தன.

பேருந்து புதுக்குடியிருப்பை வந்தடைந்த திருப்தியோடு நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி அமைதியாய் நின்றது. கமலமும்,நிரோவும் இறங்கி, திருமலைத் தொடர்பகத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள். கமலத்தின் நடையின் வேகத்திற்கு நிரோவின் பிஞ்சுக்கால்கள் ஈடு கொடுக்க முடியவில்லை. கையைப் பற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். அந்தப் பெண் சொன்ன அடையாளத்தின்படி நீலக்கேற்றை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

''அம்மா, வாங்கோ''

அந்தப் போராளின் வரவேற்பு பாதிக்களைப்பை போக்கியிருக்க வேண்டும். நிரோவின் நெற்றியில் இருந்து கன்னத்தை நோக்கி ஓடிவந்த வியர்வைத் துளியைக் கமலம் தனது சேலைத் தலைப்பால் ஒற்றி எடுக்கிறாள்.

''யாரையம்மா பார்க்கப் போறியள்''

''என்ர மகன், இயக்கப்பெயர் கர்ணன்''

''எந்தப் பிரிவென்று...''


''அது தெரியாது தம்பி''

சில வினாடிகள் யோசித்த அந்தப் போராளி

''வீட்டுப் பெயர் என்னம்மா''

'தர்மன்''

பெயர்களைப் பார்த்தா ஆள கொடைவள்ளலைத்தான் இருப்பார்



போல''

சிரித்துக்கொண்டே

''இருங்கம்மா வாறன்''

சொல்லிவிட்டு அந்தப் போராளி நடக்கிறான்.

''தங்கச்சிக்கு என்ன பேர்''

தேனீர் கொண்டுவந்த போராளி நிரோவின் மழலைப் பேச்சில் மூழ்கியிருந்தான். கமலம் வாங்கிக் கொண்டு வந்த அப்பிளை அங்கு நின்ற போராளிகளுக்கும் கொடுத்துவிட்டு அந்த அறையில் தொங்கவிடப்பட்டிருந்த மாவீரர் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தப் போராளி திரும்பி வந்தான்.

''வீட்டுப் பெயர் தர்மன் தானே''

''ஓம்... தம்பி''

கமலத்திற்கு குழப்பமாக இருந்தது. மனதிற்குள் ஆண்டவனை பிரார்த்தித்தாள்.

''அடுத்துக் கிடைக்கப்போகும் பதில் மகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும்''

அவளின் மனம் அலைப் போர்வைக்குள் சிக்கி மீள முடியாமல் தவித்தது. படங்களைப்பார்த்துக் கொண்டிருந்வளுக்கு ஒரு உருவம் நடந்து வருவது படத்தில் தெரியத் திரும்பிப் பார்த்தாள். அதே போராளி வந்து கொண்டிருக்கிறான். முன்பு வந்ததைப்போல் அவசரத்தைக் காணவில்லை,

''மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ஏன் தயங்கவேண்டும்''

கமலத்தின் மனம் சக்கரம் போல் சுழன்றுகொண்டது. அந்தப் பதிலில்தான்அவளின் உயிரே தங்கியிருப்பது போல் தவித்தாள் அந்தப்போராளி குறிப்புப்புத்தகப் பக்கங்களைத்தட்டியவாறு வந்து கொண்டிருக்கிறான். அவள் இதயத்துடிப்பு வேகம் அதிகரிப்பதை அவள் உணர்ந்தாள்.

'' என்ன தம்பி, தம்பி வருவானோ''

திடீரென நிமிர்ந்தவன்

''ஓம்....அம்மா... இருங்கோ. பதினைந்து நிமிடத்தில் வருமென்று அறிவிச்சிருக்கினம்''

''அப்பாடா....''

என்று பெருமூச்சு விட்டாலும் மனம் திருப்தியடையவில்லை. வாகனச்சத்தம் கேட்கும் போதெல்லாம் அவளை அறியாமல் எட்டிப்பார்ப்பாள்.

''அம்மா,அண்ணா வரரேலையே...''

''வருவான்''

'நீச்...' என்ற சத்தத்துடன் மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. ஓடிக்கொண்டு வந்த போராளி இறங்கி ஸ்ராண்ட் தட்டி நிறுத்துகிறான். பின்னுக்கிருந்த போராளி இறங்கி அவனுக்காக காத்துக்கொண்டு நின்றான். இருவரும் கையைப் பிடித்தபடி கைதைத்துச் சிரித்துக்கொண்டு வருகிறார்கள்.

''இதில ஆரம்மா அண்ணா?''

கமலம் நன்றாகப் பார்க்கிறாள்.

''ஓ.... அவன்தான் அதே சிரிப்பு: நடையில் அதே வேகம்: கண்ணாடி போட்டுக் கொண்டு வாறானே ''

ஓடிப்போய் கையைப் பிடித்த நிரோ...

''ஏன் அண்ணா எங்களைப் பார்க்க வரல...''

''காய்... என்ர நிரோக்குட்டியும் வந்திருக்கு''

அவளின்ர கையைப் பற்றிக் கொண்டவன்,அந்தப் பிஞ்சுக் கன்னங்களில் முத்தமிட்டான். அவனின் கை அவளின் கன்னங்களில் காதுகளில், மூக்கில் ஓடிக்கொண்டிருந்தது. கமலம் மகிழ்ச்சி தாழாமல் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தாள். வருடலின் ஏக்கம் புரியாத நிரோ

''அண்ணா. உங்களுக்கொரு சாமான் கொண்டு வந்திருக்கிறேன்'' எனச் சிரித்தபடி தோள்பையை நோக்கி ஓடினாள்.

''அம்மா, என்ன எடுக்கப் போறாள்''

''அவள் பள்ளிக்குடத்தில பரிசு வாங்கேக்க பிடித்த போட்டோ கொண்டு வந்திருக்கிறாள்: உனக்குக் காட்ட...''

அம்மா, நீங்கள் கூட இந்த கறுத்த கண்ணாடியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லையா...?'' என மனதிற்குள் விம்பத் தொடங்கினான். தர்மனின் மனதிற்குள் ஒருவித பூகம்பம. ஏதும் அறியாத அத்தாயின் மனதிற்குள் பேரின்பம். படத்துடன் ஓடிவந்த நிரோ,

''அண்ணா, கண்ணாடியைத் தந்திட்டு இந்தப் போட்டோவைப் பாருங்கோ''

கண்ணாடியைக் கழற்றி எடுத்த நிரோ, அதை அண்ணாவின் அசைவற்ற விழிகளை உற்றுப் பார்க்கிறாள்.

'' அம்மா , அண்ணாவுக்கு என்ர கண் மாதிரி என்று பொய் சொல்லிப் போட்டியல்'' கமலத்தின் விழிகள் அகல, ஓ... என வந்த அழுகையை அடக்கி சுவருடன் சாய்ந்து கொள்கிறாள்.

''இரண்டு கண்களுமா...? ''

என ஏங்கிய உதடுகள் சேரமறுக்க, வார்த்தைகள் தடுமாறின.

◆

# உருவகக் கதைகள் இரண்டு

## உழைப்பு

(1)

அவன் உயிர் வாழ்ந்த காலத்தில்..

உலகை மறந்த, சுயத்தை மறந்த, நீண்டநேர உழைப்பு.

கைகள் ஓய்ந்தன தூரிகை நின்றது.

ஓவியம் பூர்த்தியாயிற்று.

அற்புதமான சிருஷ்டி. கலையின் நிறைவு. போதின் புன்னகையில் மலர்ந்த ரோஜா மலரை இரண்டு இலைகளுடன் கிள்ளியெடுத்து, அப்படுதாவிலே செருகி வைத்ததைப் போல... அவ்வளவு அசல்.

'கலையென்பது பிரதியெடுக் கும் விவகாரந்தான். இயற்கை அன்னை தந்துள்ள ரோஜா அநித்தியமானது. இன்று மலர்ந்து, நாளை வாடி, மறுநாள் அது வாழ்ந்த சுவடுந் தூர்ந்து... நான் இப்படுதாவிலே படைத்துள்ள ரோஜா, கலா சிருஷ்டியாக நித்தியத்துவ மெய்தி வாழப் போகின்றது...'

நிறைவிலே துளிர்த்த எண்ண அலைகளைப் பசியுணர்வு விழுங்கத் தொடங்கிற்று. மூன்று நாள்கள் முழுப்பட்டினி. அதன் உக்கிரத்தின் நீள்கரம் அடிவயிற்றைத் துழாவிற்று.

'எனது ஆற்றலைப் பிழிந்து உருவாக்கிய ஓவியங்கள். ஓரிரண்டை விற்றால், ஒரு மாதத்திற்குப் பணக் கவலையே இருக்கமாட்டாது. அற்புதமான ஓவியங்கள் நல்ல விலைக்குப் போகும்...'

முதன் முதலாகத் தனது படங்களை விற்கப் புறப்பட்டான். தன்னம்பிக்கை நிழல் விரிக்க நீள்நடை.

கலாரசனை மிக்க தனவந்தர் களென்று மக்களால் ஏததப்பட்டோர் ஒவ்வொருவருடைய வீட்டுப்படியாக ஏறி இறங்கியாகி விட்டது. ஒவ்வொரு படியாக இறங்கிய பொழுதெல் லாம் நிதர்சனத்தின் வெயிற் காங்கை அவனைச் சுட்டது.

"பைத்தியக்காரா! இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கும் ஓவியங்களை யார் விரும்பப் போகின்றார்கள்...? உனது ரோஜாப்பூ ஓவியத்தை மாட்டி வைப்பதிலும் பார்க்க, தினந்தினம் நூறு அசல் ரோஜாப் பூக்களினால் பள்ளியறையை அலங்கரிக் கலாமே! வாலைக் குமரிகளின் நிர்வாணக் கோலங்களை பல கோணங்களிலே வரைந்து கொண்டு வா. நமது பள்ளியறை களை அலங்கரிக்க அவையே பொருத்தமானவையாக இருக்கும்."

தனவந்தர் சிந்திய ஒவ்வொரு வார்த்தையும் அவனது பிடரியை உதைத்துத் தள்ளியது.

'என் கலையும், கற்பனையும்...! தனவந்தர்களுடைய பாலுணர்ச் சியைக் கிளறவல்ல போதைப் பொருளாகக் கலையை அமைக்க வல்ல கலைஞனே உயிர் வாழ்கின்றான்...'

வீட்டிற்கு வந்தும் மனம் அமைதி கொள்ளவில்லை. அம்மண உண்மையின் சுமை மனத்தை அமுக்கத் தொடங்கிற்று.

பசியை மறந்த ஓர் ஆவேசம்.

தூரிகையை எடுத்தான். கைகள் சுறுசுறுப்புப் பெற்றன.

ரோஜா மலரின் பின்னணியாக இருந்த வெற்றிடத்தில், வாலைக்குமரி ஒருத்தியின் நிர்வாணக் கோலத்தை வரைந்து பார்த்தான்.

'ரோஜாவைக் கொத்துக் கொத்தாகப் பள்ளியறையிலே அடுக்கி வைக்கக்கூடிய தனவந்தர்கள், இந்த மாமிசக் கூடுகளையும் உயிருள்ளவையாக அமர்த்தி வைக்கலாமே! இதில் மட்டும் ஏன் அசலற்ற நகல் தேவைப்படுகின்றது?.

பசிக்களையிலே தலை சுற்றியது. ஓவியத்தின் மீது மயங்கி வீழ்ந்தான். வண்ணங் களைக் கலப்பதற்காகப் பாத்திரத்தில் எடுத்து வைத்திருந்த நீர், கைகளால் தட்டுப்பட்டுக் கவிழ்ந்தது. நீர் ஓவியத்தின் ஒரு பகுதியிற் சிதறியது. படுதாவின் சில பகுதிகளிலிருந்த நூற்பிரிவு களில் நீர் உப்பி, ஓவியனின் கற்பிதத்தின் பிரகாரம் இடம் பெற்றிருந்த நிறங்களுடைய இடங்களையும் அமைப்பையும் மாற்றிச் சிதைத்தது.



ஓவியத்தில், அழிவு கற்பிக்கும் புதுக்கோலம்!

அதனை அழிக்கவோ, திருத்தி எழுதவோ அவன் வாழவில்லை.

அவன் செத்துப்போனான்.

(2)

இன்று, அவன் புகழுடம்பெய்தி வாழ்கின்றான்.

அன்று விலை போகாத படங்களுக்கெல்லாம் இப்பொழுது புதிய மதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. தனவந்தரின் கைக்கு மட்டும் எட்டக்கூடிய உச்சவிலை.

படத்தின் மதிப்போ? சாவின் விலையோ?

இறுதி ஓவியம் உலகின் சிறந்த ஓவியமென்று பலராலும் பாராட்டப்படுகின்றது. ஒரு தனவந்தர், அதனை கோடி ரூபாவுக்கு வாங்கித் தனது அறையை அலங்கரித்திருக்கின்றார்.

"இத்தகைய ஓவியத்தை வரையத் தக்க ஓவியன் ஒரு யுகத்திற்கு ஒரு தடவைதான் தோன்றுகின்றான்... ரோஜாவின் அழகுப் பொலிவு அப்படியே தெரிகின்றது. அதன் பின்னணியில், ஒரு பெண்ணின் நிர்வாண ஓவியம். அது, கால ஓட்டம் என்னும் வெள்ளத்தில் அழிந்து போவதாக எவ்வளவு நேர்த்தியாக அமைந்துள்ளது..."

புதிய விளக்கங்களும், பாராட்டுரைகளும்!

விளக்கமோ? சிந்திய தண்ணீர் கற்பிக்கும் மயக்கமோ?

ஓவியன் செத்துப் போனான்.

◎

## பயன்



அந்த நெற்பயிரின் கதிர் நிறைவாக முற்றியது. கதிரை நந்நெல் முத்துகள் பூஷிதஞ் செய்தன. பொன்நிறங் கூட்டித் துவண்டது. நிறைமாதக் கர்ப்பவதியின் மடிச்சுமை. பெண்மையின் பூரிப்பு. தனக்கு உயிரூட்டிய பூமித்தாயை வாஞ்சையுடன் குனிந்து முத்தமிட்டது. பாசம் இணைத்தது. கவிழ்ந்த தலை நிமிரவேயில்லை.

அந்தப் பயிருக்குப் பக்கத்தில் இன்னொரு நெற்பயிர். அதன் கதிரிலே, நெல்மணி உருவங் கொண்ட நாலைந்து பதர்கள். கனமுமில்லை, பயனுமில்லை. அஞ்ஞானத்திலே விளைந்த ஏமாப்புடன், அவற்றை ஏந்தி, வானை நிமிர்ந்து பார்த்தது. பெண்மைக்குப் பொருந்தாத ஆண்மைச் சிலிர்ப்பு. அந்தக் கழனியின் அல்லிராணியெனத் தன்னைத் தானே கற்பித்துக் கொண்டது.

தலை கவிழ்ந்து, நிலத்தினைத் தொடும் பயிரைக் கண்டதும் அதற்கு ஏளனந் துளிர்ந்தது.

'மண்ணைக்கல்லவா கீழே பார்க்கின்றாய்? நிமிர்ந்து நின்று விண்ணைப் பார்: வானத்துப் புதுமைகளைப் பார்!"

பூரண விளைச்சல் எய்திய பயிரினால் தலையைத் தூக்க முடியவில்லை.

"பூமாதேவி தன்நெஞ்சைப் பிளந்து, பசளை மண்டிய தனது மண்மஞ்சத்திலே என்னைக் கிடத்தி வளர்ந்தாள். அவள் தந்த உணவில் நான் வளர்ந்தேன்: விளைந்தேன். அதற்காக நான் அவளை அஞ்சலி செய்கின்றேன்."

"கூனிக் குறுகி நிற்பதற்குப் பெயர் அஞ்சலியா? அடிமைப் புத்தி! நான் சுதந்திரப் பிரியை."

செந்நெற் கொத்துடன் சாய்ந்து விட்ட பயிர் பதிலெதுவும் பேசவில்லை.

"மகளே! உன்னால் நான் பெருமை அடைந்தேன்" என்று பூமித்தாய், தன்னை அஞ்சலி செய்யும் பயிரின் செவிகளிலே கொஞ்சினாள்.

செருக்குடன் விண்ணைப் பார்த்துப் புதுமை பேசிய பதருக்குப் பூமித்தாயின் பேச்சுக் கேட்டது. அழுக்காறு மூண்டது. சினம் சென்னிவரை ஏறிற்று.

"பூமியே, நீ ஓரவஞ்சகி!" எனக் கத்திற்று. ஆத்திரத்தில் அதன் உடம்பு ஆடிற்று.

"இளைய மகளே! நீ என்னை மறந்து பேசாதே. இப்பொழுதும் நான் தான் உன்னையுந் தாங்கிக் கொண்டிருக்கிறேன்....." என்று பூமித்தாய் மிகவும் அமைதியாகப் பதில் சொன்னாள்.

"என்னைத் தாங்குவது உன்னுடைய கடமை. அதற்காக நான் உனது சிற்றடிமையாக வாழ வேண்டுமா? நான் சுதந்திரப் பிரியை."

"விளைவும் - பயனும்! அது தான் சுதந்திரம்"

"நீ சுத்தக் கர்நாடகம். நீ பேசுவது ஒருவருக்கும் விளங்காது."

பொறுமையை அணிகலனாகப் பூண்ட பூமித்தாயின் நெஞ்சில் இந்த ஏளனச் சொற்கள் சுருக்கென்று ஏறின. ஒரு கணம் நிதானம் தவறியது.

"நான் சொல்வதைப் புரிந்து கொள்வதற்கு, நீ உன்னையே நீ புரிந்துகொள்ள வேண்டும்."

"நான், நானே தான்."

"ம். ஆனால், பதர்!"

"உன்னை நான் என் காலால் மிதிப்பேன்" என்று அகம்பாவச் செருக்குடன் முனிந்து, மீண்டும் வானையே பார்த்தது.

முற்றி விளைந்த நெல்மணிக் கொத்து பூமித்தாயின் வயிற்றைத் தழுவியது.

அவளுடைய சினந் தணிந்தது. பெருமையிலே சீதளச் சுகம் பருகுகின்றாள். பதரைச் சுமக்கும் பயிருக்குப் பதில் உத்தரம் எதுவும் சொல்லவில்லை.

◎

## மறக்க முடியாதவர்

உறவிழந்து
ஊர் அழுதபோது
ஊன் உறக்கமின்றி
உயிர் காத்த வீரர்
எதிரியின் எல்லைவரை ஏறி
அவன் ஏவுகின்ற
எறிகணைக்குள் குளித்தும்
கூக்குரல் இடாத வீரர்
சூரியக்கதிர் கொண்டு
கொடியவன்
சுட்டபொழுது
அவன் கதிர்கள்
எம் மக்களை கருக்காது
காத்து நின்ற வீரர்
நாடுவிட்டு கானகம்
வந்தபோது
கானகம் உள்ள மக்களின்
கழுத்தை நெரிக்க
கயவர்கள் எத்தனித்தபோது
எதிரியின் நெற்றிப்பொட்டில்
அடித்தவர்கள்
எதிரியின் வெற்றி நிச்சயம்
பொய் தூட்டல்
வெற்றி சாத்தியமா
என சிந்திக்க வைத்தனர்
சாவிலும் சாதிக்கத் துடிக்கும்
சத்தியவான்கள்
சந்ததி வாழ
சாகத் துடிக்கும்
இவர்களை
சந்ததிசாவிலும் மறக்காது
மறந்துபோன சந்ததி
மறுபடியும் உயிர்க்காது
மாற்றான் முன்
மண்டியிடாத
மறவர்களை
மறந்து போனவர்கள்
மிருகத்திலும்
கேடானவர்கள்.



ப.பகீரதன்

## கத்தரி வெருளியா?



ஓயாது உன் உள்ளம்
அடங்காது என் கோபம்
நான் உந்தன் விழிகளை
பிடுங்கியே எறியுமுன் விலகிடு
உன் வாசல் தேடி
தாமதிக்காதே! என்
சின்ன விழிகள் இசைத்த
அந்த... இனிய கீதம்
தொலைந்தது...
வண்ணப் பாதம் பதித்த
நளின நடை
பறந்தது...
என் மனக்கோட்டைகளும்
ஆசைகளும்
தளர்ந்தது....இதயம் நொருங்குண்டது
என் மண்ணிலே
உனக்கென்ன மேய்ப்பு
நீ என்ன கத்தரி வெருளியா?
என் மண்ணைக் காவல் காக்க?
நிட்சயம் விடிவைக் காணும்
என் இதயம்....
மண்ணில் விதையாகினும்
நீ விலகிடும்வரை
ஓயாது என் உள்ளம்.

பத்மாசனம்





## அமெரிக்கா மீதான தாக்குதலும் பின்லாடனும்...



அமெரிக்கத்தாக்குதலின் பின்னணியில் பின் லேடன் இருக்க முடியாது.

ஒசாமா பின்லேடன் செப்ரெம்பர்-11 அமெரிக்கத் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்திருக்க முடியாதென பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அமெரிக்க நியூயோக்கர் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

அல்கொய்தா அமைப்பின் தலைவர் மலையில் வீற்றிருந்தவாறு இதைச் செய்திருப்பார் என நான் நினைக்கவில்லை. அவ்வமைப்பை நிறுவியவர், நிதிவழங்கியவர் என்றபோதிலும் தாக்குதலை இயக்கிய விதம் மிக அதிக நவீன முறைகளைக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு அமெரிக்காவும், விமானப்பறப்பு உத்திகளும் நன்கு தெரிந்திருக்கிறது. ஆனால் அதற்கான திடீர் திட்டமிடல்,புலனாய்வு நுட்பம் அவருக்கு இருக்க முடியுமா என்பதும் என்னால் நம்பமுடியவில்லை. அத்திட்டம் வேறு ஒருவரால் தீட்டப்பட்டிருக்கலாம்!

ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் முஷாரப் அமெரிக்காவுக்கு முண்டு கொடுத்திருந்தமைக்காக நியூயோக்கர் சஞ்சிகை அவருக்கு புஷாரப்(bushrraf) என்ற புதிய பட்டப் பெயரையும் சூட்டியுள்ளது. ◆

## ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு பிரிட்டிஷ் அமைச்சர்கள் கண்டனம்

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் கூட்டுச்சேர்வது குறித்துபிரிட்டிஷ் அமைச்சர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்தநடவடிக்கை அயல்நாடுகளிடையே அனேகமான முறுகல் நிலைகளைத் தோற்றுவித்து விடக்கூடுமெனவும் கருத்து வெளியிட்டனர். ரொனி பிளேயர் தமது தொழிற்கட்சிஅங்கத் தினரிடமிருந்தும், வர்த்தக சம்மேளனங்களிலிருந்தும் அமெரிக்கா சார்பாக அவர் ஆதரவு வழங்க விரும்புவதற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

மேலும் ஈராக்கில் ஜனாதிபதியைப் பதவியிழக்கச் செய்யும் இந்த நடவடிக்கைகள் ஆப்கானிஸ்தான், ஸ்ரேல், காஷ்மீர் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கி விடுமெனவும் பிரிட்டிஷ்

## தென்சீனாவில் வெள்ளப் பெருக்கு

சீனாவின் தென்மாகாணமான ஹுனானில் ஏற்பட்ட தொடர் மழையினால் வெள்ளப்பெருக்கும், மண்சரிவுகளும் ஏற்பட்டதால் அதனிடையே சிக்கி 70பேர்வரை மாண்டுள்ளனர்.

ஹொங்ஹொங்குக்கு வடக்கே 400 இலிருந்து 600 கி.மீற்றர் தூரத்துக்கு வெள்ள அனர்த்தம் நீடித்திருப்பதால் பயன்தரு நிலங்கள், நெல்வயல்கள் வாழ்விடங்கள் போன்றனவும் நீரினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

1998ம் ஆண்டு நடைபெற்ற வெள்ளப்பெருக்கின்போதும் 4000 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் இவ்வருடத்தில் இடம்பெற்ற வழமையான வெள்ளப்பெருக்குகளால் 900 பேர் வரையில் இறந்திருப்பதாகச் சீனச்செய்தி ஏடொன்று தெரிவித்தது. ◆

## பப்புவா நியூகினியாவில் எரிமலைத் தாக்கம்

பப்புவா நியூகினியாவில் எரிமலையொன்று வெடித்துப் பரவிய தீப்பிளம்புகள் 31மைல் நீளமான சுற்றாடல்களைத் தாக்கியுள்ளதாகவும், அங்குள்ள வயல்கள்,பாம் எண்ணெய் வயல்கள், வீடுகள், கட்டடங்கள் போன்றனவும் அமிலத்தன்மையுள்ள புகைப் படிவங்களால் மூடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்கிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர். ◆

## 100 மில்லியன் பவுண்ட்ஸ்மோசடியில் முன்னாள்

நிகரகுவாவின் முன்னாள் ஜனாதிபதி அர்னோல்டோ அலெமன் இவ்வருட ஆரம்பத்தில்பதவியிலிருந்து விலகும்போது 100 மில்லியன் பவுண்ட்ஸ் பொது நிதிகளை மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார். இதில் இவருடன் அவர் மனைவி, சகோதரர்,சகோதரி, மைத்துனர் மைத்துனி போன்ற குடும்ப உறுப்பினருடன் அவரது அந்தரங்க செயலாளர் மற்றும் அநேக அரச உத்தியோகத்தர்களும் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இவர் தனது சொந்த தேவைகளுக்காகவும் சொத்துக்களை வாங்குவதற்காகவும் நிதியமைச்சு,அரச காப்புநிதி, பெற்றோலியம், தொலைத் தொடர்பு மற்றும்கட்டுமானக் கம்பனிகளிடமிருந்தும் பொதுநிதிகளை திசைமாற்றி மோசடி புரிந்துள்ளார். நிகரகுவாவின் 80 வீதமான மக்கள் அவர் மீதுநடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் மின் வறிய நாடு நிகரகுவா. அங்கு சர்வாதிகார ஆட்சியும், உள்நாட்டுப் போரும் நடைபெற்று 1990ம் ஆண்டுடன் முடிவுக்கு வந்துள்ளது. அங்குள்ள சனத்தொகையில் 5மில்லியன் மக்கள் இன்னமும் வறுமைக் கோட்டில் வாழ்கின்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது. ◆

## ஒரு இருதயம் - இரு உயிர்கள்



மரியா டீ லொஸ் ஏஞ்சலாஸ், மற்றும் மரியா டெல் மிலாக்றோ ப்ரினெஸ் ஆகிய கொஸ்ரா ரிகானைச் சேர்ந்த சயாமிய வகை இரட்டையர்களையே படத்தில் காண்கிறீர்கள். நெஞ்சோடு ஒட்டிப்பிறந்த இந்த இரட்டையர் மருத்துவர்களால் இடைவிடாது கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ஒற்றை இருதயத்துடன் உயிர்த்திருக்கும் இந்த இரண்டே மாத வயதுடைய இரட்டையரை பிரிக்கும் சத்திரசிகிச்சையை மருத்துவர்கள் நிராகரித்துள்ளனர். ◆

## என்னை அமெரிக்காவால் வெல்ல முடியாது;

*சதாம்ஹுசைன் சூளுரை*

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுஸையின் ஈராக்கிய புரட்சியின் 34வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியூடாக உரையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்த உரையின் போது ஈராக் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் என்று கூறிய ஹுசைன், அமெரிக்காவின்




தன்னைப் பதவியில் இருந்து அகற்றும் திட்டங்கள் குறித்தும் கூறுகையில் அமெரிக்காவில் ஒரு போதுமே தன்னை தோற்கடிக்க முடியாதென்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் தன்னை பதவியிலிருந்து அகற்ற 'படாதபாடுபட்டு' வருவதாகவும் தனது எதிரிகள் உலகிலுள்ள சகல சாத்தான்களையும் பிசாசுகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு என்னை எதிர்க்கவந்தாலும் இம்முறை அவர்களால் என்னைத் தோற்கடிக்கவே முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் இருந்து கொண்டு அமெரிக்காவின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் கோழைத்தனம் மிக்க தீயசக்திகள் எந்த வகையிலும் தலைமை தாங்கி வழிநடத்தும் திராணியற்றவர்களே என்றும் சாடியுள்ளார். ◆

## மேற்கு ஐரோப்பாவில் நீர்நாய் அழியும் ஆபத்து



நீர் நாய்கள்(seal) இவை அநேகமாக மேற்கு ஐரோப்பாவின் தென் சுவீடன் டச்சுக் கடல்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. அக்கடல்களில் இப்போது ஒருவித வைரஸ் தொற்றும் கிருமிகள் பரவுவதால் 20,000 வரையிலான நீர் நாய்கள் இறக்கும் நிலை காணப்படுவதாக சுவீடன் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

சுவீடனுக்கும் டென்மார்க்குக்குமிடையில் இதுவரை 2,500 நீர்நாய்கள் இறந்து கரையொதுங்கியிருந்தமை பற்றி ஆராய்ந்ததில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டது. மேலும் இவைகளால் மேற்கு ஐரோப்பாவில் உள்ள அரைப்பங்கு நீர்நாய் இனமும் அழிந்துவிடும் ஆபத்து நிலவியிருக்கிறது.

இதேபோல் 14 வருடங்களுக்கு முன் 1998ல் பிளேக் நோய் போன்ற ஒரு தொற்று நோய் பரவியதால் அங்கு அரைப்பங்கு இனம்அழிந்து விட்டதையும் சுட்டிக்காட்டிய விஞ்ஞானிகள் அதைத் தடுக்கவே முடியாதிப்பதாகவும் கூறியிருக்கின்றனர். ◆

## உச்சந்தலையில் ஒட்டிப் பிறந்த இரட்டையர் வேறாக்கப்பட்டனர்



இரு தலைகளும் உச்சியில் ஒட்டிப் பிறந்த ஒரு வயதுடைய இரட்டைப் பெண் குழந்தைகள் மரியாதெரெசா,மரியா டிஜீசஸ் கௌதமாலாவிலிருந்து லொஸ் ஏஞ்சலில் உள்ள சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோதிலும் அவர்களை சத்திர சிகிச்சை மூலம் தனியாகப் பிரித்தெடுப்பதற்கான ஆயத்தங்களை டாக்டர்கள் மேற் கொண்டு வந்தனர்.

இரட்டையர் இவ்வாறு ஒட்டிப் பிறப்பது 2லட்சம் பிறப்புகளுக்கு ஒன்றாக நிகழ்வதால் அவர்களை வேறாக்குவதில் டாக்டர்கள் பெரும் சிரமங்களை மேற்கொள்வதுண்டு. அநேகமாக இருவரில் ஒருவர் உயிரிழக்கவும் நேரிடும்.

இப்பொழுது லொஸ் ஏஞ்சல்ஸ் கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவமனையில் நடத்தப்பட்ட 22 மணிநேர சத்திரசிகிச்சையின் பின் இருவரும் வேறாக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. இரு பிள்ளைகளும் கண்விழித்து அவையங்களை அசைப்பதாகக் கூறப்பட்டாலும் மரியதெரெசா ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. ◆

## இவர்கள் சொல்கிறார்கள்...

எந்தத் துரதிஷடமும் தாழ்த்த முடியாத எந்தக் குற்றமும் அழிக்கமுடியாத எந்தப் பகைவனும் பிரிக்க முடியாத எந்த எதேச்சதிகாரமும் அடிமைப்படுத்த முடியாத் தோழன் கல்வி. உள்நாட்டில் ஒரு தோழன் வெளிநாட்டில் ஓர் அறிமுகம்; தனிமையில் ஓர் ஆறுதல்; சமூகத்தில் ஓர் அணிகலன்

*-வால்லே.*

சுதந்திரமாய் நெளிந்து ஓடும் ஓடையை கல்வி பெரும்பாலும் கட்டுப்படுத்தி நேரான கழிவுக்கால்வாய் ஆக்கிவிடும்.

*-ஹென்றி டேவிட் தோரோ.*

எதைச் சிந்திக்க வேண்டும் என்று சொல்லித் தருவதைவிட எப்படி சிந்திக்க வேண்டும் என்று போதிப்பதே கல்வி. பிறர் சிந்தனைகளின் நினைவுகளை நம் உள்ளத்தின் மீது சுமத்துவதைக் காட்டிலும் சுயமாகவே நாமே சிந்திக்க உதவும் அளவுக்கு நம் உள்ளத்தைப் பக்குவப் படுத்துவதே கல்வி

*-ஜேம்ஸ் பீயட்டி.*

கல்வியால் நாம் உருவாக்குவது ஓர் உடலையோ உள்ளத்தையே அல்ல; ஒரு மனிதனை; அவனை இரு கூறுகளாக்கக் கூடாது.

*-மிஷேல் தை மோன்த்தேன்.*

கற்பது ஒரு பணியோ பிரச்சினையோ அல்ல; உலகில் வாழ அது ஒரு வழி. தனக்குப் பொருளுடைய குறிக்கோள்களையும் மனதில் பின்பற்றுகையில்; அவன் கற்கிறான்.

*-ஸ்ட்னி இமோஜென் கினி.*

குறிக்கோள்கள் இல்லாமல் முயற்சி இல்லாமல் புலமை இல்லாமல் தத்துவ ரீதியான தொடர்ச்சி இல்லாமல் கல்வி என்று ஒன்றே கிடையாது.

*-ஆபிரஹாம் ஃபிளெகிஸ்னர்.*

கல்வி அளவுக்கு மீறி அதிகமானாலும் மிகக் குறைவாக இருந்தாலும் உள்ளத்தின் வளர்ச்சிக்கு ஊறு செய்கிறது.

*-ப்ளேய்ஸ் பேல்க்கல்-*

எல்லாம் வல்ல இறைவன் ஒரு சிந்தனையாளரை இம் மண்ணுலகில் அவிழ்த்து விடும்போது; எச்சரிக்கையாய் இரு.

*-ரால்ஃப் வால்டோ எமெர்சன்*

உழைப்பு உடலை உறுதிப்படுத்துவது போலவே சிரமங்கள் உள்ளத்தை உறுதிப்படுத்துகின்றன.

*-ஸெனெகா*

அழுதிராத இளைஞன் ஒரு காட்டுமிராண்டி. சிரிக்க மாட்டாத முதியவர் ஒரு முட்டாள்.

*-ஜார்ஜ் ஸாந்தாயனா*

இன்பமாய் இருப்பதற்கு முன்பே ஒருவர் சிரிக்க வேண்டும். இல்லாவிடில் சிரிக்காமலேயே கூட ஒருவர் இறந்துவிடக்கூடும்.

*-ஜீன் தெ லா ப்ரூயேர்*

உயாந்த சிந்தனைகளோடு உறவாடுவோர் ஒருபோதும் தனியராய் இருப்பதில்லை.

*ஸர் ஃபிலிப் ஸிட்னி*

சிந்தனை இல்லாத கல்வி வீணான உழைப்பு; கல்வி இல்லாத சிந்தனை ஆபத்தானது.

*கன்ஃபூஸியஸ்*

# நறுக்கென...



## நடிகை சந்திரிகா

**பொ**லநறுவையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் வைத்து அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் தோற்றதை, அவரது அங்கக் குறைபாட்டைக் கிண்டல்செய்து, அவரைப்போல் முகபாவனை காட்டி 'நக்கலடித்து' தனது கட்சிக்காரரை 'குஷிப்படுத்திய' சிறிலங்கா ஜனாதிபதியின் மூன்றாம்தர அந்த அமைச்சர் மீதான கோபம் வெறுப்பும் கலந்த ஆழ்மன உணர்வின் அடிப்படையிலான - நகைச் சுவையுணர்வு ஊடகங்களூடாக இப்போது எப்படியோ வெளியாகிவிட்டது.

இது குறித்து அம்மணி சந்திரிகா கூறும் காரணத்தைக் கவனியுங்கள். 'அன்று நான் ஒரு சின்னப்பகிடிவிட்டேன்.... சின்ன நடிப்பில் ஈடுபட்டேன் அவ்வளவுதான். நான் பாடசாலையில் இருக்கும் போது சிங்கள, ஆங்கில நாடகக் குழுக்கள் இரண்டிலும் இருந்தேன். அவற்றில் ஒவ்வொரு ஆண்டிலும் நடித்திருக்கிறேன். எனக்கு நன்றாக நடிக்கத்தெரியும். இல்லாவிட்டால் இந்தச் சின்ன நடிப்பை செய்திருக்க முடியாதல்லவா....?

"நாளையோ மறுநாளோ உலகின் சிறந்த நடிகையாக எனக்குப் பரிசும் கிடைக்கும்"

எப்படியுள்ளது....?

பிரச்சினை எதுவானாலும் அம்மணி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு முக்கிய கட்டத்தில் அளித்திருக்கிறார். என்றே கூறவேண்டும்.

'தான் ஒரு நடிகைதான்' என்பதே அதுவாகும்.

எதில் சந்தேகமில்லை. ஏழாண்டு காலம் சமாதானத் தேவதையாக சர்வதேசத்திற்கும் கண்டி ராணியாக தமிழ் மக்களுக்கும் இரட்டை வேடம்போட்டு அற்புதமாக நடித்ததை வியக்காதவர்களே இல்லைத்தான்....

ஆனால் ஆஸ்கார் பரிசுக்குழுதான் அதைக்கவனிக்கவில்லை. இல்லாவிட்டால் எப்போதோ அந்த விருதைப் பெற்றிருந்திருப்பார். நாளைக்கு அல்லது மறுநாள் உலக விருது கிடைக்கும் என அடித்துக் கூறும் ஜனாதிபதியின் சுயபிரகடனத்தைப் பார்த்தால் இன்னும் பிரமிக்கவைக்கும் 'நடிப்பை' விரைவில் அரங்கேற்றப் போகிறார் என்ற அச்சம் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே உள்ளது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள். ●



## ஹிஸ்புல்லாவின் இராணுவ பார்வை

**கி**ழக்கிலிருந்து படைகளை வாபஸ் பெற்றால் முஸ்லிம்களுக்கு பேராபத்து ஏற்படும்... ஆனால் அரசோ கிழக்கில் இராணுவ முகாம்களை அகற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த அபாயம் குறித்து அதிஉத்தமி ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து அவரின் உத்தரவின் மூலம் படை வாபஸாவதை தடுத்து விட்டுள்ளாராம் ஹிஸ்புல்லா என்ற பாராளுமன்ற உறுப்பினர்.

சாதனைதான்...ஜனாதிபதியிடம் அவருக்குள்ள அதீத செல்வாக்கு தெளிவாகவே தெரிகிறது. அவர் பாலபட்ட பெண்டிக்கு அறிவித்தவுடனேயே ஐநூறு இராணுவ வீரர்கள் கவச வாகனங்கள் சகிதம் காத்தான் குடிக்கு விரைந்து சென்று பாதுகாப்பு வழங்கினர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இன்னமும் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் காத்தான் குடியில் இரண்டு கவச வாகனங்களுடன் நிலை கொண்டிருப்பதாகவும் இராணுவம் கிழக்கிலிருந்து வாபஸ் பெற்றால் அங்கு முஸ்லிம்கள் வாழ முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் மீதான அவரது அக்கறை பாராட்டப்பட வேண்டியதுதான்.

ஆனால் உடுத்தலவின்ன படுகொலைகளை ஹிஸ்புல்லாஹ் எந்தவித உணர்வுமின்றி மறந்துவிட்டார்போலும். அங்கு பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தினரும் அவரின் மதிப்பிற்குரிய ஜனாதிபதியின் மாமா அனுரத்த ரத்வத்தையின் புதல்வர் களான லோகன் மற்றும் சானுக்க ரத்வத்தை ஆகியோரும் -மாமா ரத்வத்தையின் ஆதரவுடன் கூடிய கட்டளையின் பேரில் நடு வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதற்கு யார் காரணம்.

ஹில்புல்லாஹ்நம்பும் இராணுவமல்லவா.

அல்லது கொல்லப்பட்டவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்பதால் அவர்கள் முஸ்லிம் களே அல்ல என நினைக்கின்றாரா? இதே ஜனாதிபதிதானே இந்தப் படுகொலைகளுக்கு காரணமாக பின்னணியில் செயற்பட்ட 'ரத்வத்தை' களுக்கு சிறையில் ராஜஉபகாரம் வழங்கிக் கௌரவித்தார். அவர்கள் மீது கைது நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமென்று 'பிரதமரோ' தொடர்புகொண்டு இரகசியமாக வேண்டியவர்....!

இது ஹிஸ்புல்லாவுக்கு தெரியாத விடயமல்ல... ஆனால் அவரது 'மூன்றாம்தர அரசியல்' இலக்கு அவரை இப்படியெல்லாம் பேசவைத்துள்ளது. பாவம் முஸ்லிம்கள். ●



## பாதுகாப்பான சமாதானம்?

**பா**துகாப்பு மற்றும் புலனாய்வு துறைகளில் இலங்கைக்கு அமெரிக்கா உதவும் என்று அமெரிக்காவில் இருந்து நாடுதிரும்பிய சிறிலங்காப் பிரதமர் மக்களுக்கு தென் பகுதி மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

இது அவரின் அமெரிக்க விஜயம் தொடர்பான உள்நோக்கத்தை மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்புக்களை முனைப்புடன் மேற்கொள்வதாக நிரூபிக்க சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வேளை நாடு நாடாக சமாதான விபரிப்பு விஜயம் என்ற பதாகையுடன் விமானப் பயணம் மேற்கொள்ளும் பிரதமரும் அவரது மிக நெருங்கிய சகாக்களான சில அமைச்சர்களும் சமாதான நடவடிக்கைகளில் தாம் பாய்ச்சலைக் கண்டு விட்டதாக ஆங்காங்கே அறிக்கைகளை விட்டபடி சிறிலங்காவின் பாதுகாப்புத்துறையை மென்மேலும் பலப்படுத்தும் நோக்குடனான செயற்பாடுகளுக்கே மிக முக்கியத்துவம் அளித்துச் செயற்பட்டு வருவது மிகத் தெளிவாகவே தெரிகிறது.

சகல நாட்டு விஜயங்களை அடுத்தும் வெளியிடப்படும் கருத்துக்களில் போர்த் தயாரிப்புகள் தொடர்பான செய்திகளுக்கு தரப்படும் மறைமுகமான முக்கியத்துவம் எதையோ குறித்து எச்சரிக்கை செய்வதாகவே உள்ளது. போருக்கு செலவிடும் பணம் அபிவிருத்திக்கு செலவிடப்படும் என்று தெரிவிக்கும் அரச பிரச்சாரர்கள் மறுபுறம் முப்படைகளின் அபிவிருத்தி, நவீன மயமாக்கல் பயிற்சி நடவடிக்கைகளில் சர்வதேச நாடுகளின் தேவைகளைக் கோருதல் என்ற செயற்பாடுகளில் காட்டிவரும் தீவிரத்தன்மையை புரிந்துணர்வு உடன்படிக்கையின் அம்சங்களை நிறைவேற்றுவதிலோ வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேசத்தின் உதவிகளை கோருவதிலோ காட்டுவதில்லை...

பாதுகாப்பை வலுப்படுத்துவது, இராணுவத்தை வலுப்படுத்துவதும், புலனாய்வுக் கட்டமைப்பை மேம்படுத்துவதும் தான் சமாதானத்தை கொண்டுவருவதற்கான அவசர அவசியங்கள் என அரசு நினைக்கிறது போலும்.

சிறிலங்காப் பிரதமர் ரணிலின் தன் நாட்டு மக்களுக்கு உவகையூட்டும் அறிவிப்பானது தமிழ் மக்களை அச்சுறுத்தன்மையை கொண்டதாகவே உள்ளது. ●



## பேரினவாதத் தூண்டல்கள்

**தெ**ன்பகுதியில் மீண்டும் இனவெறியைத் தூண்டும் சுவரொட்டிகள் திடீரெனத் தோன்றத் தொடங்கியுள்ளன. அவ்வப்போது மிகமோசமான தமிழின விரோதக் கருத்துக்களை உள்ளடக்கியதான துண்டுப் பிரசுரங்கள் தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டும் வருகின்றன. இந்தச் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களின் அடியில் தேசபக்தர்கள் என்றும், தேசப்பிரேமிகள், சிறிலங்காவின் இளையசக்தி மக்கள் புரட்சிக் குழு என்றும் குறிப்பிடப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஏதோ திடீரென சிங்கள மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுவிட்டது போலவும் பல்வேறு அமைப்புக்கள் சிறிலங்காவை காப்பற்ற உருவாக்கியுள்ளன போன்றும் ஒரு மாயையை உருவாக்கி தென்னிலங்கை மக்களிடையே குழப்பத்தையும் இனக்குரோதத்தையும் துாண்டி சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிராக கிளர்ச்சிகளை ஏற்படுத்துவது தான் இதனை செய்வோரின் பிரதான நோக்கமாகும்.

நாடு துண்டாடப்படப்போகிறது சிங்கள மக்களே எப்போது விழிக்கப்பபோகிறீர்கள்?

"ஹக்கீமும் பிரபாகரனும் ஒப்பந்தம் சிங்கள மக்கள் தலையில் தீப்பந்தம்."

"இரத்தக்கடன் இரத்தத்தாலேயே தீர்க்கப்படவேண்டும்."

என்றெல்லாம் அந்தப் பிரசுரங்கள் பேசுகின்கிறனவாம்....

இதில் பரிதாபம் என்னவெனில் இதன் பின்னணியில் இயங்கும் மக்கள் விரோதச் சக்திகள் தம்மை நேரடியாக இனம்காட்டாது மறைமுகம் தேடுவதேயாகும்.

இவர்களின் சுயமுகத்தை மக்கள் அறிவார்கள் பல்லாயிரக்கணக்கான தென்பகுதி மக்களை கண்மூடித்தனமாக கொன்று கங்கையில் தள்ளிவிட்டவர்களின் கைவண்ணம்தான் இது வென்று மக்கள் அறிவர்.

இவர்களுக்கான ஆதரவை ஒரு அந்நிய நாடும் நிறைவேற்று அதிகாரபீடமும் வழங்குவதாகவும் தென்னிலங்கைச் செய்திகள் கூறுகின்றன.

கையாலாகாதவன் தான் கண்மூடித்தனமாக எதையும் செய்வான் என்பது மிக உண்மை.

சாயம்போய் கொண்டிருக்கும் தங்களின் கொடிகளை மீண்டும் ஒருமுறை சிங்கள இளைஞர் யுவதிகளின் இரத்தத்தால் சிவப்பாக்கிக் கொள்வோர் குறித்து தென்பகுதி மக்கள் தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ●

## கருத்துப்பகிர்வு

அன்புடன் வெள்ளிநாதமே:

கடந்த நாதத்தில் டொக்டர் ருத்திரன் எழுதிய காதல் காவியம் நன்றாகவே உள்ளது. இந்தக் காலத்து விடலைப் பருவத்தினர் காதல் என்றால் என்னவென்று தெரியாமல் காதலிக்கிறார்கள். வெள்ளிநாதத்தை வாசித்திருந்தால் காதல் என்றால் என்னவென்று புரிந்திருப்பார்கள். நாதமே உன் பத்திரிகையில் வரும் நாட்டு நடப்புக்கள் நன்றாகவே உள்ளது. உன்பணி தொடர வாழ்த்துக்கள்.

*ப.பரமேஸ்*
*கிளிநொச்சி*

யாழ் குடாநாட்டில் ஈழநாதம் பத்திரிகையின் வாரவெளியீடான வெள்ளிநாதம் கிடைக்கத் தொடங்கியது முதல் அதை கிரகமாக வாசித்து வருகின்றோம். இன்னொரு போர்முகம் தொடர் அருமையாக இருந்தது. மற்றும் படைப்புக்களும் நல்லவையாகவே இருக்கிறது.

*விக்னேஸ்வரராசா*
*புலோலி*

அன்புடன் நாதமே!

எத்தனையோ வசதிகள் குறைந்த கிளிநொச்சியில் இவ்வளவு உயர்தர பத்திரிகையைப் பிரசுரிக்கும் நீங்கள் பாராட்டுக்குரியவர்கள்

மிகவும் உயாந்த கருத்துக்களையுடைய கட்டுரைகள் ஆங்கிலத்திலும் பிரசுரமாக வேண்டும். லண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் காடியன்' பத்திரிகை இன்று கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் பிரசுரமாகின்றது. அதைத் தமிழ் தெரியாத இளைய தலைமுறையினரும் வாசிக்கின்றனர். ஆகவே தங்களின் பத்திரிகையில் வரும்கட்டுரைகளைப் பிரசுரித்தால் எத்தனையோ தமிழர்கள் வாசிப்பார்கள். அத்துடன் சிங்களவர்கள், வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

அண்மையில் வெளிவந்த பத்திரிகையென்றில் பயிரை மேயும் வேலி என்ற கட்டுரையில் கொழும்பிலிருந்துவரும் சண்டே ஒப்சேபர் பத்திரிகை தமிழ்க் கட்சிகளுக்கு எவ்வாறு முதலைக்கண்ணீர் வடிக்கின்றது என்பதை கட்டுரையாளர் கலாநிதி சோமாஸ்கந்தன் விளக்கியுள்ளார். ஆனால், இக்கட்டுரை தமிழில் இருக்கும் கட்டுரையின் மொழி பெயர்ப்பு தமிழ் காடியனில் பிரசுரமானால் பிறமொழி தெரிந்தவர்களும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

*ரி.சத்தியமூர்த்தி*
*அவுஸ்திரேலியா*

# பரீட்சையில் வெல்வது எப்படி ?

-வி.தேவபாணு -





அலட்சியமாய், கற்பித்த பாடங்களை அன்றே மீட்காமல், தேக்கி வைத்துச் சுமையாக்கிக்கொண்டு தான் கற்க வேண்டும், படித்து முடிக்க வேண்டும். எனச் சிந்திப்பார்கள். இதனை முன்பே சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

பரீட்சை என்று பாடசாலை யிலோ? அல்லது கல்விகற்கும் பிற இடங்களிளோ? கூறி விட்டால், மாணவர்களின் துடிதுப்பையும், படபடப்பையும், அவர்கள் படும் பாட்டையும், ஏன்? இந்தப் பதட்டங்கள் உங்கள்ள ஆட்கொள்கின்றன. ஏனோ தெரியாது இச்செய்தி உங்கள் காதை அடையவே இரத்த அழுத்தம் அதிகரித்தவர்கள் போல மாறி விடுகின்றீர்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? யார் காரணம்? பெற்றோர் களின் வற்புறுத்தலா...? ஆசிரியர்களின் கற்பித்தலின் கடுமையா? அல்லது இன்றைய சமூகத்தின் வளர்ச்சி வேகக்கற்றலின் தன்மையா? என நோக்க வேண்டும்.

நாம் பரீட்சைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்...? அக்கறையாகப் பாடங்களில் கவனத்தைச் செலுத்தாது விடுவதின் விளைவு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என நாம் அறிந்து கொள்ளுதல் அவசியம். தேர்வு என்றதும் அதனை நீங்கள் எதிர் கொள்ளத் தயங்குகின்றீர்கள் என்றால் என்ன காரணம்? உங்களுக்கு உங்கள் மீதே நம்பிக்கையற்றுப் போவதுதான். நம்பிக்கை இழப்பிற்குக் காரணம் நீங்களே தான். உங்களால் கற்றலில் ஒன்றிப் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியாமை, வாழ்க்கையை திசைதிருப்பக் கூடிய சம்பவங்கள், குடும்பச் சுமையை சிறு வயதிலேயே சுமந்ததன் விரக்தி அதைவிடப் பெரும்பங்கு வகிப்பது பருவகாலப் பிரச்சினைகள் என இப்படியே உங்கள் நம்பிக்கையைக் கெடுக்கும் காரணங்கள் பலதை அடுக்கிக் கொண்டே போகலாம் இவற்றை யெல்லாம் கடந்து எதிர்நீச்சல்போட்டு சிலர் வெற்றி கொள்கிறார்கள் என்றால், என்ன நினைக்கின்றீர்கள்? வேறொன்றும் இல்லை. இவர்களது உறுதியான நம்பிக்கைதான் புகழின் உச்சத்தில் நிலை கொள்ள வைக்கின்றது.

வாழ்க்கையில்வெற்றிபெற வேண்டுமா...? முதலில் தாழ்வு மனப்பாங்கை உங்களிடமிருந்து அகற்றிவிடுங்கள். நம்பிக்கை யெனும் விதையை நாட்டி, முயற்சியெனும் நீரை ஊற்றி, ஆசிரியர் எனும் மரத்தைப் பற்றிப் படர வேண்டியதுதான் மாணவர்களது கடமையாகும், அதைவிட்டு, அலட்சியமாக இருந்துவிட்டு அச்சப்படுவானேன்? மாணவர்கள் சிலர் எப்போது பார்த்தாலும் "எனக்கு என் மீதே நம்பிக்கை இல்லை" என்பார்கள். உங்களது மனம்தான் முக்கிய காரணமாக அமைகின்றது. 'மனமுண்டானால் இடமுண்டு' எதையுமே மனம் வைத்துச் செய்ய முனைந்தால் முன்னேற்றம் நிச்சயமாகக் கிடைக்கும். நம்பிக்கை வையுங்கள் முடியும் திறமை இருக்கின்றது. ஆனால், உங்களுக்குத் தெரிவதில்லை. 'ஒருவன் தலைமுடியை மழிக்கின்றான் என்றால், தலைமுடி வளரும் என்ற நம்பிக்கை இருக்கிற படியால்தானே. வளராது என்ற நம்பிக்கை இருந்தால் எவனாவது தலைமுடியை மழிப்பானா?' எந்தவிடயத்திலும் நம்பிக்கை தேவை யென்பதை சாதாரண விடயங்களூ டாகவே உணர முடிகின்றதல்லவா...?

தேர்வு என்றதும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சாதாரணமாக எதிர் கொண்டால் எப்பிரச்சினையும் சாதக மாகவே அமைந்துவிடும். படிக்க வேண்டும், வளர வேண்டும், சாதனை வீரனாகத் திகழ வேண்டும் எனப் பல எண்ணங்கள் தோன்றலாம்.

நிச்சயமாக இருக்க வேண்டிய கற்பனைதான். கற்பிக்கும் பாடங்களை அன்றே படிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதைவிட்டு உங்களுக்கு வழமையாக ஏற்படும் சோம்பேறித் தனத்தால் நாளைக்குப் படிக்கலாமெனத் தள்ளிப் போட்டால் உங்கள் பெறுபேற்றிற்கான புள்ளிகளை நீங்களே தள்ளிப் போடுகின்றீர்கள் என்று தான் அர்த்தம். சக மாணவனால் சாதிக்க முடிகின்ற தென்றால், உங்களால் ஏன் சாதிக்க முடியாது? அவனது கற்றலின் இரகசியங்களைக் கண்டு பிடியுங்கள். அதன்படி நீங்களும் பின்பற்றினால் அவனைப் போலல்ல, அவனைவிட மேலாக முன்னேறிவிடலாம் அல்லவா?

அலட்சியமாய், கற்பித்த பாடங்களை அன்றே மீட்காமல், தேக்கி வைத்துச் சுமையாக்கிக்கொண்டு தான் கற்க வேண்டும், படித்து முடிக்க வேண்டும் எனச் சிந்திப்பார்கள். இதனை முன்பே சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். பரீட்சை யென்றதும் காலை நீருக்குள் வைத்துப் படித்தாலும் , இரவு நித்திரை செய்யாது கண்விழித்துப் படித்தாலும், எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. உங்கள் கற்றல் முறைகளை உங்களுக் கேற்றவாறு திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். அப்போது தான் உங்களால் சமாளித்துக் கொள்ள முடியும். ஏவுகணை யைக் கண்டுபிடித்த மனிதன் அதனிடமிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள மாத்திரம் ஏன் மறக்கிறான். ஏவுகணைக்கோர் இலக்குண்டு. இலக்கை நோக்கித்தான் நகரும். அதற்கேற்படும் தடைகளிலிருந்து விலகிச் சென்று தன் இலக்கை அடைகின்றது. இதேபோன்றே நீங்களும் இலக்கைநோக்கி நகர வேண்டும். மாணவர்களாகிய உங்களுக்குக் கற்றலில் ஆர்வம் இருக்க வேண்டும். இலக்கை வைத்துப் படித்தால் நம்பிக்கை தானாய் பிறக்கும்; முயற்சி முனைப்புப் பெறும்; எதையும் எதிர்கொள்ளும் தைரியம் நெஞ்சில் பிறந்துவிடும்.

' பரீட்சைக்காக மட்டும் படிப்பது மாணவனது மடமைத்தனத்தைத்தான் காட்டுகின்றது. 'என்னடா? பரீட்சைக்காகப் படிக்காது, பிறகெதற்குப் படிப்பது?' என்ற கேள்வி எழும், எழுதல் நியாயமே. ஆனால்,இதைச் சற்றுக் கூர்ந்து நோக்கின், தவறைக் கண்டுகெள்வீர்கள். பரீட்சை மண்டபம் வரை பாடக்கொப்பியை புரட்டியவாறு செல்கின்ற மாணவர்களும் இருக்கின்றார். பரீட்சைக்கு அரைமணி இருக்கும்போது படிப்பவர்களும் இருக்கின்றார்கள். பரீட்சை என்ன பரீட்சை? போனால் போகுது. தெரிந்ததை எழுதுவோம் என்பவர் பலர். அன்றே படித்துவிட்டு பரீட்சை அண்மிக்க மீட்டுவிட்டு, பரீட்சைத் தினங்களில் சாதாரணமாக இருந்து முகம்கொடுப்பவர்களும் இருக்கின்றார்கள். என்னால் இயன்றளவு முயற்சிக்கின்றேன், ஆனால் விளங்கிக்கொள்ள முயடிவில்லை. இருந்தாலும் எதிர்கொள்வோம் என்பவர்களும் இருக்கின்றார்கள். இதற்குள் நீங்கள் எந்தவகைக்குள் அடங்குகின்றீர்கள் என்பது நிச்சயமாக விளங்கியிருக்கும். நீங்கள் என்ன தவறைச் செய்தீர்கள் என்பதும் தெளிவாயிருக்கும். பரீட்சை யென்று தேக்கி வைத்தவற்றை யெல்லாம் படிப்பது உங்களிடமிருக்கும் அறிவைக் குறைப்பதற்குச் சமனாகும்.

'மரங்கள் மொட்டையடிக்கப்படுவதும், மனிதன் தோல்வியில் தள்ளப்படுவதும் தளைப்பதற்கே' நீங்கள் முயன்றும் தோல்வியைச் சந்தித்துவிட்டீர்கள் என்றால் ,அதனை நினைத்து கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நீங்கள், தீர்வு காணக்கூடிய இழப்பாயின் மீண்டும் முயற்சியெடுங்கள். இல்லை யெனில் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள். அதற்காக அதில் மனதைப் புதைத்து வருந்தாதீர்களென உளவியல் சொல்கிறது. தோல்வியைக் கண்டு துவண்டு விடுவது அறிவின்மை என்று தான் சொல்ல வேண்டும். 'தோல்வி ஒருகதவை மூடுகின்றபோது, நம்பிக்கை மறு கதவைத் திறக்கின்றது. தோற்று விட்டீர்களென்று வைத்துக் கொண்டால் அதைவிட்டு விடுங்கள். இன்று வெல்வேன்,நான் வெல்லப் பிறந்தேன் என நினைத்து முயற்றி யெடுங்கள். பயனளிக்கும். எல்லோரிடமும் முயற்சியுண்டு. ஆனால் விடாமுயற்சியென்பது தான் நிலையாக எவரிடமும் இருப்பதில்லை. இதுவே அவர்களது தோல்விக்கான காரணமாக அமைந்துவிடுகின்றது.

உலகின் ஒவ்வொரு வெற்றியாளனையும் எடுத்து நோக்குவோமாயின், இவர்களது வாழ்வியல் வளர்ச்சிக்கான படிக்கல் எது எனப் பார்த்தால் 'நம்பிக்கையுடன் கூடிய விடாமுயற்சிதான்'. இதைவிட அவர்களிடம் வேறெதுவு மில்லை, இருக்கவும் முடியாது. பரீட்சை நெருங்க நெருங்க நீங்களேன் பயப்பட வேண்டும். நிதானமாகத் திட்டமிட்டு, ஆறுதலாக, அவசரமின்றிப் படியுங்கள். அன்றே படித்தால் உங்களுக்கு இன்று அவசரமிமென்ற வார்த்தை அர்த்தமற்றுப் போயிருக்கும். இலகுவாக எதிர்கொண்டு சாதனைகளைப் படைப்பதும், பரீட்சைகளை வெல்வதும் உங்களது கைகளில்தான் தங்கியுள்ளது; எதிலும் நம்பிக்கை வையுங்கள்; முதலில் உங்களை நம்புங்கள்; தன்னை நம்புகிறவன் வெல்வான்; தன்னை நம்பாதவன் வீழ்ந்துவிடுகிறான். ஏழைமுதல் பணக்காரன் வரை தன்மீது நம்பிக்கைகொண்டே ஒவ்வொரு நாளையும் இன்பமாகக் கழிக்கிறான். ஆக்கபூர்வமான நம்பிக்கை உங்களை விட்டகலும் போதுதான் சிலவேளை நிலைதடுமாறு வதுண்டு; வெற்றி, சாதனை, முன்னேற்றம் ஒரே நாளில் கிடைக்காது. நீண்ட முயற்சியின் பெறுபேறே இவைகளாகும்.

வீழ்ச்சியின் போதும் வளர்ச்சியின்போதும் உங்களது உற்ற நண்பனாகவும், உயிர்த்தோழனாகவும் இருப்பது நம்பிக்கைதான். மீண்டும் மீண்டும் மாணவர்களாகிய உங்களுக்கு முயற்சி வேண்டும். 'எதிரி ஒருவன் உன்னைக் கொல்லத் துரத்துகின்றான் எனின் நீ தப்பிவிடுவாய் என்ற நம்பிக்கையுடன்தானே ஓடுவாய்' நம்பிக்கை என்பது இப்படித்தான். , தன்னைத் திடீரென வெளிப்படுத்திக்கொள்ளும். பரீட்சைகளையும் தேர்வுகளையும் நீங்கள் எதிர்கொள்ளும் போதும் நம்பிக்கை தோன்றும். பரீட்சைகளையும் அதன் சவால்களையும் எதிர்கொண்டு அவற்றைத் துரத்த வேண்டுமே தவிர உங்களைப் பரீட்சைகள் துரத்த இடமளிக்கக் கூடாது. அதற்கேற்றவாறு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ❻


## பணிநிலை வெற்றிடம்

**1.நூலக உதவியாளர்.**
மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருப்பவர்கள் விரும்பத்தக்கது. முதல் நாலு மாத பயிற்சிப்பணி காலத்தின் போது கொடுப்பனவாக 3.000ரூபா வழங்கப்படும். பின்னர் தகைமை அடிப்படையில் 3500 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

**2.ஓரளவு தட்டச்சு வேகமுள்ள** MS-WORD பயின்றவர்கள் கணனிப் பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முதல் நாலு மாத பயிற்சிப்பணி காலத்தின் போது கொடுப்பனவாக 3500ரூபா வழங்கப்படும் பின்னர் தகைமை அடிப்படையின்படி 4000ரூபாவாக அதிகரிக்கப்படும்.
மேற்படி பணிநிலைகளுக்கு பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறைந்தது மூன்று வருடங்கள் பணியாற்ற வேண்டும். புதுக்குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

*அனுப்ப வேண்டிய முகவரி*
*விளம்பர இல:2*
*ஈழநாதம் பணிமனை*
*புதுக்குடியிருப்பு.*

(2122)

**Northern Inisitute of Technology Management**
**Computer Training Centre**
**Puthukkudiyiruppu**

எமது புதிய பிரிவு எதிர்வரும் 31-08-2002 அன்று ஆரம்பமாகின்றது.

**Diploma in M.S. Office 2000 xp**

M.S.Windows 98& Me M.S. Word 2000 xp
M.S.Excel xp M.S. Access xp
M.S. Power point 2000 xp

தொடர்புகளுக்கு:
பொதிகை கல்வி நிலையம்,
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

6மாதம்

N.I.T.M.
Word No.07
Puthukkudiyiruppu

Director
N.I.T.M
Mallavi.

(1799)

# இளையநாதம்



## “ஏமாற்றத் தெரியாத பிராணி”

சுதனின் தாத்தா ஒரு கிராமத்தில் செக்குத்தொழில் செய்து வருபவர். சுதன் பள்ளிக்குட விடுமுறையை கழிப்பதற்காக தாத்தா வீட்டுக்குச் சென்றான்.

தாத்தா விடு பெரிய அழகான வீடு. வைக்கோலால் வேயப்பட்டிருந்தது. வீட்டைச் சுற்றி பெரிய பெரிய தென்னை மரங்களும், கிணற்றைச் சுற்றி பெரிய பாக்குமரங்களும் பலா, மாமரம் என வீடு மிகவும் செழிப்பாக இருந்தது.

பசுமை நிறைந்த தாத்தாவின் வீட்டைப் பார்க்க சுதனுக்கு ஆசையாக இருந்தது. ஒவ்வொருநாளும் தாத்தாவின் தோட்டத்தில் இருக்கும் கனிகளை உண்டபடியே இருப்பான்.

ஒருநாள் தாத்தா செக்கில் மாட்டைப் பூட்டிவிட்டு வேற தொழில் செய்துகொண்டிருந்தார். மாடு செக்கை சுற்றியபடி இருந்தது. சுதனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

சுதன் நன்றாக யோசித்தான். மாடு சுத்தாமல் நின்றால் தாத்தாவுக்கு என்னென்று தெரியும்? எட்டத்தில் நிற்கும் தாத்தாவிடம் ஓடிப்போன சுதன்

“ தாத்தா.... தாத்தா....” என்றான்

“ என்ன பேரா....?” என்றார் தாத்தா.

“ மாடு செக்கை சுத்தாம நின்றால் நீங்கள் என்னென்று கண்டு பிடிப்பீர்கள்? சொல்லுங்கள் தாத்தா...?” என்றான் சுதன்.

“ மாட்டின் கழுத்தைப் பார்த்தாயா.. ஒரு மணி கட்டியிருக்கின்றேன். மாடு சுத்தும்போது மணிச்சத்தம் கேட்கும் சுத்தாவிட்டால் சத்தங்கள் கேட்காது. சத்தத்தை வைத்துத்தான் சுற்றவில்லை என்பதை அறிவேன்” என்றார் தாத்தா.


“தாத்தா மாடு சுத்தாமல் நின்றுகொண்டு கழுத்தை மட்டும் ஆட்டி மணிச்சத்தத்தை எழுப்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்றான் சுதன்.

“ மாடு நம்மை மாதிரி இல்லை. அதற்குப் பிறரை ஏமாற்றத் தெரியாது” என்று சொன்னார் தாத்தா.

-பிரஷகி -



## வாரம் ஒரு குறள் அறிவோம்




நல்ல நேர்மையான வழியில் நடக்க வேண்டும்.
பிறர் பொருள் மீது ஆசைவைக்கக் கூடாது.
நாம் அவற்றை எமது சொந்த உழைப்பு மூலமே பெறவேண்டும்.
பிறருடைய பொருளைத் திருடக்கூடாது.

அதாவது நாம் அவர்களுடைய பொருளைத் திருடுவதற்குமனதினால் கூட நினைத்தாலே பாவச்செயலாகும்.
எப்படிப்பட்ட பொருளாயினும் அவனை அறியாமல் எடுப்போமாயின் அது களவு செய்தல் என்பதேயாகும்.
சிறுவர்களாகிய நாம் பிறருக்குக் கொடுக்கும் மனப்பாங்கை வளர்க்க வேண்டுமே தவிர பிறபொருளை திருட ஒருபோதும் கூடாது.
இதனையே “கள்ளாமை” என்ற அதிகாரத்தில் மிகச் சிறந்த முறையில் கூறப்பட்டுள்ளது.

“உள்ளத்தால் உள்ளலும் தீதே யின்பொருளைக் கள்ளத்தால் கள்வேகம் எனல்” என்ற குறல் மூலம் விளக்கியுள்ளார்.

## கண்டுபிடியுங்கள்




கேள்வி குறியிடப்பட்ட இடங்களில் எத்தனை எத்தனை வட்டங்கள் வரவேண்டும்.

## அல்வா எடிசன்



கோழிக்கு உதவி செய்யவெண்டு சொல்லி, அடைவைச்ச முட்டைக்கு மேலை ஏறி இருந்ததாலை தகப்பனிட்டை நல்லா வாங்கிக் கட்டினாராம் ஒருத்தர். அவர் வேறை யாருமில்லை. உந்த ‘மின்குமிழை’ கண்டு பிடிச்சாரே அந்த ‘எடிசன்’ தான். நீங்களும் சிலவேளை இப்பிடி ‘உதவிகள்’ செய்து போட்டு ‘நைசா’ நழுவி இருப்பியள் என்ன. ஆனா பாவம் இவர். ‘கையும் கழவுமா’ பிடிபட்டுப் போனாராம். பிறகென்ன சொல்லவும் வேணுமே.

சரி இதேடை பாவம் பார்க்கிற ‘பல்லவி’யை முடிச்சுக்கொண்டு ‘சரணத்துக்கு’ வருவம் என்ன. இந்த ‘தோமஸ் அல்வா எடிசன்’ (இதுதான் அவரின்ரை முழுப்பெயராம்.) இருக்கிறா ரெல்லோ, இவர் முதன் முதல் கண்டு பிடிச்சது மின்வாக்குப் பதிவுக் கருவி(Electric Vote Recorder) தானாம். அட சொல்ல மறந்து போனன் பாருங்கோ, இவர் தன்ரை சின்ன வயசிலை ஒரு சின்ன மரக்கறித் தோட்டம் செய்து அந்த மரக்கறியை விக்கிறதுக்காக புகையிரதத்திலை போய் வரேக்கை சின்னதா. ஒரு சொந்தமாக ஒரு வாரப்பத்திரிகை Grand Trunk Herald) எண்ட பெயரிலே தானே எல்லாமுமாக இருந்து நடத்தி வந்தாராம். அவ்வப்போது புகையிரதத்துக்குள்ளேயே தனது ஆராய்ச்சிகளையும்செய்தாராம். இப்பிடி ஒருநாள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கேக்கை ‘பொசுபரசு’த் துண்டொன்று பெட்டிக்குள்ள விழுந்து தீப்பிடிக்க, சாரதி தீயை அணைச்சுப் போட்டு இவரைத் துரத்திப்போட்டாராம். அண்டையிலையிருந்து பத்திரிகைத் தொழிலை விட்டுப்போட்டு, தனது ஆராய்ச்சியில் முழுக்கவனத்தோடு ஈடுபட்டாராம். இதுக்குப் பிறகுதான் இவற்றைக் கண்டு பிடிப்புகளாக, ஒலிப்பதிவுமுறை இசைப்பெட்டி(Phono graph) இதை ‘கிராமஃபோன்’ என்று அழைப்பதுண்டாம். மற்றும் வெண்சுடர் விளக்குக் குமிழ் (Incan descent Light Bulb) மின்சுடர் விளக்குகள்(Electric arc Lamps) உரைப் பதிவுப் பொறி (Dictating Machine) படியெடுப்புப் பொறி (Mimeograph Machine), சேமக் கலம் (Storage Batterg) என்று போகிறது இவரின் சாதனைப் பட்டியல்.

இவரின்ரை புகழ்பெற்ற அறிவியல் கண்டு பிடிப்பாம், ‘‘காற்றில்லாத வெற்றிடத்தில் ரெண்டு கம்பி ஒன்றை ஒன்று தொடாட்டிலும்அதுகளுக்கூடாக மின்பாயும்” என்பது. இதுதானாம் பிறகு ‘வெற்றிடக் குமிழ்’ (Vacum Tube) கண்டு பிடிக்கவும் காரணமாயிற்றாம்.

ஆக, இதெல்லாத்தையும் கண்டு பிடிச்ச இந்த மனுசன், உங்களிட்டைத்தான் ஆரோ ஒராளிட்டை மிச்சத்தையும் கண்டுபிடிக்கச் சொல்லிப்போட்டு 1931ம் ஆண்டே செத்துப் போனாராம்! அது ஆரெண்டு நான் கண்டு பிடிச்சா, என்ரை பேனைக்கும் பேப்பருக்கும் இடையிலை வைச்சு நசிச்சுப் போடுவன். கவனம். -கல்யாணி-

## அறிந்து கொள்ளுங்கள்

(01) மண்ணெய்யில் வைக்கப்படும் இரண்டு உலோகம் எது?
(02) புகையிலையில் உள்ள இரசாயனப் பொருள் எது?
(03) கண்ணின் சுவர்கள் எப்பொருளால் ஆனது?
(04) கண்ணிலிருந்து மூளைக்கு செய்திகளை எடுத்துச்செல்லும் நரம்பின் பெயர் என்ன?
(05) எத்தனை வியர்வைச் சுரப்பிகள் உள்ளன?
(06) நாட்டின் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற ஆண்டு எது?

(01) [illegible]
(02) [illegible]
(03) [illegible]
(04) [illegible]
(05) [illegible] 66 [illegible]
(06) 1960-12-01

## ரதனும் சுதனும்



**ரதன்: தும்மும் போது நாம் கண்களை மூடிக் கொள் வதேன்?**

சுதன்: நம் மூச்சுக் குழாயில் ஏதேனும் ஒரு வெளிப்பொருள் சென்றாலோ அல்லது உறுத்தல் ஏற்பட்டாலோ அங்குள்ள கோழைப்படலம்அந்நியப் பொருளின் மீது கோழையைச் சுரந்து அதனை மூச்சுக் குழாயிலிருந்து அதிவேகத்தில் வெளியேற்றும். இந்த அனிச்சை செயலைத்தான் நாம் தும்மல் என்கின்றோம்.

தும்மல் வரும்போது முகத்தசைகள் இறுக்க மடைகின்றன.மேலும் கண்களைப் பாதுகாக்க இமைகள் மூடிக்கொள்கின்றன. தொடர்ந்து தும்மல் வருவது நீடித்தால் கண்ணீர் சுரப்பிகள் நீரைச் சரந்து கண்களை ஈரப்பதத்துடன் வைத்திருந்து அதிர்ச்சியிலிருந்து காக்கின்றன.

## அஞ்சலி செய்வோம்

தங்கை தம்பி எல்லோருமே
சேர்ந்து வாருங்கள்
மாவீரர் கல்லறைக்கு
கூடிவாருங்கள்

அக்கா அண்ணா அவர்களையும்
கூட்டி வாருங்கள்
சின்னச் சின்ன பூக்கள் கொஞ்சம்
எடுத்து வாருங்கள்

அம்மா அப்பா எல்லோரையும்
அழைத்து வாருங்கள்
தீபம் ஒன்றைக் கையில் ஏந்தி
எடுத்து வாருங்கள்

சட்டங்கள் தவிர, வேறெதற்கும் கட்டுப்படாமல் வாழ்வதே, சுதந்திர வாழ்வு. - வால்ட்டேயர்







# குதூகலம்

## குதிரைப் பந்தயம்



பாரசீக மன்னர் ஒருமுறை பாரிசுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது குதிரைப் பந்தயம் பாரிஸில் வெகு சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. நண்பர்கள் "குதிரைப் பந்தயம்பார்க்கலாம் வாருங்கள்" என்று மன்னரை அழைத்தார்கள்.

மன்னர் சிரித்துக்கொண்டே கூறினார். "ஒரு குதிரை இன்னொரு குதிரையைவிட வேமாக ஓடும் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம் தானே? அவற்றில் எந்தக் குதிரை வேகமாக ஓட வேண்டும் என்று ஏன் கவலைப்பட வேண்டும்?"

## வாத்து, பாம்பு, மூடன்

ஆங்கில எழுத்தாளர் சார்லஸ்லேம்ப் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்தில் இருந்த ஒருவன் "உஸ்...ஸ்...ஸ்" என்று இரைச்சல் போட்டான். சார்லஸ்லேம்ப் 'சட்' எனப் பேச்சை நிறுத்தினார். கூட்டம் எங்கும் ஒரே அமைதி

"எனக்குத்தெரிந்தவரை இப்படி இரைச்சல்செய்வது, மூன்றே மூன்றுதான். வாத்து, பாம்பு, மூடன், இம்மூன்றில்தான் எந்தவகையைச் சேர்ந்தவன் என்று வந்து தெரிவித்துக்கொள்ளலாம்" என்று கூறிவிட்டு லேம்ப் தன் பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடங்கினார்.

## தாடியின் பயன்



ஜார்ஜ் பெர்னார்ட்ஷா தான் இறக்கும் வரையில் தாடி வைத்திருந்தார். 'எதற்காக அவர்தாடி வைத்துக் கொண்டிருக்கிறார்?' என்று ஒரு சந்தேகம் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு ஏற்பட்டது.

ஒருநாள் அந்த நிருபர் ஷாவை அணுகி. "எதற்காகத் தாங்கள் தாடி வைத்துக்கொண்டிருகிறீர்கள்? . தாடி வைத்துக்கொண்டிருப்பதால் இலாபம் உண்டு என்று தாங்கள் எண்ணுகிறீர்களா?" என்று கேட்டார். "சந்தேகமில்லாமல்" என்றார் ஷா. 'எப்படி" என்று கேட்டார் நிருபர்.

"இளைஞரே ! நான் சவரம் பண்ணிக்கொள்வதற்காகச் செலவிட்டிருக்க வேண்டிய நேரத்தில் நிச்சயமாக ஒரு நாடகமேனும் எழுதியிருப்பேன் இல்லையா?"

## துரதிஷட நிகழ்ச்சியும் துயர நிகழ்ச்சியும்



ஒரு நாள் நண்பர் ஒருவர் பெஞ்சமின் டிஸ்ரேலியைப் பார்த்து. துரதிஷட நிகழ்ச்சிக்கும். துயர நிகழ்ச்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்று கேட்டார்.

"வில்லியம் கிளேஸ்டன் தேம் ஆற்றில் விழுந்துவிட்டால் அது துரதிஷட நிகழ்ச்சியாகும்" நண்பர் விழித்தார்.

"அவரை எவரேனும் காப்பாற்றிவிட்டார்கள் என்று சொன்னால் அது துயரநிகழ்ச்சியாகும்" என்று முடித்தார் டிஸ்ரேலி டிஸ்ரேலிக்கும்.கிளேடட்ஸ் டனுக்குமிடையே அரசியல் துறையில் கடும் பகை இருந்து வந்தது.



அடங்காப்பற்று வன்னி மண்ணில் இறுதித் தமிழ் மன்னன்

# மாவீரன் பண்டாரவன்னியன்

## வெற்றி விழா - 25.08.2002

முல்லைத்தீவில் ஆங்கிலேயரின் கோட்டையை அழித்து வெற்றி கொண்ட தினமான 25.08.2002 அன்று அவ் வீரனின் வெற்றிச் சாதனையைப் புகழ்ந்து கொண்டாடும் மாபெரும் வெற்றி விழாவில் அனைவரும் இணைவோம்.

### மாலை நிகழ்வுகள்

*காலம் – 25. 08. 2002*
*நேரம் – பி.ப. 3.00 மணி*

- கற்சிலைமடு கற்பொறிப்படியிலிருந்து மாவீரன் பண்டாரவன்னியனின் உருவப்படம் மங்களவாத்தியம் இசைக்க மரியாதை அணிவகுப்புடன் கற்சிலைமடு பிரதான வீதியில் புதிதாக நிறுவப்பட்ட உருவச்சிலை அமைந்துள்ள இடத்திற்கு எடுத்து வருதல்.
- பொதுச் சுடரேற்றல்
- தமிழீழ தேசியக் கொடியேற்றுதல்
- பண்டாரவன்னியன் கொடியேற்றல்
- உருவச்சிலை திரை நீக்கம்
- உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தலும், மலர்வணக்கமும்.

### இரவு நிகழ்வுகள்

*இடம் – புதிதாக நிறுவப்பட்ட உருவச்சிலை வளாகம்*
*காலம் – 25. 08. 2002*
*நேரம் – மாலை 7. 30 மணி*

- பொதுச் சுடரேற்றல்
- அகவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- மங்கள வாத்திய இசை
- வரவேற்பு நடனம்- நெறியாள்கை ஆசிரியர் செல்வி பேரின்பநாயகி சிவகுரு அவர்கள்
- மாவீரர் புகழ் பாடுவோம்- நெறியாள்கை வசந்தமாலா அவர்கள்
- சிறப்புரைகள்
- கோட்ட, வலய மட்டப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவருக்கு பரிசிலும், சான்றிதழும் வழங்குதல்.
- கௌரவிப்பு நிகழ்வு
- நாட்டிய நாடகம் - நெறியாள்கை ஆசிரியர் செல்வி பேரின்பநாய சிவகுரு அவர்கள்
- வலய மட்டப் பேச்சுப் போட்டியில் முதலாமிடம் பெற்ற மாணவர்களின் பேச்சு
- சங்க நாதம் - நெறியாள்கை பேபி ஆசிரியை
- கவியரங்கம் - தலைமை கவிஞர் நாவண்ணன் (தலைப்பு பண்டாரவன்னியனைக் கொண்டாடும் நாளினிலே...
- பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து - முள்ளியவளை அ.த.க. பாடசாலை மாணவர்கள் நெறியாள்கை என். எஸ். மணியம் அவர்கள்
- பண்டாரவன்னியன் நாடகம் - பரந்தாமன் கலாமன்றம் கற்சிலைமடு எழுத்துருவாக்கம் முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்கள் நெறியாள்கை இரா. விஜயரட்ணம் அவர்கள்
- நன்றியுரை

**வீரம் செறிந்த வன்னி மண்ணின் சுதந்திரம் காக்க வாள்கொண்டு போரிட்டு வெற்றி தந்த வன்னியின் இறுதித் தமிழ் மன்னனின் வெற்றி விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

(2342)

**பண்டாரவன்னியன் அறங்காவலர் கழகம்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

## 6ம் மாத நினைவலைகள்



தாயின் மடியில் 15 - 19 - 1977

தாயக மண்ணில் 24 - 02 - 2002

**கப்டன் சுடர்மொழி**
**[இராஜகோபாலன் சுஜீவன்]**

வண்ண மலராய்
வனப்புடன் மலர்ந்தவனே
மணங்கமழும் முன்னர்
மண்டியிட்டுக் கதறுகிறோம்
மண்ணில் நீ பிறக்க வேண்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்
சு. விஜயநாதன்(சிறியதந்தை),
மலேரியாத்தடை பகுதி
உத்தியோகஸ்தர், கிளிநொச்சி.

யாழ், காங்கேசன்துறை
(2329)

W Microsoft Word - Document1
File Edit View Insert Format Tools Table Window Help

# ADVANCER

✡ மறுதோன்றி (offset) மயப்படுத்தலால் வேலை வாய்ப்பை இழப்பதைவிட வாருங்கள் D.T.P படிப்போம்.

✡ அரச /தனியார் நிறுவனங்களில் கணினி மயப்படுத்தலா, Ms office தானே உடனேயே கற்றிடுவோம்.

✡ கணினி மொழியில் புலமை பெறுவோம் v.bயில் மென்பொருள் தயாரிப்போம்.

- Diploma in Desktop Publishing
- Diploma in Ms -Office Application
- Certificate Course in Visual Basic

**கணினி பயிற்சி நிறுவனத்தின் புதிய கணினி வகுப்புக்கள்**

ஆகிய பாடநெறிகள் யாவும் 01.09.2002 ஞாயிறு காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. பயிற்சிகள் யாவும் நவீன **Pentium** கணினிகளில் மேற்கொள்ளும் வசதி உண்டு. எனவே 31.08.2002 முன்னர் அலுவலக நேரத்தில் வந்து முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**Advancer** கணினி பயிற்சி நிறுவனம் , முல்லை வீதி புதுக்குடியிருப்பு, முல்லைதீவு

*(2124)*

Start | Adobe PageMaker 6.5 -... | res://C:\WIN98\SYST... | Microsoft Photo Editor | Microsoft Word - D... | 8:10 Francis

# இலத்திரனியல் பயிற்சி நெறி

(TV, Redio, VCR and Telephone)

## கணினி விற்பனை பிரதிநிதிகள்
**(கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்)**

மேற்படி பயிற்சி நெறியை பயில விரும்புபவர்களும், பிரதிநிதிகள் பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்புபவர்களும் கீழுள்ள முகவரிக்கு 01-09-2002க்கு முன் ரூபா30 காசுக்கட்டளை (வவுனியா தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக) அனுப்பி விபரத்தை பெற்றுக்கொள்ளவும் அல்லது நேரில் விபரத்தை பெற முடியும்.

**விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி**

**பணிப்பாளர் [பயிற்சி]**
**ஜப்பான் எலக்ரொனிக் என்ஜினியர்ஸ்,**
**இல28, புகையிரத நிலைய வீதி,**
**வவுனியா.**

(சி.6979)

## வரிவிளம்பரம்

**பல்கட்டுதல்**

பல்கட்டுதல், பல்கிளிப் போடுதல் நல்ல முறையில் நியாய மான விலையில் செய்து கொள்ள லாம். ஒளிச்சுடர் பல்கட்டுமிடம், மொறாயில், புதுக்குடியிருப்பு. (2102)

**மூக்கு கண்ணாடி**

தரமான மூக்கு கண்ணாடிகளை காலதாமதமின்றி கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஒளிச்சுடர் மூக்குகண்ணாடி அகம் (மொறாயல்), புதுக்குடியிருப்பு. (2101)

## மரண அறிவித்தல்

**சந்தியாப்பிள்ளை திரேசம்மா [இராசகன்னி]**

விடத்தல் தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் திருவாளர் சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி திரேசம்மா (இராசகன்னி) 22-08-2002 வியாழக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் நல்லடக்கம் 23.08.2002 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு விடத்தல் தீவு சேமக்காலையில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.ச.சாள்ஸ் (மகன்)
A.V உரிமையாளர்

(2341)

**தரமான முறையில் உங்கள் வேலைகளை ஓவ்செற் முறையில் செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:-**

# அழகன் பதிப்பகம்

முதன்மைச்சாலை, கிளிநொச்சி

# நேர்நோக்கு

## இனவாத கூக்குரல் எடுபடாது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றகரமான நிலையில் சென்று கொண்டிருப்பதாக பலதரப்பினரும் குறிப்பிட்டு வருகின்றனர். குறிப்பாக தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திகதிகள் குறிக்கப்பட்டமை சமாதான முயற்சிகளின் மிக முன்னேற்றகரமான ஒரு படி என உலகநாடுகள் பலவும் கூறுவதுடன் அதனை வரவேற்றும் உள்ளனர்.

இலங்கையிலும் கூட சமாதான விரும்பிகள் பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்கப்பட்டமையையிட்டு மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக தீவிரமாக நடைபெற்று வந்த தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கும் நோக்கத்துடன், சிறிலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்ட இராணுவ முஸ்தீபுகளால் சீர் குலைந்து போயிருக்கும் பொருளாதாரத்தை மறுசீரமைப்புச்செய்ய, சமாதானப் பாதையில் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஒரே வழி என்பது இப்பொழுது வலியுறுத்தப்பட்டு வரும் விடயமாகும்.

இதனை இப்பொழுதுள்ள நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ எதிர்க்க முடியாத நிலையிலேயே பிரதான எதிர்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளது. அதாவது சமாதானப் பாதையே ஒரே வழியென்பது பொதுசன ஐக்கிய முன்னணிக்கு தெரியாத தொன்றல்ல ஆயினும், இனவாதக் கூக்குரல் எடுபடாது. எதிர்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதை அது விரும்பவில்லை. ஆனால் அதனை வெளிப்படையாக எதிர்க்கும் சூழ்நிலை இல்லை. என்பதனால் பொதுசன ஐக்கிய முன்னணி அடக்கி வாசிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது.

ஆனால் இரண்டாவது பிரதான எதிர்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி அதனை வெளிப்படையாக எதிர்க்கும் முடிவிலேயே இருக்கிறது. எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டு வருகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் மட்டுமல்ல அதற்கு முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்திலேயே சமாதான முயற்சிகளை ஜே.வி.பி. எதிர்த்தது கடந்த தேர்தலின் போது ஐக்கிய தேசிய முன்னணி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சமாதான வழியில் முயலப் போவதாக வாக்குறுதி அளித்த போது யானை-புலி கூட்டு என இனவாதப் பிரச்சாரத்தில் அது இறங்கியது.

எவ்வாறாயினும் மக்கள் ஆதரவுடன் தற்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்து நேரான வழியில் சிந்தித்துச் செயற்பட ஜே.வி.பி. தயார் இல்லை என்பதையே இன்றைய அதன் போக்குக் காட்டுகிறது. புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் ஈழக்கோரிக்கையை கைவிட வேண்டும் என பழைய பல்லவியுடனேயே அது இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகள் கடந்த காலத்தில் தமிழ்மக்கள் நடத்திய போராட்டம் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சி சிறிலங்காவின் இன்றையநிலைமை போன்றவற்றுக்கு ஏற்றவாறு விடயங்களை அது கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது கடந்த காலத்தில் சிங்கள அரசியல்வாதிகள் எடுத்த இனவாத நிலைப்பாடே தமிழ்மக்கள் தமது உரிமைக்காக தீவிரமாகப் போராட வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது என்பதை இவர்கள் புரிந்து கொள்வதாக இல்லை. அல்லது அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு எதிர்காலத்திலும் இனவாதப் பிரச்சாரமே தம்மை அதிகாரத்திற்குக் கொண்டுவருமென்ற கற்பனை வாதத்தில் அவர்கள் உள்ளனர்.

கடந்த கால வரலாறு இனவாதப் பிரச்சாரத்திற்கு எடுபடக்கூடிய நிலையில் மக்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. 1994இல் இனவாதப் பிரச்சாரம் செய்து சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வரவில்லை. அவர் போட்ட சமாதான தேவதை வேடமே அவருக்கு ஆட்சிக் கதிரையைத் தேடிக்கொடுத்தது. பின்னர் சமாதானத்திற்கு எதிராக அவர் நடந்து கொண்டமையே அவர் ஆட்சி பறிபோகவும் காரணமாகியது.

அதுபோலவே சுமார் 10 வருட காலம் யுத்தம் நடத்திய ஐக்கிய தேசியக்கட்சி 2001ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் சமாதான ரீதியில் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடப்போவதாக அளித்த வாக்குறுதியே அதற்கு மீண்டும் ஆட்சி கிடைக்க வழி கோலியது. அந்த முயற்சியில் அது கண்டுவரும் முன்னேற்றம், இன்று அந்த ஆட்சியை நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் அளவிடமுடியாத அதிகாரங்களில் இருந்தும் பாதுகாத்து வருகிறது.

எனவே இனவாதப்பிரச்சாரமும் புலிகளை ஒழித்துக் கட்டுவது என தொடர்ந்தும் கூக்குரலிடுவதும் நடைமுறையில் சிங்களமக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக இன்று இல்லை. தொடர்ந்த யுத்தத்தினால் சிறிலங்கா சந்தித்துள்ள பொருளாதாரச் சீரழிவுகள் சிங்கள மக்களைப் பெரிதும் பாதித்துள்ளன.

அதேவேளை யுத்தமென்ற பெயரில் கடந்தகால ஆட்சியாளர்கள் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் வளப்படுத்தியுள்ளமையை மக்கள் புரிந்து கொண்டு விட்டனர். தமிழ் மக்கள் குறித்தும் தமிழ்மக்கள் ஏன் இவ்வாறான போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது? என்பது குறித்தும் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமை சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கும் ஏற்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதப்பிரச்சாரம் சிங்களமக்கள் மத்தியில் எடுபட்டிருக்கலாம். ஆனால் இன்று நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுவருகிறது.

இதனைப்புரிந்து கொண்டு ஜே.வி.பி. தனது போக்கை மாற்றிக்கொள்ளுமானால் மக்களின் ஆதரவை அது பெற்றுக்கொள்ளக்கூடும். அதாவது இனவாதக் கூக்குரலைக் கைவிட்டு சிறிலங்காவின் பொருளாதார மீட்சிக்கு அது சரியான வழியைக் காட்டுமாயின் அது ஜே.வி.பி.யின் செல்வாக்கை உயர்த்தக்கூடும்.

-வேலவன்

## வாத்தியார் வார்த்தை

'தாய்லாந்தில் நடை பெறப்போகும் பேச்சுவார்த்தைகளுக்கு ஓரளவுக்கு நாள் குறிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாடுகள் பலவும் அதனை வெகுவாக ஆதரித்து அறிக்கைகளை விடுத்து வருகின்றன....'

'இது எமது மக்களின் பிரச்சினை வெறும் பயங்கரவாதப் பிரச்சினையென கடந்த பொ.ஐ.முன்னணி அரசு சர்வதேச ரீதியில் மேற்கொண்ட சகல பிரசாரங்களும் படுதோல்வியடைந்துள்ளதையே எடுத்துக்காட்டுகிறது.'

' 'எமது போராட்டம் நியாயமா்னதொரு அரசியல் போராட்டம் தான்... அதனை அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்க முடியும்என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளதாலேயே இதற்கு இன்று அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் ஆதரவை நல்க முன்வந்துள்ளன.'




'அரசாங்கத்தைக் கவிழ்க்க வியூகங்களை மேற்கொள்ளும் சந்திரிகாவும் வேறுவழியின்றி சமாதான முயற்சிகளைத் தான் ஆதரிப்பதாகக் கூறத் தொடங்கியுள்ளார்'

'கதிர்காமர் தான் உலகளாவிய ரீதியில் மேற்கொண்ட முயற்சிகள் பொய்ப்பிரசாரங்கள் பிசுபிசுத்து போனதில் அலமலந்து போயுள்ளார்.'

'ஒரு நியாயமான போராட்டம் என்பது ஏதோ ஒரு கட்டத்தில் உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டே ஆகும் என்ற வரலாற்று நியதி மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டு வருகிறது.'

'வரலாறு தோற்கடிக்கப்பட்டதாக வரலாறே இல்லை.. என்ன நான் சொல்லுறது சரிதானே...?'

## படமும் தகவலும்



சிறிலங்காவுக்கு முதன்முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியில், நான்கு தசாப்தங்களின் முன் உயரப் பாய்தலில் தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்த தமிழரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கமும் கடந்தவாரம் ஆசிய விளையாட்டுப்போட்டியில் இரு தங்கப் பதக்கங்கள் வென்ற சுசந்திகா ஜெயசிங்கவும், கொழும்பில் 14வது ஆசிய விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்து வைக்கும்காட்சி.



21 அங்குல நீளமான மனித சிறுகுடலில் உள்ள கட்டிகள்,புண்கள் மற்றும் எவராலும் கண்டுபிடிக்க முடியாத நோய்களை உள்ளே ஊடுருவிக் கண்டுபிடிக்க வல்ல MA என்டோஸ் கோப் (Endos cobe)என்ற கூட்டுக் குளிசை வடிவ 'கமராவை' ஒரு பெண் விழுங்கப் போவதைபடத்தில் காணலாம். இந்த நவீன மருத்துவ தொழில் நுட்பம் இப்போது யூத மருத்துவ மனைகளிலும் அமெரிக்க பல்கலை ககழக மருத்துவமனைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.



அருங்காட்சியகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள - கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி அவரது பிறந்த நாளுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்களைப் பார்வையிடும் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன். அங்கிருந்த வாள் ஒன்றினை எடுத்து பார்வையிடுகின்றார். அருகில் அவரது உதவியாளர் ஒருவரும் நிற்கின்றார்.



1980-1988ஆம் ஆண்டு காலப்பகுதியின் இரான்-இராக்யுத்தத்தின் ஆண்டு நினைவு நாளில் இராக்கிய பெண்கள் படையணியினர் அணிவகுத்துச் செல்லும்காட்சி. இராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கா அச்சுறுத்தலை எதிர்கொள்ள இராக் மக்கள் தயாராக உள்ளதாகவும் மிரட்டல்களுக்குப் பணியப்போவதில்லை என்றும் கூளுரைத்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.